Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් செப்.01-07, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 475

## ஜனாதிபதியின் சிறகுகளை வெட்டும் முயற்சி

## தடுமாறும் தமிழ்க் கூட்டமைப்பு



## ப லி க் கு மா?



## அஜித்துக்கு எதிராக களமிறங்கும் சூர்யா!

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## இந்து சமய வளர்ச்சியும், குருமாரது சேவையும்

சமயப் பாதுகாப்பு எவ்வளவு முக்கியமோ அந்தளவு சமய வளர்ச்சியும் முக்கியம். தோட்டம் நன்கு பயிர் செய்யப்படாமல் வேலி மட்டும் இருப்பதால் பயனில்லை.

அந்நிய கலாசாரம் எனும் விஷம் நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் புகுந்து நம்மைச் சீரழித்து வருகிறது. ஏனெனில் நம் கல்வி முறை அப்படி. பெரியவர்களிடமும், சிறியவர்களிடமும் தெய்வீக உணர்வைக் காண்பதே அரிதாகவுள்ளது. ஆபாசமான விடயங்களில் அனைவரது கருத்தும் அலைபாய்கிறது. அற்ப ஆசைகளை நிறைவேற்றுவதற்காக மதம் மாறுகின்றவர்களும் நம்மவர்களிடையே இருக்கவே செய்கிறார்கள். ஏன் இந்த இழிநிலை?

நமக்கு நமது சமயத்தைப் பற்றிய அறிவும், ஆசாரமும் இல்லாததே காரணம். நாம் நமது சமயச் சடங்குகள் ஏன் செய்யப்படுகின்றன? என்ற அறிவில்லாதவர்களாக இருக்கின்றோம்.

சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர்-06.



## தண்ணீரைக் கடக்கும் போது...

“நீ தண்ணீரைக் கடக்கும் போது, நான் உன்னோடு இருப்பேன்” (ஏசாயா 43:2)

ஆபிரிக்காவில் ஒரு இளவரசன் பட்டம் சூட்டப்படுவதற்கு முன்பு இரவில் அங்குள்ள பயங்கரமான பெரும் காடு ஒன்றைக் கால்நடையாகக் கடக்க வேண்டும். இப்படியாக ஒருமுறை இளவரசன் பட்டம் பெறுவதற்காகப் பயங்கரமான, கொடிய மிருகங்களும் விஷப் பாம்புகளும் நிறைந்த காட்டிற்குள் இளவரசனை அனுப்பினார்கள். இளவரசனும் தைரியமாக முன்னேறிச் சென்றான். அந்தக் காட்டின் அடுத்த பகுதிக்கு வந்தடைந்தபோது ஒரு பெரிய உண்மையைக் கண்டான். அவனுக்குத் தெரியாமல் அவனுடைய தகப்பனார் அவனுக்குப் பின்பாக உறங்காமலும், சோர்வடையாமலும் கையில் அம்பு, வில் ஏந்தி மெதுவாக வந்துகொண்டிருந்தார்.

“மகனே! உன்னைத் தனியே அனுப்ப மனம் ஒப்புக்கொள்ளவில்லை. உன்னைக் காக்கும்படி, உனக்குப் பின்பாக நடந்து வந்துகொண்டிருந்தேன். நீ கலங்காமல் முன்னேறிச் சென்றதைக் கண்டு மகிழ்ந்தேன்” என்றார் தகப்பன். மகனின் உள்ளமோ ஆனந்தப் பரவசமடைந்தது.

நம்முடைய பரமபிதா நம்மேல் அன்பும் அக்கறையும் உள்ளவராய் நம் கரங்களைப் பிடித்து, “மகனே, மகளே, நீ தண்ணீரைக் கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன்” என்று வாக்குத் தத்தம் பண்ணுகிறார். நம்முடைய துன்பம், துயரம், வேதனை, கஷ்டம், தேவைகளின் மத்தியில் தேவாதி தேவன் நம்மோடு நடந்து வருகிறார் என்பதில் சந்தேகமேயில்லை. நம்மைக் கரம் பிடித்து நடத்துகிற தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்.

சகோ. டி. ஜேசுராஜா, பொகவந்தலாவை.

## ஐந்தும்–ஐந்தும்

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறுவார்கள், “என் சமுதாயத்தவர்கள் மீது ஒரு காலம் வரும். அது சமயம் அவர்கள் ஐந்தை விரும்பி ஏற்பர். ஐந்தை வெறுப்பர். அவை,

* உலகில் உயிர் வாழ்வதை விரும்புவர்; இறந்துபோவதை வெறுப்பர்.
* செல்வத்தை விரும்புவர்; அது பற்றிய கேள்விக் கணக்கை வெறுப்பர்.
* உயர்ந்த மாளிகையைக் கட்டுவதற்கு விரும்புவர்; மண்ணறையை மறந்துவிடுவர்.
* உலகத்தை விரும்புவர்; மறுமையை மறந்துவிடுவர்.
* படைக்கப்பட்டவைகளை விரும்புவர்; படைத்தவனை மறந்துவிடுவர்.

(ஆதாரம்: இஸ்லாம் கூறும் இனிய அறிவுரைகள்)

முஹம்மது ஹஸனி, புதிய வீதி, கல்முனை-07.

# கவிதைப் போட்டி இல.472

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### பரிசுக்குரிய கவிதை

### தீர்த்திடுவார்

தாய்மடி தஞ்சமின்றி -தரணியிலே
போர் பஞ்சம் விரட்டிய சேய் -இவளோ
தாகத்தைத் தீர்த்திட தண்ணீரை ஏந்திடுவாள்
இவள் தனிமையின் சோகத்தை
தீர்த்திட யார் தாங்கிடுவார்...

தெ.லோஜனா - கொழும்பு-06.



### முடியுமா உன்னால்?

கொளுத்தும் வெயிலால்
குளங்களெல்லாம் வற்றிப் போக
சொட்டுத் தண்ணீரிலே
குடம் நிரப்பும் குழந்தாய்
உன்னைச் சுமந்தவளை இழந்ததாலா
தண்ணீர் குடம்
சுமக்கக் காத்திருக்கிறாய்...?

மனோ கோபாலன் - ஹப்புத்தளை.

### நிறைகுடமாகுமா?

வானத்து நிலவை
கையில் சுமக்க
ஆசைப்படும் வயதில்
நிறைகுடத்தைச் சுமக்க
நிறையும் வரை
காத்திருக்கும்
சின்னப் பூ இவள்
நாளைய உலகின்
நிரந்தர சமாதானத்திற்காய்
நிச்சயம் காத்திருப்பாள்!

துரைராஜா பரிமளாதேவி - கலஹா.

### வரட்சியின் தாக்கம்

வரண்டு விட்ட தேசத்திலே
நாளைக்கு மழைவரும் என்று
எண்ணி! எண்ணி!!
நம்பிக்கையும் வரண்டுவிட்டதாலா
பாலகனே... நீ குடம் துக்கி
தண்ணீர் சுமக்க வந்துவிட்டாய்?

மூக்கன் புனிதன் - பசறை.

### நியதி

களிமண்ணை விளையாடும் -உன்
பிஞ்சுக் கரங்களில் கண்ணே!
கலசத்தைத் தந்துவிட்டதோ -இப்
பூவுலகம் கண்ணே!

ம.ஜீவிதா - அக்கரைப்பற்று-07.

### தியாகி

குடம் நிறைகிறது நீரால்
வரட்சியால் வாடிய
கிராமத்துச் சிறுமியின்
மனமும் நிறைகிறது
சந்தோஷத்தால்!
தண்ணீருக்குத்தான்
எத்தனை தியாக மனசு:
தன்னை இழந்து தாகத்தை
தணிப்பதில்...

ஏ.எப்.எம்.றியாட் - முள்ளிப்பொத்தானை.

### பழசும் புதுசும்

அரைவயிற்றுக் கஞ்சிக்கு
ஆலாய்ப் பறப்பது
என்பது பழமொழி
ஒரு சொட்டுத் தண்ணீருக்கு
ஒலமிடுவது என்பது
புதுமொழி!

கேக்கே.டீன் - ஏறாவூர்-03.

# கவிதைப் போட்டி இல.475



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 07.09.2002

கவிதைப் போட்டி இல.475
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### வியப்பு

வேகமாக வரும் நீர்
வெற்றிடமாக உள்ள இடத்தை
நிரப்புவதை வியப்புடன்
உற்றுநோக்கும் சிறுமி
அறிவாளா- எதிர்வரும் நாட்களில்
‘வற்’ எனும் வரி இதனோடு
இணையும் என்பதை...

எஸ்.ஸ்ரீ - காரைதீவு-08.

### த(க)ண்ணீர்

சிறகிலிருந்து
பிரிந்த இறகு இன்று
தாயாக மாறி,
தண்ணீர் குடம்
சுமக்க,
கண்ணீரில்...
தத்தளிக்கின்றதோ?

க.பரமேஷ்வரி - தலவாக்கலை.

### அநாதை

தாயில்லாத் தவிப்போடு
தண்ணீர் நிரப்ப வந்த இவள்
ஒருவேளை கண்ணீரால்தான்
பாதிக்குடத்தை
நிரப்பினாளோ?

ஆர்.சிறீதரன் - அராலி.

### சம(ா)தான அளவு

எடுப்பதோ
குடமளவு
கிடைப்பதோ
துளியளவு
நம் நாட்டு
சமாதானத்தின்
சந்தோஷ...
அளவைப் போல!?

வாஹிட் குத்தூஸ் - பதுளை.

### பாவிகள்!

உன்னைத் தூக்கிக்
கொஞ்ச வேண்டிய வயதில்
உன்னை
தூக்க வைத்துவிட்டார்களே!
உன்னால் தூக்க முடியாத
நீர்க்குடத்தை!

அ.சந்தியாகோ - கண்டி.

# உங்கள் பக்கம்

## கணித விதியை மாற்றிய மலையகத் தலைவர்கள்

அனேகமாக இம்முறையும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைக்குச் சாவு மணி அடிக்கப்படும் என்பது நிச்சயமாகிவிட்டது.

மலையக மக்களின் இருபெரும் தலைவர்களும் ஒருவரை ஒருவர் எப்படி அம்பலப்படுத்தலாம், அரசியல் ரீதியாகத் தோற்கடிக்கலாம் எனச் சிந்தித்துக் காய் நகர்த்திக்கொண்டிருக்கிறார்களே தவிர, தாங்கள் மலையக மக்கள் சமூகத்தின் பிரதிநிதிகள் என்பதையோ, தமது சமூகத்தின் வாழ்நிலையை ஓரளவேனும் உயர்த்த வேண்டுமென்பதையோ சிந்தித்துப் பார்ப்பதாகத் தெரியவில்லை.

151 ரூபா வரையிலான சம்பள உயர்வு கோரி ஆறுமுகன் தொண்டமான் தொழிற்சங்க நடவடிக்கையொன்றை ஆரம்பித்தார். அந்த முயற்சிக்கு எப்படியாவது குழிபறித்தே தீர்வது என்று வரிந்து கட்டிக்கொண்டு, “151 ரூபா என்ன, 180 ரூபாவை நான் பெற்றுத்தருகிறேன்” என்று இனிப்பான அறிக்கையொன்றை வெளியிட்டார் சந்திரசேகரன். இது நடக்காத காரியம் என்று மக்களனைவருக்கும் தெரியும். ஆனால், ஆறுமுகனின் முயற்சிக்கு ஆப்பு வைத்து அவரைப் புறந்தள்ளவும், மலையகத் தொழிலாளர்களின் சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தைக் கைவிடச் செய்து அரசாங்கத்திடம் ‘நல்ல பெயர்’ வாங்கவும் சந்திரசேகரனுக்கு இந்த 180 ரூபாக் கனவு பெரிதும் உதவியது.

151 ரூபா பெறுவதே முயற்கொம்பு என்பதை அறிந்திருந்த ஆறுமுகன் தொண்டமான், சந்திரசேகரன் 180 ரூபா என்றதும் உடனே ‘இதுதான் சாட்டு’ என்று தனது போராட்டத்தை வாபஸ் பெற்றுக் கைகழுவிக்கொண்டார்.

180 ரூபா பெற்றுத் தருவதாக ஒருவர் கூறும் போது 151 ரூபாவிற்காக ஏன் போராட்டம் நடாத்த வேண்டும் என்ற கேள்வி எழலாம். இத்தகைய தாக்கங்களால் இரண்டு அமைச்சர்களும் ஒருவர் மாறி ஒருவர் வீராப்பு பேசி, கண்டன அறிக்கைகள் விட்டுக் காலத்தைக் கடத்த முடியுமே தவிர, மலையக மக்களுக்கு எவ்வித விமோசனத்தையும் பெற்றுக் கொடுக்க முடியாது.

தேசியப் பிரச்சனையிலும் வடக்கு-கிழக்கு மக்களின் போராட்டத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அமைச்சர் சந்திரசேகரன், அவருக்குச் சம்பந்தமேயில்லாத மலையக மக்களின் சம்பளப் பிரச்சனையிலும் மூக்கை நுழைத்து, கிடைக்கவிருந்த 151 ரூபாவையும் ஏன் கெடுத்தார்?

இறுதியில் ஆறுமுகன் தொண்டமான் 151 ரூபா பெற்றுத் தந்தார். சந்திரசேகரன் 180 ரூபா பெற்றுத்தந்தார். இரண்டையும் சேர்த்து முன்னர் கிடைத்த 118 ரூபா நாளாந்த சம்பளமாகக் கிடைக்கிறது.

எமது தலைவர்கள் இருவர் சேர்ந்து மலையக மக்களின் தலைவிதியை மட்டுமா, கணித விதியையே மாற்றிவிட்டார்கள்! 151 + 180 = 118

என்.இராமசாமி, டிக்கோயா தோட்டம், டிக்கோயா.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# வாசக[ர்] சாலை

### இனிய முரசே!

பலத்த போட்டிகள் தோன்றியும் ஆண்டு பத்தினை நீ கடந்தும் வீறு நடைபோடுகின்றாய் என்றால் அது உனக்குக் கிடைத்த பெரும் வெற்றி அல்லவா!வாசகர் மனங்களில் சிம்மாசனம் அமைத்த முரசே, ஆண்டுகள் பத்தென்ன நூற்றாண்டுகள் பல கடந்தும் நீ பவனிவர வேண்டும் என இதயம் குளிர வாழ்த்துகின்றேன்.

என்.நாகேந்திரன், கிழக்கு வளாகம்.



### முத்தான முரசே!

பாலர் முதல் பாட்டன் வரை அனைவருக்கும் ஏற்புடைய அம்சங்களைத் தாங்கி சிறகடிக்கும் இனிய முரசே! உள்ளடக்கமும், தன்னடக்கமும் பிரமாதம். ஆனாலும், ஒரு சிறிய ஆசை உன் பக்கங்களை விரிவுபடுத்துவாயா?

க.பிரபாகரன், கோளாவில்-01, அக்கரைப்பற்று.

### நேசத்திற்குரிய தினமுரசே!

அடுக்களை முதல் நாடாளுமன்றம்வரை நாட்டு நடப்புக்கள் அனைத்தையும் துல்லியமாகக் காட்டுவதனால்தான் நீ சிறப்படைகின்றாய். அதிலும், சிறப்பாக வாய் வீச்சுக்களால் தமிழ் மக்களின் வாக்குகளை வேட்டையாடிப் பின் தலைமறைவான தறிகெட்ட அரசியல்வாதிகளின் முகத்திரையைக் கிழித்தாயே... அந்தத் தைரியமும், துணிவும் வேறு யாருக்கு வரும்? உன்னால்தான் தமிழனின் புதிய அரசியல் தலைவர்களை மக்களுக்கு இனங்காட்ட முடியும். தொடரட்டும் உன் பணி. வேரூன்றி விழுது பதித்து பெரு விருட்சமான முரசே! உன்னை எவராலும் வீழ்த்த முடியாது.

நா.தாஸன், கொழும்பு.

### வாரம் ஒருமுறை வலம் வரும் முரசே!

உன் வசந்த வருகைக்காக
வழி மேல் விழி வைத்துக்
காத்திருக்கின்றோம்.
குறிப்பாகக் கடந்த சில
வாரங்களாக உன்னை
அலங்கரித்து வரும், ‘ஆறு
மனமே ஆறு’ யுத்தத்தின்
வடுக்கள் எம்மவர் மீது
எவ்வாறான தாக்கங்களை
ஏற்படுத்தியுள்ளது
என்பதனைக் கோடிட்டுக்
காட்டுகின்றது. இருள்
கௌவிய சோகங்களை
வெளிச்சம் போட்டுக்
காட்டுவதில் நீ கில்லாடி.
தொடர்ந்தும் உன் பணி
தொடர, எல்லாம் வல்ல
இறைவனை
இறைஞ்சுகின்றேன்.

கே.சுஜோ, தாண்டவன்வெளி, மட்டக்களப்பு.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். ‘முரசு’ அச்சாகும் வேகத்தில் அரிதாகச் சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

### தீந் தமிழ் கொட்டு முரசே!

இனிய முரசே ஆண்டுகள் பத்தினை நீ கடந்து, கடல் கடந்து வேரூன்றித் தமிழ் மணம் கமழும் அம்சங்கள் பல சுமந்து, அடிக்கல் இட்டவனாம் அற்புத ராஜாவை இழந்திட்ட போதிலும் அவனிட்ட பாதையில் வீறு நடைபோடும் உனது திறனை என்னவென்று உரைப்பது?

தி.தர்ஷி, நல்லூர்.

## நம்பிக்கை வாக்கெடுப்பில் என்ன செய்வது?

### தமிழ்க் கட்சிகளின் தடுமாற்றம்

அரசாங்கத்தின் மீது நம்பிக்கை தெரிவித்து ஐ.தே.க.வினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் நம்பிக்கை பிரேரணையை ஆதரிப்பதா இல்லையா என்பது தொடர்பில் தமிழ்க் கூட்டமைப்புக்குள் பலத்த கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன.

இந்தத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படும் போது தாம் நடுநிலை வகிக்கப்போவதாக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தை ஆதரிக்கப் போவதாக ரெலோ முதல்வர் கூறியிருக்கிறார்.

வழமைபோலவே தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவெதனையும் எடுக்காத நிலையில் கருத்துக் கூறி வருகின்றது. தமது கட்சியின் தலைவர்கள் எவரும் உள்நாட்டில் இல்லை என்பதால் இது குறித்து முடிவெதனையும் எடுக்க முடியாமல் இருப்பதாகக் கூட்டணி எம்.பி. ஒருவர் தெரிவித்தார்.

## தாய்லாந்தில் பேசும் அளவு பிரச்சனை

### மலையக மக்களுக்கு இல்லை-அமைச்சர் ஆறுமுகன்

மலையக மக்களின் பிரச்சனைகள் குறித்து தாய்லாந்தில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அவசியம் இல்லை எனத் தெரிவித்திருக்கும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் வடக்கு கிழக்கு மக்களின் அளவுக்கு மலையக மக்களுக்குப் பிரச்சனைகள் இருப்பதாகத் தான் கருதவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

தற்போது பிரஜா உரிமை இல்லாது மலையகத்தில் வசிக்கும் சுமார் ஒரு இலட்சத்து 80ஆயிரம் இந்திய வம்சாவழியின மக்களுக்குப் பிரஜா உரிமை வழங்கப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் உறுதியளித்திருப்பதாகவும் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் புலிகளுக்குமிடையில் தாய்லாந்தில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் போது மலையக மக்களின் பிரஜா உரிமைப் பிரச்சனை குறித்துப் பேச வேண்டிய அவசியமில்லை. இதனை நாட்டுக்குள்ளேயே பேசித் தீர்க்க முடியும்.

அரசாங்கம் மலையக மக்களின் பிரச்சனைகளைப் படிப்படியாகத் தீர்க்கும் என்ற நம்பிக்கை தனக்கிருக்கிறது என்றும் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

## பொலிஸ்மா அதிபர் காலமானார்

பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு காலமானார். செவ்வாய்க்கிழமை 2 மணியளவில் தனது வீட்டில் இருந்த சமயம் அவர் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

62 வயதான லக்கி கொடித்துவக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டு எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் இந்த அரசின் காலத்தில் தனது பதவியில் தொடர்ந்து நீடித்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

## குடாநாட்டில் காணாமற் போனவர்களுக்கு

### நட்ட ஈடு பெற்றுக் கொடுக்க வேண்டும் -ரவிராஜ் எம்.பி.

"யாழ்ப்பாணக் குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்டதன் பின்னர் அங்கிருந்து காணாமற் போனவர்களுக்காக அவர்களது உறவினர்களுக்கு நட்டஈடு பெற்றுக் கொடுக்க வேண்டும் எனத் தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு காணாமற் போனவர்களுக்கு நட்ட ஈடுகளைப் பெற்றுக் கொடுக்க முன்னைய காலங்களில் எடுத்த முயற்சிகளுக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியே குறுக்கே நின்று தடுத்தது என்பதை காணாமல் போனவர்களின் பெற்றோர், உறவினர் சங்க வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

காணாமல் போனவர்களுக்காக நட்டஈடு பெறவேண்டுமாயின் அவர்கள் இறந்து விட்டதாக அவர்களது உறவினர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். மரண அத்தாட்சிப் பத்திரம் போன்ற ஆவணங்களை சமர்ப்பித்தே நட்டஈட்டைப் பெற முடியும்.

காணாமற் போனவர்களைத் தேடும் முயற்சிகள் பயனளிக்காத நிலையில் அவர்கள் இறந்துவிட்டதாகக் கருதி நட்டஈடு வழங்கப்பட்டுவிட்டால், அதன் பின்னர் இந்தப் பிரச்சனையை அரசியல் இலாபங்களுக்காகப் பயன்படுத்த முடியாமல் போகும் என்பதால் காணாமற் போனவர்களின் பெற்றோர், உறவினர் நட்டஈட்டுத் தொகையைப் பெற விடாமற் கூட்டணியினரால் பல்வேறு வகையில் தடுக்கப்பட்டு வந்தனர்.

அன்று கிடைக்கவிருந்த நட்டஈட்டுத் தொகையை தமது அரசியல் இலாபத்திற்காகக் கிடைக்க விடாமல் செய்த அதே நபர்கள், இன்று நட்டஈடு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியிருப்பது மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்களாகக் காட்டிக்கொள்ளும் இவர்களின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்துகிறது என்று காணாமற் போனோரின் பெற்றோர், உறவினர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

## 'தமிழீழ' தளபதிகளுக்கு

### கொழும்பில் சத்திர சிகிச்சை

புலிகள் இயக்கத்தின் முக்கிய தளபதிகளில் ஒருவரான பால்ராஜ் கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிறுநீரக சத்திர சிகிச்சை செய்து கொண்டு வன்னி திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள சமாதான செயலகத்தினதும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினதும் அனுமதியின் பேரில் நவலோக தனியார் மருத்துவமனையில் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் தங்க வைக்கப்பட்டிருந்த பால்ராஜுக்கு கடந்த மாதம் 30 ஆம் திகதி சிறுநீரக சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவருடன் மேலும் சில புலிகள் இயக்க உறுப்பினர்களும், மகளிர் அணியைச் சேர்ந்த கமலினி என்பவரும் வந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பால்ராஜ் தங்கியிருந்த அறைக்கு அருகில் உள்ள அறைகளை, பாதுகாப்பு தரப்பைச் சேர்ந்த சிலர் வாடகைக்கமர்த்தி பால்ராஜுக்குப் பாதுகாப்பு வழங்கியதாகவும், சத்திர சிகிச்சையை முடித்துக் கொண்டு கறுப்பு கண்ணாடிகளால் மறைக்கப்பட்ட பிராடோ ரக வாகனம் ஒன்றில் அவர் வன்னி திரும்பியதாகவும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அவர் பயணம் செய்யும் வாகனத்தைச் சோதனையிட வேண்டாம் என வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு கொழும்பிலிருந்து விசேட பணிப்புரை வழங்கப்பட்டதாகவும் அந்த செய்தித்தாள் மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னதாக புலித்தேவன் என்ற புலிகள் இயக்க உயர்மட்டத் தலைவரும் சத்திர சிகிச்சை ஒன்றுக்காகக் கொழும்பு வந்து போனார்.

அடுத்ததாக மகளிர் அணியைச் சேர்ந்த முக்கியஸ்தர் ஒருவர் கொழும்பு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதியிடம் விசாரணை நடத்த

### சட்ட ஆலோசனை கோருகிறார் உள்துறை அமைச்சர்

வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காகக் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் திறைசேரியில் இருந்து பெறப்பட்ட 54 கோடி 11 இலட்சத்து 67 ஆயிரத்து 730 ரூபா நிதியைக் கையாண்ட விதத்தில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதா என விசாரணை செய்துவரும் இரகசியப் பொலிஸார், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் விசாரணை நடத்த வேண்டி ஏற்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சுக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து ஜனாதிபதியிடம் விசாரணை நடத்த முடியுமா என்பது குறித்து உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கேட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

விசாரணைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டுமாயின் இந்த நிதியைப் பெறுவதற்கான சட்ட மூலத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்தவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி குமாரதுங்கவிடமும் அப்போதைய பெருந்தோட்டத்துறை அமைச்சராகவிருந்த முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயகவிடமும் விசாரணை நடத்த வேண்டியுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிறுவனத்தின் தலைவர், மற்றும் கணக்காளராகப் பணியாற்றியவர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஜனாதிபதி மீது சேறு பூசுவதற்காக அரசியல் நோக்கத்துடன் நடத்தப்படும் விசாரணை இது வென பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் இதனை வர்ணித்துள்ளன.

## கொழும்பில் பிரேத பரிசோதனை

சுண்டிக்குளியில் உள்ள தனது வீட்டில் மர்மமான முறையில் இறந்துகிடக்கக் காணப்பட்ட யாழ் கல்வி வலய ஊழியர் அன்ரனிற் நிரஞ்சனியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கொழும்புக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

இவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்த யாழ் மேலதிக நீதிவான் ச. இளங்கோவன், அவரது சடலத்தைக் கொழும்புக்கு அனுப்பிப் பிரேத பரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்டிருக்கிறார்.

## அதிபர் இடமாற்றத்தில் தலையிட்டாராம்!

### தமிழர் ஆசிரியர் சங்கம் ஆனந்தசங்கரி மீது பாய்ச்சல்

பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபரின் இடமாற்றத்தை இரத்துச் செய்யும் விடயத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வி. ஆனந்தசங்கரி தலையிட்டமையை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

புலிகளின் நேரடி வழிநடத்தலின் கீழ் செயயற்படும் ஒரு தொழிற்சங்கமெனப் பரவலாகக் கருதப்படும் தமிழர் ஆசிரியர் சங்கம் தமது கண்டனத்தை வெளியிட்டு, ஆனந்தசங்கரிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபராகப் பணியாற்றிய கு. சதாசிவமூர்த்தியின் நிர்வாகத்தில் காணப்பட்ட பல குறைகள் தொடர்பாக விரிவுரையாளர்களாலும், ஆசிரிய மாணவர்களாலும் பல வகையான குற்றச்சாட்டுக்கள் எமது கவனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. இக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக ஆராய்ந்த சங்கம் அவை உண்மையானவை என்பதைக் கண்டறிந்த பின்னர் இவற்றை அவரின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இக் குற்றச்சாட்டுக்கள் எதிர்காலத்தில் உருவாகாதவாறு நடந்துகொள்ளும்படி அறிவுரை வழங்கியிருந்தது. அந்த அறிவுரைகளைப் பொருட்படுத்தாது அவர் தொடர்ந்தும் அதே பாணியில் நிர்வாகத்தைத் தொடர்ந்தபடியால் அவரை மாற்றும்படி கோரிக்கைவிட்டோம்.

இக் கோரிக்கையை வடக்கு-கிழக்கு ஆளுநர், வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் ஏற்று அவரை இடம் மாற்றும்படி சிபார்சு செய்திருந்தனர்.

இவரை இதன் பின்னர் முன்னாள் கல்வி அமைச்சர் சுனில் பிரேமஜயந்தவும், தாங்களும் அன்று த.வி.கூ. எம்.பி.க்களாய் இருந்த மாவை சேனாதிராஜா, சிவமகாராஜா, செல்வராஜா, ஆகியோரும் கலந்துகொண்ட கூட்டத்தில் இவ் விடயம் கலந்தாலோசிக்கப்பட்டு, அவரை இடம்மாற்றுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. இதன் பின்னர் ஈ.பி.டி.பி. தலையீட்டினால் இவரது இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டது.

அதன் பின்னர் இந்த ஆண்டு ஏப்ரல் 2, ஜூலை 2 ஆகிய திகதிகளில் தற்போதைய கல்வி அமைச்சருடனான கலந்துரையாடல்களிலும் இவ் விடயம் கலந்தாலோசிக்கப்பட்டு உடனடியாக அவரை இடம் மாற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இடமாற்றம் வழங்கப்பட்ட பின்னர், தற்போது தாங்கள் தலையிட்டு இந்த இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு கோரியுள்ளபடியால், கல்வி அமைச்சர் இடமாற்றத்தை இரத்துச் செய்துள்ளதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக ஆராய்ந்த எமது சங்கத்தின் யாழ் மாவட்ட நிர்வாக சபை பின்வரும் தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

1. பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபரின் இடமாற்றத்தை இரத்துச் செய்யும்படி கோரியமையை மீள் பரிசீலனை செய்து அவரின் இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தக் கல்வியமைச்சரைக் கோரும்படி த.வி.கூ. தலைவர் வீ.ஆனந்தசங்கரியைக் கோருவது.

2. இவ்விடயத்தில் சங்கக் கோரிக்கைக்கு ஆதரவாகச் செயற்படும்படி யாழ் மாவட்ட சகல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கோருவது.

3. யாழ் மாவட்டத்தில் இடமாற்றங்களைத் திணைக்களம், எமது சங்கப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய இடமாற்ற சபை மூலம் செய்து வருகின்றது. எனவே, இடமாற்ற விடயங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலையிட முன்னர், சங்கத்தின் யாழ் மாவட்ட நிர்வாகிகளின் கருத்துக்களைக் கோரி முடிவெடுக்கும்படி கோருவது.

4. இந்த இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டு கு.சதாசிவமூர்த்தி மீண்டும் அதிபராகப் பதவி ஏற்கும் நிலை ஏற்படுமாயின், முதற்கட்டமாகப் பலாலி ஆசிரியர் கலாசாலை மட்டத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவது.

இவ்வாறு அக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இக் கடிதத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம், யாழ் மாவட்டச் செயலாளர் க. குமாரசாமி ஆகியோர் கையெழுத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெங்கொக்கிற்கு வெளியே

### கடற்படைத் தளம் ஒன்றில் பேச்சுவார்த்தை?

அடுத்த மாதம் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள அரசு- புலி சமாதானப் பேச்சுவார்த்தை தாய்லாந்தின் தலைநகரமான பெங்கொக்கில் இருந்து 100 மைல் தொலைவில் உள்ள படைத்தளமொன்றில் இடம்பெறலாம் என நம்பப்படுகிறது.

தாய்லாந்துக் கடற்படைக்குச் சொந்தமான இந்த முகாம் உச்சகட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கூடிய இடமாகும்.

பேச்சுவார்த்தை விடயங்களில் செய்தி சேகரிக்க வரும் பத்திரிகையாளர்களுக்காக இந்த முகாமுக்குச் சமீபமாக உள்ள ஹோட்டல் ஒன்றை முன்பதிவு செய்யுமாறு நோர்வே வெளியுறவு அமைச்சு தாய்லாந்து அதிகாரிகளைக் கேட்டிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

பேச்சுக்கான செலவுகளை நோர்வே அரசு பொறுப்பேற்றுள்ளது. உணவு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தாய்லாந்து அரசு ஏற்றுள்ளது.

ஒரு மாதத்தில் 3 அல்லது 4 தினங்கள் நடைபெறும் பேச்சுவார்த்தை சுமார் ஒரு வருட காலம் வரை நீடிக்கலாம் என அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்திருக்கிறார்.

புலிகள் இயக்கத்தின் சார்பில் அன்டன் பாலசிங்கம், ருத்ரகுமார் உள்ளிட்ட குழு தாய்லாந்துப் பேச்சுக்களில் பங்கேற்கவுள்ளது.

# முரசம்

## தாராளமாகத் திரையேறும் ஆபாசப் படங்கள்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

இலங்கையின் இனப்பிரச்சினை, அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி என்ற பல்வேறு விடயங்கள் மும்முரமாக நிகழ்ந்துகொண்டிருக்கையில் சந்தடியில்லாமல் எமது திரையரங்கங்களில் கலாச்சாரச் சீரழிவுகள் தாராளமாக அரங்கேறி வருகின்றன. முன்னர் ஆபாசப் படங்கள் தணிக்கை செய்யப்பட்டும், மோசமான காட்சிகள் வெட்டப்பட்டுமே திரையிட அனுமதிக்கப்படும் நடைமுறைகள் இருந்தன.

ஆனால் தற்போது தணிக்கைச் சபை இத்தகைய திரைப்படங்கள் குறித்து அசட்டையாக இருந்து வருகிறது. கடந்த காலங்களில் ஆபாசத் திரைப்படங்கள் பெரும்பாலும் ஆங்கிலத் திரைப்படங்களாகவே இருந்ததால் அது தமிழ் மக்கள் மத்தியில் அதிக தாக்கத்தை விளைவிக்கவில்லை.

ஆனால் தற்போது இலாப நோக்கம் கொண்ட திரைப்பட விநியோகத்தர்கள் குறுக்கு வழியொன்றைக் கையாண்டு இந்தியாவில் வெளிவரும் மலையாள ஆபாசப் படங்களின் தமிழ் மொழிமாற்றம் செய்யப்பட்ட படங்களைத் தருவித்து திரையரங்கங்களில் ஓடவிட்டுள்ளார்கள். இது தமிழ்த் திரைப்படப் பார்வையாளர்கள் மத்தியில் ஒரு மன அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக உள்ளது.

வயது வந்தவர்களுக்கு மட்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அந்த வயதுக் கட்டுப்பாடு இவ்வாறான திரையரங்கங்களில் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

அதேவேளை 18 வயதைத் தாண்டிய இளைஞர்களாக இருந்தபோதிலும் இத்தகைய படங்கள் தமிழ், முஸ்லிம் கலாசாரப் பின்னணியில் வளர்ந்த் இளைஞர் சமுதாயத்துக்கு மன விகாரங்களைத் தூண்டுவதாகவே அமைந்துள்ளன. பாலியலென்பது கதையம்சத்தோடு கூடியதாக அமைவதாகவன்றி பாலியலுக்காகவே கதையமைக்கப்பட்டவையாகவே இத்தகைய திரைப்படங்கள் வடிவமைக்கப் பட்டுள்ளன. அத்துடன் அவை இந்தியாவில் தணிக்கைக்கு உட்பட்ட படங்களா என்பதுவும் உறுதிப்படுத்தப்படக்கூடியதாக இல்லை. தணிக்கை செய்யப்பட்ட பகுதிகளும் பின்னர் மீளப் பொருத்தி இலங்கையில் வெளியிடப்படுகின்றதா என்ற சந்தேகங்களும் உள்ளது.

இது குறித்து இந்து கலாசார அமைச்சருக்கோ, அமைச்சுக்கோ எவ்வித அக்கறையும் இருப்பதாகத் தெரியவில்லை. முஸ்லிம் கலாசார அமைச்சும் இவ் விடயத்தில் அசட்டையாகவே உள்ளது.

இலங்கையில் அதிகரித்துவரும் பாலியல் விகாரங்களுக்கு இவை தீனிபோடுபவையாக இருப்பதை எவரும் மறுக்க முடியாது. இத்தகைய திரையரங்குகளில் திடீர் சோதனைகள் நடத்தி இப் படங்களில் உள்ள காட்சிகள் தணிக்கைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டனவாவெனச் சோதிப்பதற்கு பொலிஸ் திணைக்களத்தினர் அறிவுறுத்தப் படவேண்டும். இதற்கான அழுத்தங்களைத் தமிழ்-முஸ்லிம் அரசியல் தலைவர்கள் அரசாங்கத்துக்கு மேற்கொள்ளவேண்டும்.

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தாய்லாந்துப் பேச்சுவார்த்தை எதிர்பார்ப்புகளும் சங்கடங்களும்

செப்டம்பர் 16.

பேச்சுவார்த்தைக்கு நாள் குறித்தாகிவிட்டது.

பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு சரியாக 10 நாட்கள் முன்னதாக செப்டம்பர் 6ம் திகதி புலிகள் மீதான தடை நீக்கப்படுமெனவும் அரசாங்கம் அறிவித்தாகிவிட்டது.

பேச்சுவார்த்தையில் என்ன விடயங்கள் ஆராயப்படுமென்ற நிகழ்ச்சிப் பட்டியல் எதுவும் தெரிவிக்கப் படவில்லை, ஆனால் பட்டியலின்றியே முதலாவது பேச்சுக்கள் ஆரம்பமாகுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு முன்னர் அதற்குப் புலிகள் தரப்பில் தலைமை தாங்கும் அன்ரன் பாலசிங்கம் வன்னி வந்து புலிகள் தலைவர் பிரபாகரனைச் சந்திப்பது குறித்து இருந்து வந்த சர்ச்சையும் நீங்கி, அவர் முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையின் பின்னரே வருவாரெனவும் தெரிவிக்கப் படுகிறது.

முன்னர் வருவதானது, என்ன பேசப்பட வேண்டும் என்பதைத் தலைமையுடன் ஆராயும் அவசியம் குறித்த விடயம். பின்னர் வருவதாவது, என்ன பேசப்பட்டதென்பதைத் தலைமைக்குத் தெரிவித்து அது குறித்த தலைமையின் பதில்களைப் பெற்றுக் கொள்ளும் விடயம்.

என்ன பேசப்பட வேண்டுமென்ற கருத்து ஏற்கெனவே புலிகளின் தலைமையால் அன்ரன் பாலசிங்கத்திடம் தெரிவிக்கப்பட்டிருக்குமிடத்து இதில் பின்னதே அவர்களுக்கு அவசியமானதாக அமைந்திருக்கும். அதனால்தான் இம் மாற்றம்.

பேச்சுவார்த்தையானது மாதாமாதம் இருமுறை மும்மூன்று நாட்களுக்கு நடத்தப்படுவதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் நீண்ட நாட்களாக சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பிற்போட்டு வந்தமைக்கு முடிவு கட்டப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகளுக்குத் தடைக்கல்லாக, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அரசாங்கம் நிறைவேற்றாதிருந்த விடயங்கள் பற்றிய முறைப்பாடுகள் புலிகளால் சுமத்தப்பட்டு வந்தன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பூரணமாக நிறைவேற்றிய பின்னரே பேச்சுவார்த்தை என்ற ஒரு கடினமான நிலைப்பாட்டையும் அவர்கள் முன் வைத்திருந்தார்கள்.

எனினும் அண்மைக் காலமாக அரசாங்கம் ஆலயங்கள், பாடசாலைகளிலிருந்து படையினரைத் துரிதமாக விலகச் செய்துவரும் நடவடிக்கைகள் குறித்துக் கணிசமான திருப்தி ஏற்பட்டிருந்ததன் காரணமாகவும், பிரதமரின் அண்மைய அமெரிக்க விஜயத்தின் போது அமைச்சர் மிலிந்த மொரகொட லண்டன் பயணித்து புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகளையடுத்தும் ஏற்பட்ட முன்னேற்றமானது இப் பேச்சுவார்த்தைகளுக்கு திகதியொன்றைத் தீர்மானிப்பதற்கு வழியேற்படுத்தியுள்ளது.

எவ்வாறெனினும் இப் பேச்சுவார்த்தையில் பிரதானமான விடயம் புலிகள் கோரும் இடைக்கால நிர்வாக சபை பற்றியதாகவே அமையும்.

இடைக்கால நிர்வாக சபையென்பது அரசியல் யாப்பின் பிரகாரம் மாகாண சபைக்கானதாகவே அமைக்கப்பட முடியும்.

அம் மாகாண சபை குறித்த அதிகாரங்கள் ஜனாதிபதிக்கே தற்போது உள்ளன.

அதுவும் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநருக்கான ஆலோசனை சபையாகவே இவ் இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட முடியும்.

அதாவது அச் சபையின் உறுப்பினர்களுக்கோ, சபை முதல்வருக்கோ எவ்வித நேரடி அதிகாரங்களும் கிடையாது, யாவும் ஆளுநர் மூலமே அமுலாக்க முடியும்.

அவ் ஆளுநரை நியமிப்பதும் ஜனாதிபதியே!

இத்தகைய வகையிலேயே அரசாங்கத்தால் தற்போதைய நிலையில் இவ் இடைக்கால நிர்வாக சபையை வழங்க முடியும்.

இல்லையேல் அதற்கு அரசியல் யாப்பு ரீதியான மாற்றங்களைச் செய்ய வேண்டும்.

அதற்கான மூன்றில் இரண்டு பாராளுமன்றப் பெரும்பான்மை அரசாங்கத்திடம் தற்போது இல்லை.

இந் நிலையில் இப் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கம் முன்வைக்கக் கூடிய இடைக்கால நிர்வாக சபை வடிவமும் புலிகள் கோருகின்ற இடைக்கால நிர்வாக சபை வடிவமும் பொருந்துமா என்பதும், புலிகள் எதிர்பார்ப்பதற்கு மாறான ஒன்றை அவர்கள் பெற்றுக்கொள்ள இணங்குவார்களா என்பதும் கேள்விக்குரியவையே.

இதேவேளை இந்த இடைக்கால நிர்வாக சபையில் புலிகளுக்கு 51 சதவீத இடமும் முஸ்லிம்கள், அரசாங்கம் உட்பட இதர தரப்பினருக்கு மீதி 49 சதவீத இடமும் வழங்கப்படவுள்ளதாக அரசாங்கத் தரப்பால் கூறப்பட்டு வருகிறது.

இது குறித்துப் புலிகளின் கருத்து வெளிப்படுத்தப் படவில்லை.

இதேவேளை பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தரப்பில் முஸ்லிம் காங்கிரஸ் பங்கு கொள்ளுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் தனித்துவமாக முஸ்லிம் பிரதிநிதிகளென்ற கோதாவில் பங்குபற்றுவார்களா, இல்லையேல் அரசாங்கத்தின் பிரதிநித்துவத்தில் அவர்களும் உள்ளடக்கப்பட்டவர்களாக அமைக்கப்பட்டிருப்பார்களா என்பது தெளிவாகவில்லை.

பெரும்பாலும் பின்னர் சொல்லப்பட்டவாறே அமையும் சாத்தியம் உள்ளது.

எவ்வாறு கலந்து கொண்டாலும் முஸ்லிம் பிரதிநிதிகள் முஸ்லிம்களின் தனித்துவம், பாதுகாப்பு, உரிமைகள், அதிகாரத்திலான பங்கு என்பன குறித்து என்ன நிலைப்பாடுகளை முன்வைக்கப் போகிறார்கள் என்பதும் இங்குள்ள கேள்வியாகும்.

முஸ்லிம்களுக்கான தனி மாகாணக் கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தும் அறிகுறிகளும் தென்படாது இல்லை.

முஸ்லிம் காங்கிரஸ் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்கான ஆதரவை வழங்குவதாகக் கூறுகின்ற பேரியல் அஷ்ரப்பின் தேசிய ஐக்கிய முன்னணி, தனிமாகாணக் கோரிக்கையை வலியுறுத்துவதற்கான அழுத்தங்களைத் தெரிவித்து வருகிறது.

இது இவ்விரு முஸ்லிம் கட்சிகளுக்கும் முஸ்லிம்கள் மத்தியில் அபிமானத்தைப் பெற்றுக் கொள்ளும் அரசியல் அஸ்திரமாகவும், ஒன்றை ஒன்று அம்பலப்படுத்தும் மறைமுகத் தந்திரோபாயமாகவும் மாறி வருவதால் இப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் தரப்பின் நிலையும் ஒரு அக்கினிப் பரீட்சையாகியுள்ளது.

எனவே அனைவரதும் ஆவலுக்குரிய இப் பேச்சுவார்த்தை எதிர்பார்ப்புகளை மட்டுமல்ல, சங்கடங்களையும் சேர்ந்தே உள்வாங்கியுள்ளது. ■

---

# ஜனாதிபதியின் சிறகுகளை வெட்டும் முயற்சி பலிக்குமா?

ஒரு புறம் அரசியல் பேச்சுவார்த்தைகள் குறித்த மும்முரமான ஏற்பாடுகளைச் செய்துகொண்டுவரும் அரசாங்கம் மறுபுறம் ஜனாதிபதியின் அதிகாரங்களை வெட்டிக் குறைப்பதற்கான பகீரத முயற்சியில் இறங்கியுள்ளது.

ஜனாதிபதியின் செட்டைகளை வெட்டுதல் என்ற கோதாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த ஏற்பாடுகள் அரசியல் யாப்பின் 18 ஆவது திருத்தச் சட்டமூலமாகக் கொண்டுவரப் படவுள்ளன.

இதேவேளை ஜனாதிபதி தனது அதிகாரங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளுக்குத் தான் உடன்படப் போவதில்லையென்றும், ஆனால் அதேவேளை ஜனாதிபதி முறையையே முற்றாக இல்லாதொழிக்கும் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்துக்குத் தான் தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியும் பிரதமரும் அதனை விரும்பவில்லை.

பிரதமரைப் பொறுத்தவரை அதிகாரம் குறைக்கப்பட்ட ஜனாதிபதி, அல்லது நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறையொன்றை ஏற்படுத்தவே விரும்புகிறார்.

தற்போதைய நிலையில் ஜனாதிபதி முறையை முற்றாக நீக்குவது ரணிலுக்கு அவ்வளவு பிடித்தமானதில்லாததற்கு காரணம், அடுத்தடுத்த ஆட்சிக் காலத்தில் தான் இவ்வாறான நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஆகக்கூடிய வாய்ப்பு உள்ளது என்பதாலேயே.

அடுத்த ஜனாதிபதிப் போட்டியில் சந்திரிகா நிற்க மாட்டாரென்பதும் அவருக்கு மேலும் வசதியான ஒரு விடயமாகும்.

அதனால் அவசரப்பட்டு நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றுவது உசிதமில்லையெனக் கருதுகிறார்.

அல்லது நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறையை ஏற்படுத்தினாலும் அவருக்கு அதிக அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பாக இருக்கும்.

எனினும், தற்போதைய நிலையில் அமர்ந்திருக்கும் ஜனாதிபதியால் தனது ஆட்சிக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக் கருதி அவரது அதிகாரங்களைக் குறைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்.

ஜனாதிபதி தான் பாராளுமன்றத்தைக் கலைக்கப் போவதில்லையென்ற ஒரு உத்தரவாதத்தைப் பாராளுமன்ற சபாநாயகருக்கு எழுத்து மூலமாக வழங்கியுள்ளார்.

ஆனால் அதுகுறித்து ஐக்கிய தேசியக் கட்சி திருப்தி கொள்ளவில்லை.

எனவேதான் 18ஆவது திருத்தச் சட்டமூலம் என்ற வகையில் இவ் அதிகாரக் குறைப்புச் சட்ட மூலத்தை முன்வைக்கிறார்கள்.

இச் சட்டமூலம் இவ் வாரம் அமச்சரவைக்கு முன் வைக்கப்பட்டு அதன் அங்கீகாரத்தின் பின்னர் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

இதற்கிடையில் அடுத்து எழுந்துள்ள அரசியல் சட்டப் பிரச்சினை யாதென்றால், ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதானால் அதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெற வேண்டுமென்பது மட்டுமன்றி, சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றுக்கும் விடப்பட்டு மக்களாணையும் பெறப்பட வேண்டுமென்பதுதான்.

இத்தகைய ஒரு சிக்கலை எதிர்கொள்ளும் அரசாங்கம் இவ் விடயத்தை உச்ச நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டியிருக்கும்.

அதில் உச்ச நீதிமன்றம் அரசியல் யாப்பின் பிரகாரம் வழங்கும் தீர்ப்பினடிப்படையில்தான் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்வதா இல்லையா என்பது முடிவாகும்.

சர்வஜன வாக்கெடுப்பு என்பதும்கூட பாராளுமன்றத்தால் நடத்தப்பட முடியாது.

அதையும் ஜனாதிபதிதான் நடத்த வேண்டும்.

எனவே இவ் விடயம் இப்போது எத்தகைய பலம் பலவீனங்களுடன் இருக்கின்றதென்பதை யாவரும் புரிந்து கொள்ள முடியும்.

ஜே.ஆர் ஜெயவர்த்தனா தனது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ளுமுகமாக 1978ல் தயாரித்த இவ் அரசியல் யாப்பானது கூடுதலாக ஜனாதிபதியின் பக்கத்திலேயே சார்ந்திருக்கிறது.

எனவே இவ் விடயத்தில் சர்வஜன வாக்கெடுப்பு அவசியமென்றாகி, அதையும் ஜனாதிபதியே நடத்துபவராகவும் முடிவாகிற பட்சத்தில் இம் முயற்சி இத்துப் போன ஒன்றாகவே ஆகிவிடும்.

டிசம்பர் 5ம் திகதியுடன் ஜனாதிபதியால் பாராளுமன்றத்தைக் கலைக்கக் கூடிய அதிகாரம் அவருக்கு கிடைத்துவிடும்.

ஜனாதிபதி சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதாக இருந்தால் அவர் அதைப் பிற்போட்டுவிட்டு, பாராளுமன்றத்தைக் கலைக்கும் தனது அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

எவ்வாறாயினும், இந்த உத்தேச 18ம் அரசியல் யாப்புத் திருத்தத்தில் ஜனாதிபதியின் எவ்வெவ் அதிகாரங்கள் குறைக்கப்படவுள்ளனவென உள்ளடக்கப்பட்டுள்ளதென்பது இன்னும் வெளியிடப்படவில்லை.

முன்னர் பேசப்பட்ட விடயங்களாவன, பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தைப் பாராளுமன்றத்துக்கே விடுதல், பாராளுமன்ற உறுப்பினர்களை கட்சிக் கட்டுப்பாடுகளைத் தாண்டி மனசாட்சிப்படி வாக்களிக்க அனுமதித்தல், பாராளுமன்ற நிறைவேற்றுக் குழுவொன்றிற்கு ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைப் பாரப்படுத்தல் போன்றவை அடங்கியிருந்தன.

எனினும் தற்போது மாகாணசபை மற்றும் அதற்கான இடைக்கால நிர்வாக சபையை வழங்குவது தொடர்பான அதிகாரச் சிக்கல் உள்ளதால் அவ் அதிகாரத்தையும் ஜனாதிபதியிடமிருந்து கவர்ந்து கொள்ள வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு எழுந்துள்ளது.

அதற்கேற்ற சரத்துக்களும் இச் சட்டமூலத்தில் சேர்க்கப்படக் கூடும்.

எவ்வாறெனினும் இவற்றைச் சாதிக்க முதற் கட்டமாக பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசாங்கம் பெறவேண்டும்.

அதற்கு, தமிழ் கூட்டமைப்பினர் ஆதரிக்கும் பட்சத்தில் கூட மேலதிகமாக 22 மாறி வருவதால், பொது ஜன ஐக்கிய முன்னணி அல்லது ஜே.வி.பி. உறுப்பினர்கள் தேவையாக இருக்கும்.

ஐக்கிய தேசிய முன்னணி தம்வசம் 22 பொ.ஐ.மு. உறுப்பினர்கள் உள்ளார்களெனக் கூறி வருகிறது.

பௌசி, றிச்சேர்ட் பத்திரன போன்ற சிலரைத் தவிர வேறு எவரும் இதுவரை அவ்வாறு ஐ.தே.மு உடன் சார்ந்துள்ளதாகத் தெரியவரவில்லை.

இதேவேளை ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைப்பதற்கு அரசாங்கத்தில் கூட்டுவகிக்கும் முஸ்லிம் காங்கிரஸு ம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடுமெனவும் ஒரு சந்தேகம் உளது.

அவ்வாறான பட்சத்தில்...... காரியம் கஷ்டம் தான்! ■

நரன்

# மீண்டும் வீரப்பன் கைவரிசை

## முன்னாள் கர்நாடக அமைச்சர் கடத்தல்

சிறிது காலம் ஓய்விலிருந்த வீரப்பன் மீண்டும் தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கியிருக்கிறான். இம்முறை வீரப்பனின் பிடியில் சிக்கியிருப்பது கர்நாடக முன்னாள் அமைச்சரான நாகப்பா.

நாகப்பாவை (65) சந்தன வீரப்பன் தலைமையில் ஆயுதங்களுடன் வந்த ஒன்பது பேர் கொண்ட கும்பல் ஞாயிற்றுக் கிழமை இரவு கடத்திச் சென்றது. மேலும், அவருடன் பாதுகாப்பிற்கு இருந்த இரண்டு பொலிஸாரும் கடத்திச் செல்லப்பட்டனர்.

தமிழக எல்லையிலிருந்து 30 கிலோமீற்றர் தொலைவில் கொள்ளேகால் அருகிலுள்ள ஹன்னூர் பொலிஸ் பிரிவில் இக் கடத்தல் சம்பவம் நடந்துள்ளது.

தேவகௌடா தலைமையிலான ஜனதா தள அமைச்சரவையில் சந்தைப்படுத்தல் துறை அமைச்சராக இருந்தவர் நாகப்பா.

காமகரே என்ற ஊரில் தன் வீட்டில் இருந்தபோது, இரவு 10.15 மணிக்கு வீரப்பன் தலைமையிலான கும்பலால் கடத்தப்பட்டார்.

வீரப்பனுக்கு எதிராக நாகப்பா அடிக்கடி அறிக்கைகள் விட்டு வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

ஞாயிற்றுக்கிழமை, ஹன்னூர் அருகே உள்ள ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்க நாகப்பா அங்கு சென்றார். அவருடன் பாதுகாப்புக்காக இரண்டு பொலிஸாரும் சென்றனர். அங்கிருந்து இரவு சுமார் 10 மணியளவில் காரில் வீட்டுக்குத் திரும்பினார் நாகப்பா. வீட்டின் முன் கதவைப் பூட்டிக்கொண்டு உள்ளேயிருந்தார்.

இந் நிலையில் சந்தனக் கடத்தல் வீரப்பன் தலைமையில் ஒன்பது பேர் கொண்ட கும்பல் வீட்டின் முன் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்து, நாகப்பாவையும், வீட்டில் பாதுகாப்புப் பணியில் இருந்த பொலிஸாரையும் ஒரு வாகனத்தில் ஏற்றிக் கடத்திச் சென்றது.

அவர்களைத் தமிழகக் காட்டுப் பகுதிக்குள் கடத்திச் சென்றதாக அதிகாரபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடிகர் ராஜ்குமார் உள்ளிட்டோரைக் கடத்திய பின் வீரப்பன் கும்பல் இப்போது மீண்டும் கைவரிசையைக் காட்டியுள்ளது.



பேச்சு வார்த்தை நடத்த பழ. நெடுமாறனைக் காட்டுக்குள் அனுப்பி வைக்க வேண்டும். அதற்கு முன்னதாகத் தேடுதல் வேட்டையை முற்றிலுமாக நிறுத்தி வைக்க வேண்டும். "இந்த முறை எனது கோரிக்கையில் நான் உறுதியாக இருப்பேன். இது தொடர்பாக விரைவில் வேறு ஒரு கேஸட்டையும் அனுப்ப இருக்கிறேன்"

இச் சம்பவத்தையடுத்து, கொள்ளேகால் பகுதியில் பெரும் பதற்றம் நிலவுகிறது. சத்தியமங்கலம், திம்பம் வழியாகக் கர்நாடக மாநிலத்திற்குச் செல்லும் சாலையில் போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டுள்ளது. தமிழக-கர்நாடக எல்லையில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை காலையில் கன்னட ராஜ்குமார் கொள்ளேகால் அருகேயுள்ள தனது காஜனூர் பண்ணை வீட்டிற்கு வந்து சென்றார். இதையடுத்து அப் பகுதியில் கடும் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேலும், வீரப்பன் நடமாட்டம் இப் பகுதியில் அதிகமிருப்பதால் அங்கு அதிரடிப் படையினர் தீவிரமாகக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அப்படியிருந்தும் வீரப்பனின் ஆட்கள் ஆள் கடத்தலில் ஈடுபட்டுள்ளனர்.

(கன்னட நடிகர் ராஜ்குமார் முன்பு இதேபோல் தனது பண்ணை இல்லத்திற்கு வந்தபோது வீரப்பனால் கடத்திச் செல்லப்பட்டு 108 நாட்களுக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டார். அப்போது, நக்கீரன் கோபால், நெடுமாறன் ஆகியோர் அரசுத் தூதர்களாக ராஜ்குமார் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.)

இதேவேளை நாகப்பா கடத்தப்பட்டு 24 மணி நேரம் கழிவதற்குள் தனது வழமையான பாணியில் ஒலிப்பதிவு நாடா ஒன்றின் மூலம் தன்னுடைய கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறான் வீரப்பன்.

புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டதன் பேரில் தமிழக அரசால் கைது செய்யப்பட்டிருக்கும் நெடுமாறனையும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்டபோது வீரப்பனிடம் தூது சென்ற கொளத்தூர் மணி என்பவரையும் (தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்) விடுவிக்க வேண்டும் என்பதே வீரப்பனின் முக்கிய நிபந்தனைகளாகும்.

மேலும் பேச்சுவார்த்தைக்கு பழ. நெடுமாறனைத் தூதுவராக மீண்டும் காட்டுக்குள் அனுப்ப வேண்டும் என்று வீரப்பன் அனுப்பியுள்ள கேஸட்டில் கூறியிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.



அந்தக் கேஸட்டில் வீரப்பன் பேசியுள்ளான். அதில் நாகப்பாவை விடுவிக்க பொலிஸாரை அனுப்பக் கூடாது. சிறையில் அடைக்கப்பட்டுள்ள பழ. நெடுமாறன், கொளத்தூர் மணி, 'நக்கீரன்' நிருபர் சிவசுப்பிரமணியன் ஆகியோரை விடுதலை செய்ய வேண்டும். அவர்கள் மீதான வழக்குகளை வாபஸ் பெற வேண்டும்.

பேச்சுவார்த்தை நடத்த பழ. நெடுமாறனைக் காட்டுக்குள் அனுப்பி வைக்க வேண்டும். அதற்கு முன்னதாகத் தேடுதல் வேட்டையை முற்றிலுமாக நிறுத்தி வைக்க வேண்டும்.

"இந்த முறை எனது கோரிக்கையில் நான் உறுதியாக இருப்பேன். இது தொடர்பாக விரைவில் வேறு ஒரு கேஸட்டையும் அனுப்ப இருக்கிறேன்" என்று அந்தக் கேஸட்டில் வீரப்பன் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் பணம் கொடுக்க வேண்டுமா? என்பது பற்றி இந்தக் கேஸட்டில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று கூறப்படுகிறது.

மேலும் ராஜ்குமாரை மீட்க இரு அரசுகளின் அனுமதியின் பேரில் கொளத்தூர் மணி, பழ. நெடுமாறன் மற்றும் நக்கீரன் கோபால், நிருபர் சிவசுப்பிரமணியன் உள்ளிட்டோர் என்னுடன் பேச்சு நடத்தினர். இந் நிலையில், கொளத்தூர் மணி, சிவசுப்பிரமணியன் ஆகியோரை கடத்தலுக்கு சதி செய்தார்கள் என்று கூறிக் கைது செய்துள்ளதை வீரப்பன் கண்டித்துள்ளார்.

மேலும், "இவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும், மைசூர் சிறையில் சுமார் 10 ஆண்டுகள் தடா கைதிகளாக இருந்து விடுதலை செய்யப்பட்டவர்களைப் பொலிசார் மீண்டும் கைது செய்துள்ளனர். பழிவாங்கும் நோக்கில் தமிழக அரசு செயற்படுவதை நிறுத்த வேண்டும்.

காவிரியிலிருந்து தமிழகத்துக்குத் தண்ணீர் திறந்து விட வேண்டும். மொழிக் கொள்கை, திருவள்ளுவர் சிலை அமைத்தல் என ராஜ்குமார் விடுதலையின் போது முன்வைத்த கோரிக்கைகளுக்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லை.

அரசுகள் தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, பொய் வாக்குறுதிகளைத் தந்து என்னை ஏமாற்றி விட்டன.

தமிழ் இனத்தின் மீது எனக்குள்ள பற்றுதலைத் தீவிரவாதம் என்று கூறியதோடு, பொது அமைதி ஏற்படுத்த என்னுடன் பேச்சு நடத்தியவர்களையும் தீவிரவாதிகள் என்று அரசு கைது செய்துள்ளது.

வெகுஜன விரோதிகளாக மாறிவிட்ட அரசியல்வாதிகளுக்குப் பாடம் புகட்டப் புறப்பட்டுவிட்டேன். நாகப்பா கடத்தல் மூலம் இரு அரசுகளுக்கும் எச்சரிக்கை விடுக்கிறேன்" என்று கேஸட்டில் வீரப்பன் பேசியுள்ளதாகத் தெரிகிறது.

தமிழக மற்றும் கர்நாடக ஊடகத் துறையினர் இந்தக் கடத்தல் விவகாரத்திற்கு அதிக முக்கியத்துவமளித்துள்ளதுடன் இரு மாநில அரசுகள் மீதும் கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளன. வீரப்பனுடன் பேச்சு நடத்த நடிகர் ரஜனியைக் காட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் ராமதாஸ் கோரியிருக்கிறார். ■

---

# ஆனை வரும் பின்னே

ஆனை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பது போல் காரியங்கள் நடைபெறுகின்றன.

முதலில் ஆமிரேஜ்ற்கு அடுத்த நிலை அதிகாரியான தென்னாசியாவிற்குப் பொறுப்பான றொக்கா இலங்கைக்கு வந்தார். தற்போது அமெரிக்க வெளிவிவகாரத் துணைச்செயலாளரான ஆர்மிரேஜ் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். அமெரிக்காவின் திட்டவட்டமான பிரசன்னத்திற்கான முன்னறிவிப்பாகவே இந்த அமெரிக்க உயர்மட்ட அதிகாரிகளின் விஜயங்களை நாம் கருத வேண்டியிருக்கிறது.

80களின் இறுதிப் பகுதிவரை இந்தியா இந்தப் பிராந்தியத்திற்கு வெளியிலிருந்து வரும் வல்லாதிக்க சக்திகளைக் கண்ணுக்குள் எண்ணெய்விட்டுப் பார்த்துக்கொண்டிருந்தது. உலகம் இரண்டு முகாம்களாகப் பிரிந்திருந்த காலத்தில் மூன்றாம் உலக நாடுகள் வல்லரசுகளின் கெடுபிடிகளில் சிக்காமல் இருக்கத் தம்மை அணிசேரா நாடுகளாக வரிந்து கொண்டன.

இந்தியாவின் காலஞ்சென்ற பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் அணிசேரா அமைப்பின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவராக இருந்தார்.

எனினும் இந்தியா சோவியத் யூனியனின் நீண்டகால நண்பனாகவே இருந்து வந்தது.

சுதந்திரத்திற்குப் பின்னான கைத்தொழில் துறை முனனேற்றங்களில் சோவியத் யூனியன் குறிப்பிடத் தகுந்த பங்கு வகித்ததெனலாம்.

1970களில் நடைபெற்ற இந்தோ-பாகிஸ்தான் யுத்தத்தின் போது- வங்க தேசம் உருவாகிய போது- அமெரிக்காவின் 7வது கடற்படைப் பிரிவு இந்து சமுத்திரத்தினுள் நுழைந்தது. அது இந்தியாவிற்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகவே கருதப்பட்டது.

மிகப் பெரிய சனத்தொகையைக் கொண்ட, குறிப்பிடத் தகுந்தளவு நிலப் பரப்பைக் கொண்ட, மிகப் பெரிய ஜனநாயகம் மூன்றாம் உலகுக்குத் தலைமை தாங்கியதோடு அது சோவியத்தின் நண்பனாகவும் இருந்தது, ஏகாதிபத்திய சக்திகளின் கண்களை உறுத்தவே செய்தது.

இந்தியாவின் பல்வேறு மொழி, கலாச்சார, இன, பேதங்களைப் பாவித்து இந்தியாவினுள் பிளவுகளை ஏற்படுத்துவதும் ஏகாதிபத்திய சக்திகளின் நோக்கங்களாக இருந்தன.

குறிப்பாக பஞ்சாப்பிலும், காஷ்மீரிலும் பாகிஸ்தான் நேரடிப் பங்குதாரியே தவிர மறை கரங்கள் இருந்தன. ஏன் இலங்கையின் ஒரு பிரபல போராட்டக்குழுவிற்கு இஸ்ரேலில் பயிற்சி வழங்கப்பட்டது அந்த நோக்கத்தில்தான்.

1990களின் பின் பூகோள வரைபடம் மீண்டும் ஒரு முறை மாற்றமடைந்ததுடன் நாடுகளுக்கிடையேயான உறவுகளும் மாற்றமடைந்தன. பேர்லின் சுவர் உடைந்தது. இரண்டு ஜேர்மனிகளும் ஒன்றாகின. சோவியத் யூனியன் உடைந்தது. பல தேசங்கள் சோவியத் யூனியனிலிருந்து விலகிச் சென்றன. சோவியத் யூனியனும், கிழக்கு ஐரோப்பாவும் கட்டியெழுப்பிய "வார்சோ" பாதுகாப்புக் கூட்டணி நலிவுற்றது. 70 வருடங்களாக உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் தாயகமாகக் கருதப்பட்ட சோவியத் யூனியனின் சிதைவினால் தேசிய விடுதலை, சமூக மாற்றத்தை விழைந்த மூன்றாம் உலக சக்திகள் பெரும் அவநம்பிக்கை, விரக்தியினுள் தள்ளப்பட்டன.

1980 களின் முற்பகுதியிலிருந்து இலங்கை இனவிவகாரங்களில் இந்தியா தீவிர கவனம் செலுத்தி வந்தது. 1987 இல் இந்தியாவின் நேரடித் தலையீடு தொடர்பாக மேற்கின் ஊடகங்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தன.

திருகோணமலைத் துறைமுகத்தை வெளியாருக்குத் தாரைவார்த்தல், இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவு, "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" போன்றனவெல்லாம் இந்தியாவிற்கு அக்கறைக்குரிய விடயங்களாக இருந்தன.

ஆனாலும் 1990களின் முற்பகுதியில் இந்தியப் படைகள் இலங்கையிலிருந்து வெளியேறிய பின் உலகம் பெரிதாக இலங்கைத் தமிழர் விவகாரத்தைக் கண்டு கொள்ளவில்லை.

1983 இன் பின்னர் இந்தியாவே இலங்கைத் தமிழர் பிரச்சனையை சர்வதேச மயப்படுத்தியதில் முக்கிய பங்கை வகித்தது என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். இலங்கையில் இந்தியப் படைகள் பெற்ற கசப்பான அனுபவம் இந்திய மண்ணில் நேர்ந்த தேசியத் துயரங்கள் எல்லாம் சேர்ந்து இலங்கைத் தமிழர் விவகாரத்தில் ஒரு தலையிடாக் கொள்கைக்கு இந்தியாவை இட்டுச் சென்றன.

மேற்குலகமும் இக்காலகட்டம் முழுவதும் சேர்பிய -குரொசிய -பொஸ்னிய- கொசோவா பிரச்சனைகளில் காட்டிய அக்கறை அளவுக்கு எமது பிரச்சனைகளில் காட்டவில்லை.

கோளமயமாக்கல், யுத்தத் தொழில் நுட்பத்தின் அபார வளர்ச்சி, கூடவே உலகளாவிய பயங்கரவாதத்தின் வளர்ச்சி இவை யெல்லாம் நாடுகளுக்கிடையேயான உறவுகளை அடியோடு மாற்றி அமைத்துவிட்டன.

தமது பொருளாதாரத்தை விருத்தி செய்வதானால் உலக வல்லாதிக்க சக்திகளுடன் சேர்ந்துதான் மேற்கொள்ள வேண்டும் . உள்ளூர் பயங்கரவாதத்தை ஒடுக்குவதானால் உலகளாவிய சக்திகளுடன் சேர்ந்துதான் செயற்படவேண்டும் என்பது விரும்பியோ விரும்பாமலோ பல மூன்றாம் உலக அரசுகளின் நிலை இதுதான். வியட்னாம், சீனா போன்ற நாடுகளும் இதற்கு விதி விலக்கல்ல.

தொளிலாளி வர்க்கத்திற்கு எவ்வாறு தாயகம் கிடையாதோ அதேபோல் முதலாளி வர்க்கத்திற்கும் இன்று தாயகம் கிடையாது.

ஆனால் இருக்கும் அரசுகளுக்கெதிரான போராட்டம் என்ற பெயரில் நடைபெறும் வன்முறை உண்மையில் இன்று மனித முகம் கொண்டதாக இல்லை. அது மிருக முகம் கொண்டதாக, தான் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் சமூகத்தின் ஜனநாயக மனித உரிமைகளை மீறுவதாக, மற்றைய சமூகத்தினருக்குத் தீங்கிழைப்பதாகவே அமைகிறது.

எனவே இலங்கையில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான சர்வதேச சக்திகளின் அழுத்தங்கள் இலங்கையில் சகல சமூகங்களாலும் மாத்திரமல்ல, உலகளாவிய சமூகங்களாலும் ஏற்றுக் கொள்ளப்படும் நிலை காணப்படுகிறது.

ஆனாலும் 50 வருடங்களாக இந்தியா காப்பாற்றிவரும் பிராந்திய நலன்களை விட்டு விடுமா?

**தாகூர்**

அதற்கு இந்தியாவின் சமூக உளவியல் இடமளிக்குமா என்பது முக்கியமான விடயம்.

றொக்கா யாழ்ப்பாணத்தில் உலா வரும் போது, ஆமிரேஜ் கட்டுநாயக்காவிலிருந்து நேரடியாக யாழ்ப்பாணம் விஜயம் செய்யும் போது இந்தியா மௌனமாக இருப்பதென்பது மிகப் பெரிய ராஜதந்திர நெருக்கடியாகும். தாய்லாந்துப் பேச்சு வார்த்தைக்கு முன்னரோ, பின்னரோ இந்தியாவின் நிஷ்டை கலையலாம். ■

# NAVEEN CERAMIC



தரமான
☛ Wall Tiles, ☛ Floor Tiles
மற்றும் குளியலறை உபகரணங்களை
*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன் நாடு ளல் இருந்து
நே டியா இ் கும செய்து
வந போ ப்பவ் ள்

Naveen Ceramic No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

எமது புதிய காட்சியறை
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.



விதுஜா ஏசியன் சொப்

**VIDUJA ASIAN SHOP**

WAAG HAUS PASSGE-8
3011 BERN (1 STOCK)
SWISS.
T.P.:- 031-3113510, 031-9928267, 079-2158405

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் சிறுவர், சிறுமிகள், பெரியவர்களுக்கான வண்ண வண்ண ஆடைகள், தொலைபேசி அட்டைகள், பழைய புதிய வீடியோ பிரதிகள் வாடகை சகல விதமான புகைப் படங்கள் எடுக்கவும் இன்றே நாடுங்கள்.
**விதுஜா ஏசியன் சொப்**


# தோட்டப்புறங்களில் உணவு முத்திரை குறைப்பு

# அரசியல்வாதிகள் மௌனம்!

சமுர்த்தி உணவு முத்திரை தற்பொழுது தேசிய ரீதியில் 100 க்கு 25 வீதம் என்ற அடிப்படையில் சகல மாவட்டங்களிலும் குறைக்கப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கை தேசிய ரீதியில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்றாலும் நுவரெலியா மாவட்டத்தைப் பொறுத்தவரை மலையகத் தோட்டத்தைச் சார்ந்த சமுர்த்தி உதவிபெறுபவர்களை மிக மோசமாகப் பாதித்துள்ளது.

வறுமையான, அதாவது 1000 ரூபாவிற்கும் குறைவான மாதாந்த வருமானம் பெறும் குடும்பங்களை இனங்கண்டே, அதுவும் 55 வயதிற்கு மேற்பட்ட ஓய்வூதியம் பெற்று எவ்வித தொழிலையும் மேற கொள்ள முடியாத சூழ்நிலையில் வாழும் வயோதிபர்களுக்கே பெரும்பாலும் இவ்வுணவு முத்திரை வழங்கப்பட்டிருந்தது. சமுர்த்தி உணவு முத்திரைத் திட்டத்தில் 1000 ரூபா, 700 ரூபா, 350 ரூபா, 250 ரூபா பெறுமதியான உணவு முத்திரைகள் விநியோகிக்கப்பட்டாலும் தோட்டப்புறங்களைப் பொறுத்தவரை ஆகக்கூடிய தொகையாக 350 ரூபா பெறுமதியான உணவு முத்திரையும் 250 ரூபா பெறுமதியான உணவு முத்திரையுமே விநியோகிக்கப்பட்டு வருகிறது.

தோட்டப்புறங்களைப் பொறுத்தவரை இத் திட்டம் அறிமுகப்படுத்திய ஆரம்ப காலத்திலேயே (1995 ம் ஆண்டு) உணவு முத்திரை வழங்கும் போது மிகவும் பாரபட்சமான முறையிலே குறைந்தளவு உணவு முத்திரைகளே வழங்கப்பட்டிருக்கின்றன.

அதாவது, 100 க்குப் 10 வீதம் என்ற அடிப்படையில் கூட அல்லாமல் உதாரணமாக, ஒரு தோட்டத்தில் 200- 250 பேர் உணவு முத்திரை பெற்றுக்கொள்வதற்குத் தகுதியானவர்களாகக் காணப்பட்டிருந்தபோதும் அதில் 10-12 பேர்களுக்கு மாத்திரமே உணவு முத்திரை வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் இத் தோட்டப் பகுதிகளின் உணவு முத்திரை எண்ணிக்கை விகிதாசாரத்தையும், தோட்டப் பகுதிகளுக்கு அண்மையில் உள்ள கிராமப் புறங்களின் உணவு முத்திரை எண்ணிக்கை விகிதாசாரத்தையும் கருத்தில் கொண்டு நோக்கினால் இவ்வுணவு முத்திரை வழங்கும்போது தோட்டப்புறங்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதி தெட்டத் தெளிவாக விளங்கும்.

மேலும் உணவு முத்திரை பெறத் தகுதியானவர்களில் 10 வீதம் கூடச் சரியான முறையில் இல்லாத உணவு முத்திரைகளிலிருந்து எப்படித் தோட்டப்புறங்களிலே 25 வீதமான உணவு முத்திரையைக் குறைக்க முடியும்? அப்படியே குறைத்தால் கூட எத்தனை உணவு முத்திரை மிஞ்சும்? அப்படிக் குறைக்கக் கூடிய தகைமைகளில்தான் மலையக, தோட்டப்புற மக்களின் வாழ்க்கைத் தரம் காணப்படுகிறதா? என்று சற்று ஆராய்ந்து பார்த்தால், குறைப் பதற்குப் பதிலாக மேலதிகமாக உணவு முத்திரைகள் தோட்டப் பகுதி களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற உண்மையே உணரப்படும்.

ஆரம்பத்திலே உணவு முத்திரை பகிர்ந்தளித்தபோது தோட்டப் புறங்களுக்கு 100 க்கு 75 வீதமோ அல்லது 50 வீதமோ கொடுக்கப்பட்டிருந்தால் கூட 25 கூதம் குறைப்பதால் பாரியளவில் தோட்டப்புற மக்களுக்குப் பாதிப்பிருக்காது. ஆரம்பத்திலே, 10 வீதம் கூடத் தோட்டப்பகுதிகளுக்கு உணவு முத்திரைகள் கொடுபடாமல் தேசிய ரீதியிலான 25 வீத குறைப்புத் திட்டத்தைத் தோட்டப்புறங்களுக்கும் எடுத்து செல்லும்போது அரசாங்கத்திற்குச் சாதகமாக இருந்தாலும் மலையக சமுர்த்தி உதவி பெறுபவர்களுக்கு பாதகமான நிலைமை உருவாகி இருப்பதை அறியலாம்.

இந்த உதவிப் பணமானது இவர்களின் தேவைகளை முற்றுமுழுதாகப் பூர்த்திசெய்யக்கூடியதாக இல்லாவிடினும் தங்களது சிறு சிறு தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்து வந்தது என்பது உண்மை. நிலைமை இப்படி இருக்கையில் தேசிய ரீதியில் 25% உணவு முத்திரை குறைந்தாலோ அல்லது உணவு முத்திரைகளின் பெறுமதியை 350 ரூபாவிலிருந்து 250 ரூபாவாக குறைத்தாலோ வேறு மாவட்ட மக்களை விட நுவரெலியா மாவட்டத்தில் குறிப்பாக தோட்டப்புற மக்கள் முற்றுமுழுதாகப் பாதிக்கப்படப் போகிறார்கள் என்பது திண்ணம்.

இந்த விடயங்கள் சம்பந்தமாக எமது மலையக அரசியல் தலைமைகளிடம் அறிவித்தும் இதுவரை எவ்வித பயனுமில்லை. இவ்விடயம் தொடர்பாக அமைச்சரவையிலோ, பாராளுமன்றத்திலோ இதுவரை ஒரு கண்டனத்தைக் கூடத் தெரிவிக்காமல் இருக்கிறார்கள் என்பதும் இலங்கையின் ஏனைய மாவட்டங்களை விட நுவரெலியா மாவட்டம் வறுமை நிலையில் இருக்கும் மாவட்டம் எனக்கூறி 25% உணவு முத்திரை குறைக்கும் திட்டத்தில் நுவரெலியா மாவட்டத்தில் குறிப்பாக மலையக தோட்டப் பகுதிக்கு விஷேட சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென வாதாட வாய்ப்பிருந்தும் வாய்திறக்காமல் இருப்பதும், பெரும் வேதனைக்குரிய விடயமாகும்.

குணா. குணசீலம், போகாவத்தா - பத்தனை.

## விளம்பரப் பகுதி




**Wedding** PHOTOGRAPHER
27/23A, Madampitiya Road, Colombo - 15.
Hotline: 077 321345, Tele: 527933
Your Satisfaction Is My Success
Vinoth



## மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவையாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**
"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**
"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**
"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**
"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"**
"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடநதேறச் செய்தமைக்கு கோடானு கோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**
"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**
"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**
"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**
"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**
"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**
"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச் சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**
"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"**
"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந் தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா."

**கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"**
"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**
"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

கொழும்பில்
No.162, Kotahena Street, Mayfield Road, Colombo 13, Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara-Eliya. 052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.



## நீங்கள் கண்ணாடி அணிபவரானால்

எந்தரக லென்ஸ் தேவையென உணர வேண்டும்!

ஸோலா பிளட் டொப
SOLA
FLAT TOP



சாதாரணமாகப் பாவனையிலுள்ள பைபோகல் லென்ஸ்

**ஸோலா** பிளட் டொப 21 ம் நூற்றாண்டுக்கு மிகச் சௌகரியமான லென்ஸ்

*நன்மைகள்*
* இடது வலது கண்களுக்கென விசேட லென்ஸ் கொண்டது
* பாரமற்றது * உடையாதது * மிகத் தெளிவானது.

ரூ 1000/-ல் இருந்து

**ரே பேன் ஒப்டீஷியன்**
**(பிரைவட்) லிமிட்டட்**
81, ஒல்கொட் மாவத்தை. கொழும்பு-11.
தொலைபேசி-327003

மருத்துவ சிபாரிசுக்கமையவோ, நமது கணனி மூலமோ பார்வையைப் பரிசீலித்து அதே தினத்தில் கண்ணாடியைப் பெறுங்கள்.



**மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்** தபால் மூலம் டிப்ளோமா ஆசிரியரால் தையற் கலை, பெயின்ரிங், சமையற் கலை, மணப்பெண் அலங்காரம் (Hair Style) மிக விளக்கமாக இப் பயிற்சி நெறியில் பயிற்றுவிக்கப்படும். மாத்தளை வாழ் மகளிருக்கு நேரடியாகப் பயிற்றுவிக்கப்படுகிறது. முடிவில் சான்றிதழும் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு ரூபா 13.50 சதம் பெறுமதியான முத்திரையுடன் தொடர்பு கொள்ளவும்.
Director ;- Mrs. Sithy Kamila Rafi, No- 41, Vihara Road, Matala.



## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**
142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக
Tel: 074-519754



## தெய்வீக மருத்துவம்

National Theiveega Sakthy Foundation
International Interregious Traditional & Medical & Divine Service
சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை
Government Approved Charity Regd No: - HA/4/BT/219

**டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P, J.P. (SL)**

கிரக தோசும் காலப்பகையால் பிரிந்த, காதலர்கள் கணவன் மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீயபழக்கம், மனிதத் தீமை, மருந்திடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்)

Theiveegam SriLanka Head Office Batticaloa.
Tele / Fax:065-24825,078 610098
வெளிநாட்டவர்களுக்கு, Tele / Fax: - 0094 78610098

கொழும்பிலும் சந்திக்கலாம்

"வாழ்வினிருளை நீக்கிஒளியையேற்றுவோம்"
" DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE "


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிரியை அழைப்பும்



தோற்றம் 06 08 1954 | மறைவு 01 08 2002

**அமரர் வைரவப்பிள்ளை நாச்சி** -அனலைதீவு

காலத்தின் கோலந்தானோ
காலன் செய்த சூழ்ச்சிதானோ;
பால் போன்ற வெள்ளைமனம் கொண்ட– எங்கள்
பாச தீபம் அணைந்ததேனோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி!

31-08-2002 சனிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி, ஆத்மா சாந்திப் பிரார்த்தனை, மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுவிஸ் வேணில் வசிக்கும்
மகள்மார் — மருமக்கள்
விஜயராணி — சுந்தரம்
வசந்தராணி — குனேஸ்வரன் உரும்பிராய்

பேரப்பிள்ளைகள்
லக்சகன் வினுஜா
லக்சுகி விதுஷன்
சுவிச்சகன்

தகவல் மகன்.அனலைதீவ.சந்திரன்.

## அலசுவது-இராஜதந்திரி

# சர்வதேச கவனத்தைப் பெறும் செப்டம்பர்!

அமெரிக்கத் துணை இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆமிடேஜ் கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இவ் விஜயம் பல்வேறு விதத்திலும் முக்கியத்துவம் மிக்கதாகவே இருந்தது.

ஏனெனில், திரு. ஆமிடேஜ் கொழும்பை வந்தடைந்த மறுகணமே யாழ்ப்பாணத்திற்குப் பயணமாகியிருந்தார். அமெரிக்க அரசாங்கத்தில் மிகவும் குறிப்பிடத் தக்கதாகவே இராஜாங்க அமைச்சு விளங்குகின்றது. அந் நாட்டின் முன்னாள் இராணுவத் தளபதியான கொலின் பவல் இராஜாங்க அமைச்சராக இருக்கின்றார். அவரது துணை அமைச்சராகவே ஆமிடேஜ் பதவி வகிக்கிறார்.

வெளிவிவகாரம், பாதுகாப்பு ஆகிய இரண்டையும் அமெரிக்க இராஜாங்க அமைச்சு ஒருங்கே கையாளுகின்றது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா நிலைகொள்ள ஆரம்பித்ததிலிருந்து தென்னாசியப் பிராந்தியத்தில் கடந்த ஒரு வருட காலமாக அதன் கரிசனை வெகுவாகவே அதிகரித்துள்ளது. இதன் வெளிப்பாடாகவே, ஆமிடேஜ் இலங்கை வந்ததோடல்லாது, நேரடியாக யாழ்ப்பாணத்திற்கும் பயணம் செய்திருந்தார். ஓரிரு மாதங்களுக்கு முன்னர் இலங்கை வந்திருந்த அமெரிக்க அரசின் தென்னாசியப் பிராந்தியத்திற்கான பிரதிநிதி கிறிஸ்டினா ரொக்காவும் கொழும்பு வந்த மறுகணமே யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள நிலைவரங்களைப் பார்வையிட்டிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

எனவே, சர்வதேச அரங்கில் தற்போது யாழ் குடாநாடு மீதான கவனம் வெகுவாக அதிகரித்துள்ளதையே அமெரிக்க முக்கியஸ்தர்களின் அப் பகுதிக்கான விஜயங்கள் புலப்படுத்துகின்றன.

இதேவேளை, திரு. ரிச்சர்ட் ஆமிடேஜ் இலங்கையில் விஜயம் மேற்கொண்டிருந்த தருணத்திலேயே நோர்வே வெளிவிவகார அமைச்சு இலங்கை அரசுக்கும், புலிகளுக்குமிடையே தாய்லாந்தில் இடம்பெறவுள்ள முதற் சுற்றுப் பேச்சுக்களுக்கான திகதிகளையும் அறிவித்திருந்தது.

செப்டம்பர் மாதம் 16 ம் திகதி முதல் 18 ம் திகதி வரை அரசு-புலிகள் முதற் சுற்றுப் பேச்சுக்கள் தாய்லாந்தில் இடம்பெறவுள்ளன.

இப் பேச்சுக்களில் பெரும்பாலும் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இயல்பு வாழ்க்கையை மேலும் ஸ்திரப்படுத்தல் மற்றும் இடைக்கால நிர்வாகம் என்பவை பற்றியே ஆராயப்படுமெனத் தெரியவருகிறது.

அரசு-புலிகள் பேச்சுக்களுக்கான நாள் குறிக்கும் விடயத்தில் ஏற்கனவே இழுபறி நிலையும், தாமதமும் வெளிப்பட்டிருந்தது. இதனால், இரு தரப்பினரதும் சந்திப்புக் குறித்துச் சந்தேகங்களும் தோன்றியிருந்தன. ஆனால், தற்போது தாய்லாந்துப் பேச்சுக்களுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளமை, சமரச நடவடிக்கைகள் குறித்து நம்பிக்கையூட்டுவதாகவே இருக்கின்றது.

பாதுகாப்பு, குழப்பமில்லாத சூழல் போன்றவற்றைக் கருத்திற் கொண்டே அரசு-புலிகள் பேச்சுக்களுக்குரிய இடமாகத் தாய்லாந்து தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலப் பேச்சுவார்த்தைகள் இந்தியா, பூட்டான், கொழும்பு போன்ற இடங்களில் இடம்பெற்றிருந்தன. இப் பேச்சுக்களின் போது இரு தரப்புக்குமிடையே போதிய புரிந்துணர்வு காணப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாகவே முன்னைய பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தன.

ஆனால், இத் தடவை ஆரம்பமாகவுள்ள பேச்சுவார்த்தைகள் முன்னையவற்றிலிருந்தும் பல்வேறு வகையிலும் வேறுபட்ட சூழலில் ஆரம்பமாகவிருப்பதையே அவதானிக்க முடிகிறது.

அரசு-புலிகளுக்கிடையேயான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொண்ட நிலையிலேயே பேச்சுக்கள் ஆரம்பமாகின்றன. பேச்சுவார்த்தை மேசையில் இரு தரப்புக்குமிடையே புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவது என்பது மிகவும் சிரமமான விடயம். ஏனெனில், இரு தரப்புமே பேச்சுக்களை ஆரம்பிக்கும் பட்சத்தில் தாம் முன்வைக்கும் விடயங்களிலேயே நேரடிக் கவனத்தை வெளிப்படுத்துபவையாக இருக்கும். அச் சமயம் ஒரு புரிந்துணர்வு என்ற பின்னணி இல்லாதிருக்கும்.

ஆனால், கடந்த பெப்ரவரி மாதம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் இடையே கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம், பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்பதாகவே இரு தரப்பையும் நெருங்கி வரவைப்பதாக இருந்தது.

அத்துடன், பெப்ரவரியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ரணில்-பிரபா ஆகியோருக்கிடையே ஆரம்பமாகியது முதல் கடந்த ஏழு மாத காலத்தில் சமரச நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கேற்ற சுமுகமான சூழல் இரு தரப்பினாலும் குறிப்பிடத்தக்களவு காத்திரமாக்கப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகிறது.

வன்னி, கொழும்பு, லண்டன், ஒஸ்லோ ஆகிய இடங்களில், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான காலம் முதல் பலதரப்பட்ட சந்திப்புக்கள் இரு தரப்புக்குமிடையே பயனுள்ள விதத்தில் நடந்திருந்தன.

இச் சந்திப்புக்களையடுத்தே தற்போது முக்கிய சுற்றுப் பேச்சுக்களுக்கான திகதி செப்டம்பரில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியாக செப்டம்பர் மாதம் மிகவும் பிரபலமடைந்ததாகவே இருக்கின்றது. ஏனெனில், கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 11ந் திகதி முழு உலகையுமே உலுப்பிவிட்ட தாக்குதல்கள் அமெரிக்கவின் நியூயோர்க் நகரில் இடம்பெற்றிருந்தன.

இரு பயணிகள் விமானங்கள் கடத்திச் செல்லப்பட்டு, அவ் விமானங்கள் மூலம் நியூயோர்க்கில் வானளாவ உயர்ந்து நின்ற இரு வர்த்தக மையக் கட்டடங்கள் மோதித் தகர்க்கப்பட்டிருந்தன. இக் கொடூரச் சம்பவத்தில் சுமார் மூவாயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர்.



அமெரிக்காவின் வல்லரசுப் பலத்திற்குச் சவால் விடுவதாக அமைந்திருந்த இந்த நியூயோர்க் நகரத் தாக்குதல் அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானிற்குள் புகுந்துகொள்வதற்கும் வழியமைத்திருந்தது.

ஆப்கானிஸ்தானில் இருந்து இயங்கிவரும் அல்-குவைதா அமைப்பைச் சேர்ந்த ஒஸாமா பின்லேடனே நியூயோர்க் தாக்குதலின் சூத்திரதாரி எனத் தெரிவித்திருந்தது. அவரைப் பிடிக்கும் விதத்தில் அமெரிக்கா தனது நேச நாட்டுப் படைகள் சகிதம் ஆப்கானிஸ்தானுக்குள் கடந்த வருட இறுதிப் பகுதியில் நுழைந்திருந்தது.

ஒஸாமா பின்லேடனைப் பிடிக்க ஆப்கானிஸ்தானுக்குள் புகுந்த அமெரிக்காவின் நடவடிக்கை, அந் நாட்டினுள் புதியதொரு ஆட்சி அமைப்பை ஏற்படுத்துவதாக இருந்ததே தவிர, ஒஸாமாவை எவ்விதத்திலும் நெருங்க முடியாததாகவே விளங்கியிருந்தது.

இவ் வருடம் செப்டம்பர் மாதம் 11ம் திகதி நியூயோர்க் நகரத் தாக்குதல் இடம்பெற்று ஒரு வருட காலம் நிறைவெய்துகின்றது. அக் கொடூரச் சம்பவத்தின் ஓராண்டுப் பூர்த்தியைக் குறிக்கும் விதத்தில் அமெரிக்காவில் பிரமாண்டமான அஞ்சலி வைபவங்களுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

எனவே, முழு உலகுமே எதிர்பார்த்திருக்கும் இந்த ஓராண்டுப் பூர்த்தியைத் தொடர்ந்தே, தாய்லாந்தில் செப்டம்பர் 16ம் திகதி இலங்கை இனப் பிரச்சனைத் தீர்வு குறித்த முதற் சுற்றுப் பேச்சுக்கள் தொடங்கவுள்ளன.

கடந்த கால சமரச முயற்சிகளின் போது வடக்கு-கிழக்குத் தமிழ் அரசியல் தரப்புக்குப் போதியவு முக்கியத்துவம் தரப்பட்டிருக்கவில்லை. ஆனால், இத் தடவை புலிகளின் முக்கியத்துவம் உணரப்பட்டு, அவர்கள் மீதான தடையும் நீக்கப்பட்ட நிலையிலேயே சமரசப் பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை அண்மையில் அவர் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்கள் யாவும் அரசு-புலிகள் சமரசப் பேச்சுக்களுக்கு ஆதரவைத் தேடுபவையாகவே அமைந்திருந்தன.

இருந்தபோதிலும் இலங்கையில் சமரச முயற்சிகளுக்கு எதிரான சக்திகள் தொடர்ந்து உஷாராகவே இருந்து வருகின்றன.

திருகோணமலையில் கடந்த வாரம் இடம்பெற்ற கண்காட்சியின் இறுதிநாளன்று நிகழ்ந்த சம்பவம் இனவாதிகளின் சுயரூபத்தை வெளிப்படுத்தியிருந்தது.

திருகோணமலையில் சர்வதேச தரத்தில் இடம்பெற்றிருந்த கைத்தொழில் கண்காட்சியைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்குரார்ப்பணம் செய்திருந்தார்.

அங்குரார்ப்பண வைபவத்தின் போது புலிகள் மீதான தடைநீக்கம், வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகம் என்பவை பற்றியும் குறிப்பிட்டுப் பிரதமர் உரை நிகழ்த்தியிருந்தார்.

சமரச நடவடிக்கைகள் தொடர்பாகத் தமது அரசின் நிலைப்பாட்டை விளக்குவதாகவும், இன அன்னியோன்னியத்தின் அவசியத்தை வலியுறுத்துவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அவ்வுரை அமைந்திருந்தது.

ஆனால், சில தினங்களாக அனைத்து இன மக்களையும் கவர்ந்த நிலையில் இடம்பெற்ற அக் கண்காட்சியின் இறுதிநாளன்று இனவாதம் பேசிய காடையர் கூட்டமொன்று தமிழ், முஸ்லிம் மக்களைக் குறிவைத்துத் தாக்கியிருந்தது.

இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற மைதானம் ஒரு யுத்தகளம் போலக்காணப்பட்டதாக நேரிற் கண்டவர்கள் தெரிவித்திருந்தனர்.

ஏறத்தாழ இச் சம்பவத்தைப் போன்றதாகவே முன்பு வடபகுதியிலும் சிவில் உடை தரித்த பொலீஸார் பொது வைபவங்களில் அடாவடித்தனம் புரிந்திருந்தனர்.

1974 ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் வைபவத்தையும் பொலீஸ் கும்பலொன்றே குழப்பியடித்து அட்டகாசம் புரிந்ததில் ஏழு அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

எனவே, இன்றுங்கூட இனவாத சக்திகள் தமது கைவரிசையைக் காட்டி வருவதையே திருகோணமலைச் சம்பவம் புலப்படுத்தியிருந்தது.

இந் நிலையில் தாய்லாந்துப் பேச்சுவார்தைகள் ஆரம்பமாகும் பட்சத்தில் இனவாத சக்திகள் மேலும் குழப்பங்களை உண்டுபண்ண முடியும்.

ஆகவே, திருமலைச் சம்பவம் அரசுக்கு ஓர் எச்சரிக்கையாக அமைந்திருந்ததென்றே கொள்ள வேண்டும்.

---

## அதிரடி அய்யாத்துரை



குடும்பத்தைக் கனடாவில செட்டில் பண்ணிவிட்டு வந்திருக்கிற புரட்சிகரக் கட்சிப் பிரேமைத் தலைவர் போன ஞாயிற்றுக்கிழமை அரசாங்கத் தொலைக்காட்சிக்கு ரையோட தோன்றிப் பேட்டி குடுத்தார். (கனடா ரீவியெண்டு நெச்சிட்டார் போல) டீ சென்ரலைசேஷனெண்டால் லோனாம் (கடன்), டெவுலூஷனெண்டால் கிப்ட்டாம் (அன்பளிப்பு). அதுசரி பாதுகாப்பு அமைச்சிட்ட ரகசிய டீல் போட்டு மாசா மாசம் சுளையா வாங்கிற 10 லகரமும் லோனோ, கிப்ட்டோ எண்டதச் சொல்லிவிட்டு அரசியலப் பேசினால் நல்லாயிருக்கு மெண்ணினம் விஷயமறிஞ்சவை.

அமிரண்ணைக்கு நினைவுநாள் கொண்டாடப் பயந்த கூட்டணிக்காரர் பிறந்தா நாள மட்டும் வலு அடக்கமாக் கொண்டாடியிருக்கினம். பக்குவமா அளந்து அளந்து ரெண்டு பக்கமும் பாத்து வார்த்தைகளைச் செப்பியிருக்கினம். செயலாளர் நாயகம் சம்பந்தர் செப்பினதில "அமிரண்ணைக்கும் தனக்கும் சில முரண்பாடுகள் இருந்தாலும்...". எண்டு ஒரு எஸ்கேப் ருட்ட வன்னியில கேள்வி வராதமாதிரி வலு கவனமா வைச்சிருக்கிறார். என்ன முரண்பாடாம்? அமிரண்ண அரியா சனத்தில இருக்கேக்க இந்த முரண்பாடுகளில ஒண்டத்தன்னும் முன்னுக்குப் போய் முனகியிருக்கலாமே? மண்ணுக்க போய்ப் பல வருஷத்துக்குப் பின்னாலதான் இப்ப முரண்பாடு முளைக்குதோ? அமிரண்ணை இதைக் கேட்டிருந்தால் சீஸர் பாணியில "நீயுமா சம்பந்தா...!" எண்டுதான் சொல்லியிருப்பார். இல்லையெண்டிறியளோ?

மாவைதான் அமிரண்ணையின்ர அரசியல் வாரிசெண்டு கூட்டணிப் பிரமுகர் சிற்றம்பலம் அமிரண்ணையின்ர பிறந்தநாளுக்கு எழுதின கட்டுரை சங்கரியாருக்குக் கொதியக் கிளப்பியிருக்காம். கம்பஸூக்க சுருண்டு கிடக்கிற புரபஸர் மாருக்கு என்ன அரசியல் வேண்டிக்கிடக்கெண்டு கறுவுறாராம். மாவையாருக்கு மகிழ்ச்சிகரமானதாயிருந்தாலும் இப்ப அமிரண்ணையோட அடையாளம் காட்டிறத ஆபத்தா நினைக்கிறாராம். புரபஸருக்கு புலமை இருந்தும் நிலைமை புரியேல்லைப்போல.

பார்லிமென்ட் பெமிட்டில கிடைச்ச பி.எம்.டபிள்யு காரைப் புலித் தலைவர் பிரபாகரனுக்குக் குடுத்திருக்கிறதா வந்த செய்தி உண்மையில்லையெண்டு அழுகிறார் வீநாயகத்தார். அவற்ற பெமிட்ட யாருக்கோ கள்ளமா விக்க அந்த நபர் அதில பி.எம்.டபிள்யு. வாங்கிப் பிரபாகரனுக்குக் குடுத்திருக்கிறதாவும் மறுவிளக்கக் கதையொண்டு இன்னொரு பக்கத்தில அடிபடுது. விநாயகத்தாற்ர வெயிக்கிள் பெமிட் கை மாறிப் போகேல்லையெண்டால் அந்த பி.எம்.டபிள்யுவை அவர்தான் வாங்கியிருக்கிறாரோ? மக்கள் சேவைக்கு இப்ப எல்லாம் பி.எம்.டபிள்யு தான் தேவைப்படுதாமோ? எதுக்கும் ஜனாதிபதியின்ர வாகனக் கொள்வனவு போல இவருக்கும் ஒரு விசாரணை நடத்தினால்தான் விஷயம் வெளியில வரும்போல.

மலையக மக்களின்ர பிரச்சினையளைப் பேச்சுவார்த்தையில கதைக்கத் தேவையில்லை, இங்கயே அரசாங்கத்தோட பேசித் தீர்த்துக் கொள்ளலாமெண்டு சொல்லுறார் அமைச்சர் ஆறுமுகன். அப்பிடியெண்டால் ஏனப்பா மூனு தலைமுறையா இந்தப் பிரச்சினை இன்னும் இழுபடுது? மலையகத் தமிழற்ற பிரச்சினையெண்டது வெறும் சம்பளப் பிரச்சினையெண்டு நினைச்சிட்டார் போல தலைவர். மலையக மக்களுக்கு அரசியல் உரிமைகள் இனத்துவ உரிமைகள் எண்ட ஒரு மண்ணும் கிடையாதெண்டு நிச்சயம்பண்ணிட்டாங்களா?

அதிகரித்து வாற அக்சிடென்டுகளுக்கு பஸ் உரிமையாளர்கள் சரியான பஸ் ரைவர்கள வேலைக்கமர்த்தாததுதான் காரணமேயொழிய அது பொலிஸின்ர பிழையில்லையெண்டிறார் பொலிஸ் அமைச்சர். ஐயா, திருட்டுகள் அதிகரிச்சதுக்கு, திருடன்களின்ர அப்பா அம்மாதான் காரணமெண்டு சொல்லுமாப்போல கிடக்குது இந்தக் கதை. ட்ரைவர்மாருக்குத் தகுதியிருக்கோ இல்லையோவெண்டு சோதிக்கிறது பொலீஸின்ர வேலையில்லாமல் வேற யாற்றையாம்? ட்ரைவிங் லைசென்ஸ் குடுக்கிற இடத்தில லஞ்சம் விளையாடுதெண்டால் அதைக் கண்டுபிடிக்க வேண்டியது யார், அடுத்த நாட்டுக்காரனே? நீங்கள், பொலிசுக்கே லஞ்சம் குடுத்தால்...? எண்டு கேக்கிறியளோ..., நோ நோ, இட் இஸ் டு மெச்!


அரசியல விட்டிட்டு அரசமரத்துக்கு வந்தவர் புத்தர். அவற்ர சீசர்களெண்டு சொல்லுறவை இப்ப அரச மரத்தை விட்டிட்டு அரசியலுக்க ஏனாம் கால் வைக்கினம்? புலித் தடை நீக்கத்துக்கு மல்வத்தை பீடம் எதிர்ப்பாம். யுத்தத்தால ஒண்டும் மிச்சமில்லையெண்டு கடைசிக் கட்டத்தில தன்னும் அசோகன் உணர்ந்தான். அவன் அனுப்பின மிகிந்தனும் சங்கமித்தையும் போதிச்ச விசயங்கள் காதில ஏறேல்லையாக்கும்.

# யானைத் தந்தம் முதல்–நாகப்பா வரை

## வீரப்பனின் கடத்தல் சாதனைச் சுருக்கம்

தமிழக, கர்நாடக காவல் துறையினருக்குப் பெரும் சவாலாக விளங்கும் வீரப்பன், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தனது கடத்தல் நடவடிக்கையைத் தொடங்கி இருக்கிறார். சந்தன மரத்தில் தொடங்கிய கடத்தல், யானைத் தந்தம் கடத்துவதாக மாறியது. நடிகர் ராஜ்குமார் கடத்தலின் மூலம், உச்சத்துக்குச் சென்றது. இப்போது முன்னாள் அமைச்சர் நாகப்பாவைக் கடத்தி மீண்டும் தன்மீது கவனத்தை ஈர்த்திருக்கிறான் வீரப்பன். வீரப்பன் கடந்து வந்த பாதை சுருக்கமாக:

1950: சிறுவனாக இருந்த போதே சந்தன மரங்களை வெட்டியானைகளைக் கொன்று தந்தங்களைக் கடத்தல் காரர்களுக்கு விற்றல்.



1965: கர்நாடக வனக் காவலர்களால் கைது செய்யப்பட்டு, மாதேஸ்வரன் மலையில் இருந்து தப்பித்தல்.

1970: தன்னுடன் கடத்தலுக்கு குழுவைச் சேர்த்துக் கொள்ளல்.

1986: பெங்களூரில் சார்க் மாநாடு நடந்தபோது ஒரு ஆயுதக் கடையில் வீரப்பன் கைது. சிறை வைக்கப்பட்டிருந்த சாம்ராஜ்நகர் வனத்துறை மாளிகையில் இருந்து தப்பித்தல்.

எதிர்க்கோஷ்டியினர் 5 பேரைக் கோபிநத்தம் அருகே வீரப்பனும் அவரது குழுவும் கொன்றனர்.

தமிழக வன அதிகாரி சிதம்பரம் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டார்.

1989.08.04: பாலாற்றுப் பாலத்தில் கர்நாடக வனக் காவலர் மோஹனய்யா வீரப்பன் கும்பலால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1989.08.09: கர்நாடகத்தைச் சேர்ந்த பேகூர் வன அதிகாரிகள் மூன்று பேர் வீரப்பன் ஆட்களால் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டனர். 19 நாட்களுக்குப் பிறகு அவர்களது உருக்குலைந்த உடல்கள் கண்டுபிடிப்பு.

1990.02: சிலுவைக்கல் வனப் பகுதியில் வீரப்பன் ஆட்களால் பதுக்கப்பட்டிருந்த சந்தனக் கட்டைகள் பறிமுதல்.

1990.04.: ஒகேனக்கல் அருகே ஜீப்பில் சென்று கொண்டிருந்த கர்நாடகத்தைச் சேர்ந்த 3 காவல்துறை உதவி ஆய்வாளர்கள், ஒரு காவலரும் கொலை.

பிறகு, கர்நாடக அரசு வீரப்பனைப் பிடிக்கச் சிறப்பு அதிரடிப் படையை அமைத்தது.

1990.05- 1991.09: பொலிஸாரின் பல்வேறு நடவடிக்கைகளில் வீரப்பனின் ஆட்கள் என்று சந்தேகப்படும் 100 பேரை இரு மாநில பொலிஸாரும் கைது செய்தனர். கோடேநாயகா பகுதியில் பொலிஸுக்குத் தகவல் தந்த ஒருவரை வீரப்பன் சுட்டுக் கொன்றார்.

1991.11.10: வீரப்பன் சரணடைய விரும்புகிறார் என்று அவரது தம்பி அர்ஜுனனால் வஞ்சகமாக அழைத்துச் செல்லப்பட்டுகர்நாடக துணை வனப் பாதுகாவலரும் சிறப்பு அதிரடிப்படைத் துணைத் தலைவருமான பி.ஸ்ரீனிவாஸ் தலை துண்டிக்கப்பட்டு கொடூரமான முறையில் கொல்லப்பட்டார்.

தமிழகம், கர்நாடகம் மற்றும் கேரள மாநிலங்கள் சார்பில் சிறப்புப் படை அமைக்கப்பட்டது.

1992.02: கர்நாடக கல் குவாரி உரிமையாளர் சம்பங்கி ராமய்யாவின் மகனைக் கடத்திச் சென்று ரூ.15 லட்சம் பணயத் தொகை பெற்றுக் கொண்டு விடுவித்தான்.

வீரப்பனின் வலது கரமான குருநாதன் கர்நாடகச் சிறப்பு அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1992.05: கர்நாடக மாநிலம் ராமாபுரா காவல் நிலையத்தைத் துப்பாக்கியாலும் கையெறி குண்டுகளாலும் தாக்கி, அங்கு வெளியே படுத்திருந்த சிறப்புப் படை பொலிஸார் 5 பேரை வீரப்பன் குழு சுட்டுக் கொன்றது.

1992.08.: கர்நாடக மாநிலம் மீன்யாம் என்ற இடத்தில் கர்நாடக சிறப்பு அதிரடிப்படை கண்காணிப்பாளர் ஹரி கிருஷ்ணா உதவி ஆய்வாளர் ஷகீல் அகமது மற்றும் 4 பேரை வீரப்பன் குழு கொன்றது. வீரப்பனால் கொல்லப்பட்ட முதல் ஐ.பி.எஸ். அதிகாரி ஹரி கிருஷ்ணா.

1993.04.09: கர்நாடக எல்லை சிலுவைக்கல் என்ற இடத்தில் 14 இடங்களில் கண்ணி வெடி புதைத்து அதிரடிப்படை வாகனம் மீது தாக்குதல். 5 தமிழக காவல்துறையினர், 2 வனத் துறையினர் உட்பட 22 பேர் பலி.

சிறப்பு அதிரடிப்படை கண்காணிப்பாளர் கோபாலகிருஷ்ணன் மற்றும் 7 பொலிஸார் காயம்.

1993.05: கர்நாடக சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்த 6 பேரை வீரப்பன் குழு சுட்டுக் கொன்றது. பொலிஸார் திருப்பிச் சுட்டதில் வீரப்பன் குழுவைச் சேர்ந்த 6 பேர் இறந்தனர்.

1993.06.: வீரப்பனையும் அவரது குழுவையும் பிடிப்பதற்காக 6 கம்பெனி எல்லைப் பாதுகாப்புப் படையினர் கர்நாடக மாநிலம் கொள்ளேகால் அனுப்பப்பட்டனர்.

கர்நாடக மாநிலம் மாதேஸ்வரன் மலை கோயில் அறங்காவலர் உட்பட 15 பேரை தடா சட்டத்தின் கீழ் கர்நாடக பொலிஸார் கைது செய்தனர். குவாரி உரிமையாளர் ஒபுளிசெட்டி உட்பட மேலும் 7 வீரப்பன் ஆதரவாளர்களை கர்நாடக பொலிஸார் கைது செய்தனர்.

1993.08.13: வீரப்பன் குழுவைச் சேர்ந்த 6 பேரைக் கர்நாடக சிறப்பு அதிரடிப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

1993.09: வீரப்பன் குழுவினர் நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1994.08: கோவை அருகே வீரப்பன் கூட்டாளிகள் 3 பேர் பொலிஸாரிடம் சரணடைந்தனர். இதுவே வீரப்பன் தரப்பின் முதல் சரண்.

1994.12: கோவை சிறுமுகை பகுதி தமிழக டி.எஸ்.பி. சிதம்பரநாதன் மற்றும் 6 பேர் வீரப்பன் குழுவால் கடத்தப்பட்டனர். கோவை மாவட்ட ஆட்சியர் சி.வி.சங்கரின் சமரச முயற்சி, கேஸட், ஆட்கள் மூலம் பேச்சு வார்த்தை. வீரப்பனின் நெருங்கிய சகாவான பேபி வீரப்பன் முதன் முறையாக வெளியுலகுக்கு வந்தார். பேச்சு வார்த்தை தோல்வி. 27 ஆவது நாளில் சிதம்பரநாதனும் மற்றவர்களும் வீரப்பன் ஆட்களிடம் இருந்து தப்பி வந்தனர்.

1995.08: பீடரகுளி கிராமத்தில் 5 பேர் வீரப்பன் குழுவால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

1995.09: வீரப்பனின் தம்பி அர்ஜுனன் சேத்துக்குளி ரங்கசாமி, அய்யன்துரை ஆகியோர் பொலிஸ் பிடியில் இருந்த போது, சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டனர்.

1995.11: அந்தியூரில் 3 வன அலுவலர்களைப் பிடித்துச் சென்ற வீரப்பன் பின்னர் அவர்களை விடுவித்தார்.

1996.04: வீரப்பனின் தாக்குதலில் தமிழக சிறப்பு அதிரடிப்படை எஸ்.பி. தமிழ்ச்செல்வன் காயமடைந்தார்.

1997.01: பொலிஸில் சரணடையத் தயாராக இருப்பதாக வீரப்பன் அறிவிப்பு.

1997.04: வீரப்பன் கூட்டாளி பேபி வீரப்பன் உடல் காட்டுப் பகுதியில் கண்டெடுப்பு.

1997.07.12: மைசூர் காட்டுப்பகுதியில் கர்நாடக வனத்துறையினர் 9 பேரைக் கடத்திச் சென்றார் வீரப்பன். பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

1997.07.14: வீரப்பன் சரணடைவதை ஏற்பதாக தமிழக, கர்நாடக அரசுகள் அறிவிப்பு.

1997.10.09: தோட்டக் கலை விஞ்ஞானி மைத்தி, சுற்றுச்சூழல் புகைப்படக் கலைஞர்கள் கிருபாகர், ஷெனானி மற்றும் 3 வனத்துறையினரை வீரப்பன் குழு கடத்திச் சென்றது. 13 நாள் பிணைக்குப் பிறகு விடுதலை.

1997.11.28: வனத்துறை அதிகாரி சிதம்பரம் கொலை வழக்கில் வீரப்பனின் அண்ணன் மாதையன் உட்பட மூவருக்கு ஈரோடு நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தது.

1998.12.21: வெள்ளித்திருப்பூர் காவல் நிலையம் மீது தாக்குதல் நடத்தி துப்பாக்கிகளை எடுத்துச் சென்றனர்.

2000.07.30: பிரபல கன்னட நடிகர் ராஜ்குமார் மற்றும் மூவரை, கர்நாடக எல்லையான தாளவாடி காஜனூரில் இருந்து கடத்திச் சென்றார் வீரப்பன். பழ.நெடுமாறன், கொளத்தூர் மணி, 'நக்கீரன்' கோபால், கல்யாணி, சுகுமாரன் ஆகியோரது முயற்சியில் 108 நாட்களுக்குப் பிறகு ராஜ்குமார் விடுதலை செய்யப்பட்டார்.

2001.06: ஓய்வுபெற்ற ஐ.பி.எஸ் அதிகாரி தேவாரம்,அதிரடிப்படைத் தலைவராக நியமனம். எல்லைப் பாதுகாப்புப் படை ஐ.ஜி. விஜயகுமார் தலைமையில் தேடுதல் வேட்டை தோல்வி.

2002.08.25: கர்நாடக மாநிலம் ஹன்னூரில், கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பா வீட்டில் துப்பாககிச் சூடு நடத்தி, அவரைக் கடத்திச் சென்றது வீரப்பன் குழு. ○

# பார்த்த ஞாபகம் இல்லையோ...? 14



பி.எஸ்.வீரப்பா பற்றி ஏற்கனவே இப் பகுதியில் குறிப்பிட்டிருந்தோம். சிறந்த வில்லன் நடிகர் அவர். 'மகாதேவி' என்ற படத்தில் தோன்றி அவர் சிரிக்கும் அட்டகாசச் சிரிப்பு பார்ப்போரை அச்சுறுத்தும். திரையில் நடிப்பதிலிருந்து விலகிக்கொண்டாலும், பல வெற்றிப் படங்களைத் தமிழ் இரசிகர்களுக்கு அளித்திருக்கிறார்.



ஏ.கருணாநிதி ஒரு நகைச்சுவை நடிகர். மேடை நாடகங்களிலும் நடித்துள்ளார். இருப்பினும் அவர் எதிர் பார்த்தபடி திரையுலகம் அவருக்குப் போதுமானளவு வாய்ப்பளிக்கவில்லை.

கருணாநிதி திரையுல கைவிட்டு நீங்கினாலும் திரையுலகத் தொடர்பை விட்டுவிடவில்லை. அவரை நாடிப் பல நடிக, நடிகைகளும், இயக்குநர்களும், தொழில் நுட்பவியலாளர்களும் தொடர்ந்து சென்று அவரைத் தரிசிக்க வைக்கும் பெருமைக்கு உரியவராகி விட்டார்.

தியாகராய நகரில் ஒரு பெரிய வீட்டில் 'மாமியா ஹொட்டல்' என்றொரு உணவகத்தை ஆரம்பித்தார். இந்த உணவகத்தில் சமைக்கப்படும் கறிவகைகள், வேறு எந்த உணவகங்களிலும் காணபபடாத சுவையுடன கூடியவையாக இருந்தமையினால், திரைப்படத்துறையினர் மட்டுமல்லாது வேறு பல பிரமுகர்களும் இவரது 'மாமியா ஹொட்டலை' மொய்த்தனர்.

கருணாநிதியின் மூதாதையர் சித்த வைத்தியத்துடன் தொடர்புடைய வர்களாக இருந்தனர். கருணாநிதி சமைக்கும் உணவு வகைகளும் பண்டைய முறைப்படிதான் சமைக்கப்பட்டு வந்தன.

ஒவ்வொரு வகையான இறைச்சியைச் சமைக்கும் போதும் அதனைப் பாகம் பண்ணும் முறைப்படி செய்வார். எந்த இறைச்சிக்கு எந்த விறகினை அடுப்பில் வைக்க வேண்டும் என்ற ஒழுங்கு முறை பேணப்பட்டு வந்தது. சமைக்கும் மட்பாண்டங்களும் வித்தியாசமான களி மண்ணைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கும். இதனால் 'மாமியா ஹொட்டல்' சாப்பாடும் சற்று விலை கூடியதாகவே இருந்தது. ○




எம்.ஜி.ஆர். திரைப்படத்துறையில் காலடி எடுத்து வைப்பதற்கு முன்னர் - சிறுவனாக இருந்த போதே நாடக நடிகராக இருந்தார். திரைப்படங்களில் நடித்து உச்சக்கட்டத்தை அடைந்த பின்னரும் நாடக மேடையை அவர் மறக்கவில்லை. அறுபதாம் ஆண்டுகளின் இடைக் காலம் வரை எம்.ஜி.ஆர். பல மேடை நாடகங்களில் நடித்துள்ளார்.

திரைப்படங்களைப் போல் நாடக மேடைகளிலும் சண்டைக் காட்சிகளில் தத்ரூபமாக நடிப்பார். ஒரு நாடகத்தில் ஒரு குண்டு நடிகரைத் தூக்கும் போது மேடைக்குப் போட்டிருந்த பலகை ஒன்று உடைந்தது. எம்.ஜி.ஆரின் வலது கால் பலகை உடைப்பில் புகுந்து முறிந்துவிட்டது. இதனால், நீண்ட நாட்கள் அவர் திரையுலகையும் நாடக உலகையும் விட்டு ஒதுங்கியிருக்க வேண்டியதாயிற்று. திரைப்படங்களில் பின்னர் நடித்த போதும் நாடகங்களை முற்றாகக் கைவிட்டுவிட்டார்.

மேடை நாடகங்களில் எம்.ஜி.ஆரின் கதாநாயகியாக நடித்த ஜி.சகுந்தலா பல படங்களில் எம்.ஜி.ஆரின் நாயகியாகவே தோன்றுவார். 'மந்திரி குமாரி', 'நாம்' போன்ற படங்களில் சிறப்பாக நடித்தார். கதாநாயகிகளாகத் திரைப்படங்களில் நடித்த பல நடிகைகள் பிற்காலத்தில் தமக்கை, தாய் போன்ற வேடங்களை ஏற்றுத் தொடர்ந்து சில காலம் நடித்து வந்துள்ளனர். ஆனால், சகுந்தலா ஒரேயடியாகத் திரைப் படத்துறையை விட்டு ஒதுங்கிக்கொண்டார்.

**பாடலில் தவறு**: கடந்தவாரம் பார்த்த ஞாபகமில்லையோ பகுதியில் எமக்கே ஞாபக மறதியான ஒரு தவறை தொலைபேசி மூலம் வாசகர் ஒருவர் சுட்டிக் காட்டினார். அவருக்கு எமது நன்றி. எம்.ஜி.ஆரும் விஜயலட்சுமியும் 'குடியிருந்தகோயில்' படத்தில் நடனமாடியதைக் குறிப்பிட்டிருந்தோம். அந்நடனத்துக்குரிய பாடலைத் தவறாகத் தந்துவிட்டோம் அப்பாடல் இதுதான்: ஆடலுடன் பாடலைக் கேட்டு ரசிப்பதிலேதான் சுகம் சுகம். தவறுக்கு வருந்துகிறோம். ○



## அதிக விலை

↑ பழைமையான பொருட்களை, ஆபரணங்களை வாங்கிச் சேகரிப்பது சிலருக்கு மிகவும் பிடித்தமான செயல். அதிலும் புகழ்பெற்ற மனிதர்களால் எழுதப்பட்ட கடிதங்கள், பயன்படுத்தப்பட்ட பொருட்களுக்கென்று தனி மரியாதை உண்டு. இந்தப் படத்தில் இருப்பதும் அவ்வாறானதொரு காலத்தால் அழியாத மனிதரின் படைப்புக்கள்தான்.

லியனாடோ டாவின்சியினால் 16ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 350 விஞ்ஞானக் குறியீட்டுக் கருத்துருவங்களின் ஒரு தொகுதிதான் இது.

டாவின்சியின் கைகளினாலேயே வரையப்பட்டதாக நம்பப்படும் இந்த வரைபடத்தின் மூலப்பிரதி சமீபத்தில் வாஷிங்டனில் ஏலமிடப்பட்டபோது அதனை வாங்குவதற்குப் பலத்த போட்டி நிலவியது. ஏராளமான அமெரிக்க, பிரிட்டிஷ் தொழில்நுட்ப நிறுவனங்கள் பல கோடி டாலர்கள் கொடுத்து வாங்க முயற்சித்தன. இறுதியில் மைக்ரோ சொஃப்ட் நிறுவனத் தலைவரும், உலகின் முதல்தர செல்வந்தருமான பில்கேட்ஸ் அவற்றை வாங்கினார்.

லியனாடோ டாவின்சியின் இத்தகைய பல ஆவணங்கள் அடுத்துவரும் நாட்களிலும் ஏலத்தில்விட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ■




## மரக்கட்டைகள்

← அமெரிக்காவும், ரஷ்யாவும் நல்ல நண்பர்கள் என்ற நிலையில் சமீபத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ரஷ்யாவிற்கு விஜயம் செய்திருந்தபோது ரஷ்ய வீதிகளில் அமெரிக்க ஜனாதிபதியினதும், ரஷ்யத் தலைவர் விளாடிமீர் புட்டினதும் உருவப்படங்கள் மரக்கட்டைகளில் செதுக்கி விற்பனை செய்யப்பட்டன. இரண்டு தலைவர்களின் மரத்தாலான உருவங்களையே இங்கு காண்கிறீர்கள். ■



## பாரபட்சம்

← சில காலம் சர்ச்சைகளிலிருந்து ஒய்ந்திருந்த உலகப் புகழ்பெற்ற பொப்பிசைப் பாடகர் மைக்கல் ஜாக்சன் அமெரிக்க ஊடகங்களில் மீண்டும் இடம்பிடிக்கத் தொடங்கியிருக்கிறார். இம்முறை மைக்கல் ஜாக்சன் கறுப்பின இசையமைப்பாளர்கள், பாடகர்களுக்காக வாதாடுவதன் மூலம் களத்தில் குதித்துள்ளார். அமெரிக்காவில் இனப் பாகுபாடு மிக மோசமாகக் காணப்படுகின்றது. வெள்ளையர்களுக்குச் சொந்தமான சில இசைத்தட்டு வெளியீட்டு நிறுவனங்கள் கறுப்பினக் கலைஞர்கள் தொடர்பில் பாரபட்சமாக நடந்துகொள்வதாக மைக்கல் ஜாக்சன் கண்டனக் குரல் எழுப்பியிருக்கிறார்.

முன்னணி இசை வெளியீட்டு நிறுவனங்களுடன் இது குறித்துத் தான் பேசப்போவதாகவும் ஜாக்சன் அறிவித்துள்ளார்.

## தீர்ப்பு

→ படத்தில் காணப்படும் இந்தக் கல்வெட்டு சுமார் 4700 ஆண்டுகள் பழைமையானது. எகிப்து நாட்டில் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஆராய்ச்சியாளர் குழுவொன்று இதனைக் கண்டுபிடித்தது. தலைநகர் கெய்ரோவிற்குத் தென்கிழக்காக உள்ள சக்காரா என்ற இடத்தில் இந்தக் கல்வெட்டு 1992 ம் ஆண்டு மீட்கப்பட்டது. இதன் பெறுமதியறிந்த அமெரிக்கக் கலைக்கூடச் சொந்தக்காரரர் ஒருவர் எப்படியோ பணத்தை வாரியிறைத்து இந்தக் கல்வெட்டை எகிப்திலிருந்து அமெரிக்காவிற்குக் கடத்தி வந்துவிட்டார். ஆனால், எகிப்திய அரசு சும்மா விடவில்லை. இந்தக் கல்லை மீட்டுத் தருமாறு குறிப்பிட்ட கடத்தற்காரருக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தது.

சுமார் 10 வருடங்களாக நடைபெற்ற வழக்கின் தீர்ப்பு சமீபத்தில் வழங்கப்பட்டது. அதன்படி இந்தக் கல்லை அமெரிக்கா மீளவும் எகிப்திடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கூறப்பட்டது. இதனைக் கடத்தியவருக்கு 33 மாத சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது. கி.மு. 1375 ல் வாழ்ந்த மூன்றாவது பரோ அமன் ஹோடப் என்ற மன்னர் காலத்துக்குச் சொந்தமான கல்வெட்டு இதுவென நம்பப்படுகிறது. இதில் ஒரு ஆண் அவனது மனைவி மற்றும் அவர்களது குழந்தையின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. ■

## தகவல் பெட்டி





## ஆடம்பரம்

↑ எதையும் புதுமையாகச் செய்து பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட கனேடியப் பொறியியலாளர் ஹுசைன் மஹ்முத் என்பவரின் தயாரிப்புத்தான் இந்த நீ... ள... மா... ன... கார்.

தனது நிறுவனத்தில் ஒரு பரீட்சார்த்த முயற்சியாகவே இதனை அமைக்கும் பணியில் ஹுசைன் இறங்கினார். இவர் இக் காரில் வீதிகளில் வலம் வரும்போது இந்தக் காருக்குக் கிடைக்கும் வரவேற்பு அவருக்கு மிகுந்த உற்சாகத்தை வழங்கியிருக்கிறது.

இந்தக் கார் 9.7 மீற்றர் நீளமானது. உள்ளே அனைத்து வசதிகளும் உண்டு. தொலைக்காட்சி, வீ.சீ.ஆர் மற்றும் சிறிய மருத்துவ உபகரணங்கள் என அதி நவீன ஆடம்பர வாகனமாக இது தயாரிக்கப்பட்டுள்ளது.

வீ 10 இயந்திரமொன்றின் மூலம் இயக்கப்படும் இந்தக் காரில் பயணம் செய்ய வேண்டுமாயின் மணித்தியாலத்திற்கு 150 டொலர்கள் செலுத்த வேண்டுமாம். ஹுசைன் குடும்பத்திற்கு ஏகப்பட்ட வருமானத்தை ஈட்டிக் கொடுக்கிறது இந்தக் கார். ■



சிம்பரசன்
படம்: காதல் அழிவதில்லை

## சிம்மின் புதிய காதலன்

பிரபல நடிகருடன் கிசுகிசுக்கப்பட்ட அந்த 'ஸ்லிம்' நடிகை இப்போது புதிதாக பஞ்சாப் காதலர் ஒருவரைக் கண்டிருக்கிறார். எல்லா ஏமாற்றுக்காரர்களை விட சொந்த மண்ணைச் சேர்ந்தவர் சொதப்பல் பார்ட்டியாக இருக்க மாட்டார் என்று நம்பியிருக்கிறார்.

இதல் நடுவே ஆட்டக்கார காதலரின் தம்பியான அந்த தாடி நடிகன் அவரிடம் போய் எச்சில் ஒழுகப் பேசி, "நீ நடிக்கும் படங்களில் என்னையும் சேத்துக்கோ" என்று கெஞ்சியிருக்கிறார். அதற்கு நடிகை "நன்றி கெட்ட உனக்கும் உன் குடும்பத்துக்கும் சேர்த்து எவ் வளவோ உழைச் சிட்டேன் போடா வெளியே" என திட்டி அனுப் பியிருக் கிறார்.

## மினி சினி

* சேது தயாரிப்பாளர் 'தம்மாவம்' படத்தையடுத்து 'சதா' என்றொரு படத்தைத் தயாரிக்கிறார். படத்தில் ஹீரோ ராஜசுந்தரம். 'ஐ லவ் யூடா' படத்தையடுத்து ராஜசுந்தரம் நடிக்கும் படம். முதல்முறையாக ராஜசுந்தரம் ஆக்ஷன் வேடமேற்று நடிக்கிறார் இந்தப் படத்தில்.

* 'ஜெமினி' வெற்றியைத் தொடர்ந்து ஏ.வி.எம். அடுத்து ஒரு படத்தைத் தயாரிக்கப் போகிறது. படத்தின் இயக்குனர் விக்ரமன். படத்தில் ஹீரோ சிலம்பரசனாம். சிலம்பரசனுக்கு இந்தப் படத்திற்காகப் பெரிய தொகை சம்பளமாகப் பேசப்பட்டு அட்வான்ஸ் கொடுக்கப்பட்டு இருக்கிறதாம்!

* ஜீவி தயாரிக்க விஜயகாந்த் நடிக்க சேரன் இயக்குவதாக இருந்தது ஒரு படம். சேரன் கேட்ட சம்பளத்தால் மேற்கண்ட படத்திலிருந்து நீக்கப்பட்டார். இப்போது அந்தப் படத்தை இயக்குனர் பிரவாக டைரக்ட் செய்யப் போகிறாராம்.

* ஏ.வி.எம். நிறுவனத்திற்குக் கொடுத்த கால்ஷீட்டைப் பிடுங்கி சந்தர் தியேட்டர்ஸுக்குக் கொடுத்தார் நடிகர் விஜய். ஏவி.எம். ஏ.வி.எம்முக்கும் நடிகர் விஜய்க்கும் இதுபோல் பல முறை நடந்துவிட்டது. சந்தர் தியேட்டர் தயாரிக்கப் போகும் படத்தின் பெயர் கீதை. விஜய்யுடன் நாயகியாக நடிக்க இருந்த நடிகை சஜாதிஜோல. இவர் மும்பை தாமேந்திரா, கும்பகோ... ஹேமமாலினியின் புதல்வி! புதுப் புது நடிகையோடு எப்போதும் கனை இறங்குகிறார் நடிகர் விஜய். கொடு வைத்தவர் என்கிறார்கள் கோடம்பாக்கத்தார்கள்!

* நடிகர் அப்பாஸ் சும்மா இருக்கும்போதெல்லாம் டைரியில் ஏதோ கிறுக்கி வந்தார். இப்போது கேட்டால் நான் கதை எழுதி இருக்கிறேன் என்கிறார். மனி ஸ்கிரிப்ட் ரெடியாம். அந்தக் கதையைத் தானே இயக்கி நாயகனாகவும் நடிக்க இருக்கிறார் அப்பாஸ்.



ஷாம்-மீராஜாஸ்மின்
படம்: பாலா

## இசையிலும் புதுமுகங்கள்

நடிப்பதற்கு மட்டும் புதுமுகங்கள் வரவில்லை. சினிமாவில் இருக்கும் எல்லாத் துறைகளுக்கும் புதுமுகங்கள் வரிசையாக வந்து கொண்டே இருக்கின்றார்கள். இது இசைத்துறை. சசி கணேசன் இயக்கும் 'ஃபைவ் ஸ்டார்' படத்திலும் ஒரு புது முகத்தை இறக்குகிறார்கள். அவர்கள் வேறு யாருமல்ல கலக்கல் பாடகி அனுராதா ஸ்ரீராமும், அவருடைய கணவர் பரசுராமும் இணைந்து இசையமைக்கிறார்கள். தீனா படத்தில் வரும் 'நீ இல்லை என்றால் வாழக்கையும் இல்லை வானவில்லே...' பாடலை பாடியவர் முருகன். 'ஏ நீ ரொம்ப அழகா இருக்கே' படத்தில் ஐந்து மியூசிக் டைரக்டர்களில் இவரும் ஒருவர். இப்போது முருகனும் ஒரு படத்திறகுத் தனியாக இசையமைக்கிறார். இவர் அனுராதா ஸ்ரீராமின் தம்பியாக்கும்!

## ரோஜாக்களின் வாட்டம்

தொடையைத் தட்டிக் கொண்டு சொந்தப் படம் எடுக்க ஆரம்பித்த நடிகை சோர்ந்து கிடக்கிறார். பணப் பற்றாக்குறை காரணமாக. பல ஃபைனான்ஸியர்களைப் பார்த்தார். படத்தில் நடிக்கும் நாயகிகளின் இன்றைய மார்க்கெட் திருப்தியாக இல்லை என்று சொல்லிக் கைவிரித்து விட்டார்கள். ரோஜாக்கள் இப்போது வாட்டத்தில்.

## புதுமைப் பெண்

'ஜெமினி' படம் தமிழில் சக்கைபோடு போட்டது. இப்போது அந்தப் படத்தின் கதையைத் தெலுங்கில் ரீமேக் செய்கிறார் இயக்குனர் சரண். நாயகியாக பைரவி என்னும் ஒரு புதுமுகத்தை அறிமுகப்படுத்துகிறார். பைரவியின் உண்மையான பெயர் நமீதாவாம். நமீதா என்றால் குஜராத்தி மொழியில் பெரியவர்களை மதிப்பவர் என்று பொருளாம். எனக்கு இருபது வயது என்று வயதை மறைக்காமல் சொல்லும் பைரவி தன்னுடைய காதலையும் மறைக்கவில்லை. காதலிக்கிறாராம். பரவாயில்லையே புதுமைப் பெண்தான்!





## காதோடு சொல்லுகிறோம்

'பல்' படத்தைத் தயாரித்த அந்த 'கிங்' தற்போது 'வெயிட்' இல்லாத வார்த்தை கொண்ட படத்தை எடுத்து வருகிறார். அதில் அறிமுகமாகி நடித்துவரும் மிஸ் இந்தியா நடிகை அந்த தயாரிப்பாளருடன் குடியும் குடித்தனமுமாக இருந்து வருகிறார். அது பற்றி அவரிடம் கேட்டதற்கு வேண்டாதவர்கள் எதையாவது பொய்த் தகவல்களைச் சொல்லிப் பரப்பிவிடுவார்கள். நான் வந்ததுமே ஒரு படம் கூட ரிலீஸ் ஆகாமல் நான்கு படங்களில் நடிக்கிறேன் என்ற பொறாமையால் புரளியைக் கிளப்பி விடுகிறார்கள் என்கிறார். சரி ஷூட்டிங் இல்லாமல் இரண்டு பேரும் வெளிநாட்டிற்குச் சென்று கூத்தடித்தது கூடவா பொய்.

'உதய'மான நடிகர் அவர். அவர் நடித்த எந்தப் படமும் இதுவரை ஓடவில்லை. இருப்பினும் படங்களில் நடிப்பது போல செய்தியும், படமும் வெளிவருகிறது. அவரின் தந்தை அழகிய தயாரிப்பாளர். தனது நெருங்கிய நண்பரும் சாதிக் கட்சித் தலைவருமானவரிடம் பலமுறை கேட்டு இருக்கிறார். அவரோ ஜோதிமயமான நடிகையை அனுப்பச் சொல்லி இருக்கிறார். நடிகையுடன் பேசிப் பார்த்ததில் எத்தனை லட்சம் தந்தாலும் வேண்டாமென்று மறுக்க, இப்போது நடிகையின் செயல்களைப் பற்றி கன்னாபின்னாவென்று பேசி வருகிறார். எல்லாம் கலிகாலமடா சாமி.

பல வருடங்களாக 'காமெடி' செய்து வரும் நடிகர் அவர். பெரிதாக எதுவும் சாதிக்கவில்லை. ஒரு 'டி.வி' அழைத்து அவருக்கு 'காமெடி' டைம் கொடுத்து உற்சாகப்படுத்தியது. ஒரு நாளைக்கு 10,000 சம்பளம். நண்டு கொழுத்தால் வலையில் இருக்காது என்பது போல அவர் இப்போது சக துணை நடிகைகளையே மேய ஆரம்பித்திருக்கிறார். நண்பர்கள் புத்திமதி சொல்லிப் பார்த்தும் திருந்துவதாக இல்லை. ஆகவே மக்களிடம் கொண்டு சென்று திருத்தப் பார்க்கின்றனர். நல்ல நண்பர்கள்தான்.

பிரபல ஹீரோ நடித்து வெளிவந்திருக்கும் படம் 'இளமை'. அந்தப் படத்தின் விளம்பர ஸ்டண்டுக்காக ரசிகர்களை வைத்து தியேட்டரின் ஸ்கிரீனைக் கிழிக்கச் சொல்லி அந்தச் செய்தியைப் பத்திரிகைகளில் பெரிதாக வெளியிட வைத்தார்கள். படம் நன்றாக வந்தும் ஏன் இப்படி 'சீப் பப்ளிசிட்டி'யில் ஈடுபடுகிறார் அந்த நடிகரின் தந்தை என்று கோடம்பாக்கம் திட்டித் தீர்க்கிறது. ஒரு தியேட்டரில் கிழித்தால் பரவாயில்லை. எல்லாத் தியேட்டரிலுமா இப்படி 'ஒன்ஸ்மோர்' கேட்டுக் கிழிப்பார்கள்!

'நான் ரெடி' என்று பாடிய நடிகை அவர். தமிழ், தெலுங்கு படத்தில் நடித்து வந்தாலும் மனநிம்மதி இல்லாமல் அல்லாடுகிறார். அவருக்கு ஆறுதல் சொல்பவர்கள் ஆடி முடிந்ததும் ஓடிவிடுகிறார்களாம். சரி கல்யாணம் செய்து கொள்ளலாம் என்றால் அம்மா அதற்கு ஒப்புக்கொள்ள மறுக்கிறார். இன்னும் இரண்டு வருடத்தை எப்படிப் போக்குவது என்று நல்ல நண்பர்களை வலை வீசித் தேடி வருகிறார்.

டி.வி.சீரியலில் கோபுரமாக உயர்ந்தவர் அந்த அம்மு நடிகை. தனக்குச் 'சான்ஸ்' தருவதாகச் சொன்னால் சரி. உடனே வயதோ முகமோ எதையும் பார்க்காமல் முழு ஒத்துழைப்புக் கொடுத்து கிறங்கடித்து விடுவாராம். அண்மையில் பிரபல மூன்று எழுத்து காமெடி நடிகரைக் குஷிப்படுத்தி இருக்கிறார். அவர் மூலமாக அடுத்தடுத்த பட வாய்ப்புக்களைப் பெற்று விடமுடியும் என்று நம்புகிறார். சீக்கிரம் வளர்ந்தால் சரி.

அண்மையில் விபச்சார வழக்கில் கைதான மாதுரி, இப்போது திரைக்குப் பின் யார் யார் தொழிலில் இருக்கிறார்கள் என்ற அட்டவணையைத் தயாரித்துக் கொடுக்கவிருக்கிறார். அதை ஒரு பத்திரிகைத் தொடராகவும் வெளியிட இருக்கிறார்.



# அஜித்துக்குப் போட்டியாக சூர்யா

'தீனா' படத்தில் அஜித் நடித்ததைப் போன்ற கெட்டப்பில் நடிக்கத் திட்டமிடுகிறார் சூர்யா.

உங்களுக்குத் தெரிந்த நடிகர் சூர்யா அல்ல இவர். இயக்குனர் எஸ்.கே.சூர்யா.

ஏற்கனவே 'நியூ' படத்திற்காக சிம்ரனுடன் அட்டகாசமான முத்தக் காட்சியில் நடித்து அதனைச் சென்னை முழுவதிலும் போஸ்டராக ஒட்டிக் கலக்கி வருபவர் இந்தச் சூர்யா.

தான் அடுத்து நடிக்கவிருக்கும் படங்களில் அஜித் போன்ற வித்தியாசமான கேரக்டர்கள் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுவதாகக் கூறுகிறார்.

# ரம்யா கிருஷ்ணனுக்கு நேரம் சரியில்லையாம்

ஒருவழியாகத் திருமணம் நிச்சயம் ஆகிவிட்டது நடிகை ரம்யா கிருஷ்ணனுக்கு. ஏற்கனவே பல வருடங்களாக கிசுகிசுவில் இருப்பதாகப் பேச்சு வந்து கொண்டிருக்கையில் இந்தக் கல்யாண விஷயம் ரம்யாவிற்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. இந்த வருடத்தில் கல்யாணத்தை முடித்துவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கையில் வந்தது ஒரு தடை. இப்போதைக்கு ஜாதகம் சரியில்லையாம். 2003 இல் தான் நேரம் நன்றாக இருப்பதாக ஜோசியா சொல்லிவிட்டாராம். அதனால் 2003 இல் தான் டும் டும் டும். "என் பெயரை ரம்யா கிருஷ்ணா என்று மாற்றி விட்டேன். ஆனால் பத்திரிகைகள் ரம்யா கிருஷ்ணன் என்று போட்டு வருகிறார்கள். அதனால்தான் திருமணம் தள்ளி போகிறது" என்று புலம்புகிறார் ரம்ஸ். "இன்னும் ஐந்து வருடங்கள் போனால் அறுபதாம் கல்யாணம் பண்ணிக்கிடலாம் இந்த அம்மா" என்று அவருடைய உதவியாளர் ஒருவரே கிசுகிசுக்கிறார்.

# முத்தத்தின் விலை என்ன?

'துள்ளுவதோ இளமை' கொடுத்த உற்சாகம் அதே ஸ்டைலில் பல படங்கள் வருவதற்குத் தயாராகிவிட்டன. அந்த வரிசையில் வர இருக்கும் '4' படத்தின் படப்பிடிப்பின் போது நடந்த ஒரு சுவாரஸ்யமான ஒரு விஷயம். படத்தின் இயக்குனரும் படத்தின் நாயகனுமானவர் நாயகியின் உதட்டோடு உதடு வைத்து முத்தமிடுவதாக ஒரு சீன் எடுக்க வேண்டும். நாயகியிடம் கேட்டால் என்ன சொல்வாரோ, கேட்டு அனுமதி கொடுத்தாலும் அது காட்சியில் நன்றாக வருமோ வராதோ என்று பயந்து, கடைசியில் ஒரு முடிவெடுத்தார். அது: "நாயகியிடம் அனுமதி கேட்காமல் நான் முத்தமிடுகிறேன் அதை அப்படியே படம் பிடித்துவிடுங்கள் வருவதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று கேமிராமேனிடம் சொல்லி அதேபோல் முத்தமிட்டு அந்தக் காட்சியை மிக அழகாக எடுத்து விட்டார். ஆனால் நாயகி என்ன சொல்வாரோ, நாயகியின் தாய்க்குலம் என்ன செய்யுமோ என்று பயம். நாயகிக்கு சந்தோஷம்-வெட்கமாக இருந்தாலும் தாய்க்குலம் என்ன சொல்லுமோ என்று நாயகியும் பயந்தாராம். மாதர்குலத்திற்குத் தெரிந்தும் ஒன்றும் சொல்ல வில்லை சம்பளத்தில் போட்டுக் கொடுங்க என்றாராம்.





# ரம்யாவுக்கு வெட்டு

பாபா படத்தில் நடித்ததற்கு மிகவும் வருத்தத்தோடு இருக்கிறார் ரம்யா கிருஷ்ணா. படப்பிடிப்பின்போது ஒரு பாட்டு ஏழு சீன் எடுத்தார்களாம். ஆனால் படத்தின் நேரத்தைக் குறைப்பதற்காக ரம்யாவின் சீன்களைக் கத்தரித்து விட்டார்களாம்!

படத்தில் இரண்டே இரண்டு சீன்களில் தான் வருகிறார் ரம்ஸ் நீலாம்பரி! வேதனை மேல் வேதனை போதுடா சாமி!

# வலைக் டும்பம்

டைரக்டர் கதிரும், விஜயகுமாரின் மகள் ஸ்ரீதேவியும் காதலித்து வருவது ஊர் அறிந்ததே. இப்போது அவர்கள் ஊர் ஊராகச் சுற்றித் திரிந்து காதலை 'டெவலப்' செய்து வருகின்றனர். கல்யாணத்திற்கு முன்பே ஏடாகூடம் ஆகிவிடப்போகிறது என, கலைக் குடும்பமே கவலைக் குடும்பமாக மாறி இருக்கிறது.




# புதுமைப் படைப் பாக நிலைக் கண்ணாடி

மேக்கப்பால் கெட்டப்பை மாற்றும் ஹீரோ இல்லை. ஹீரோவைத் துரத்தி துரத்திக் காதலிக்கும் ஹீரோயின் இல்லை. திடீரென வெளிநாட்டு குளுகுளு லொகேஷனில் ஆடிப்பாடும் டூயட்டும் கிடையாது. அனல்பறக்கும் 'டிஷ்யூம் டிஷ்யூம்களும்' நோ. பிரமாண்டமான பட்ஜெட், செட் நஹி... பிறகு என்னதான் 'நிலைக் கண்ணாடி' படத்தில் இருக்கிறது?

ஏறக்குறைய 1800 சதுர அடி அளவுள்ள ஒரு ஹோட்டல் ரூமில் நடைபெறும் சம்பவங்கள்தான் படத்தின் இரண்டு மணி நேரக் கதை என்கிறார்கள். ஹைலைட்டான விஷயம் படம் முழுவதும் கேமராவை ஒரே 'பொஸிஷனில்' வைத்துப் படம் பிடிக்கப் போவதுதான்.

நூற்றி எண்பது டிவி விளம்பரப் படங்களைத் தயாரித்திருக்கும் ஏசி ஃபிலிம்ஸின் அஜித்குமார், சந்திரசேகர் இருவரும் இணைந்து இந்தப் புதுமையான 'கான்செப்டை' உருவாக்கியிருக்கிறார்கள்.

"சினிமாவில் க்ளோஸப், லாங்ஷாட், பேனிங் ஷாட்கள் இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாது என்ற தியரியை உடைத்திருக்கிறோம். கேமராதான் நகராதே தவிர, படத்தின் கேரக்டர்கள் நகருவார்கள். அவர்களின் மூவ்மெண்டுகளும் லாங்ஷாட், க்ளோஸப் போன்ற விதவிதமான உணர்வைக் கண்டிப்பாகத் தரும். இதற்காக ஆறு மாதமாக உழைத்து கோரியோ கிராஃபியைச் செய்திருக்கிறோம். இரவு, பகல் வித்தியாசங்களைக் கூட லைட்டிங்கில் அருமையாகக் கொண்டு வந்திருக்கிறார் கேமராமேன் ஓம்பிரகாஷ். பொதுவாக முதலில் செட் போட்டு, பிறகுதான் கேமரா ஆங்கிளை வைப்பார்கள். ஆனால் நாங்கள் முதலில் கேமராவை ஒரே இடத்தில் ஃபிக்ஸ் பண்ணி விட்டு, அதற்கேற்ற மாதிரி செட் போட்டிருக்கிறோம்...." என்றபடி இருவரும் சிரிக்கிறார்கள்.

இளமை ததும்பும் த்ரில்லர் சப்ஜெக்ட் என்பதால் மேகா, உபாஸனா, பவித்ரா, சூரியா என அழகு மாடல்களின் பட்டாளம் கண்சிமிட்டுகிறது.

— ஷாம்

முகப்பில் மீராஜஸ்மின்

சினி விசிட்

## உறுதிமொழி செப்புவது எப்போதடி

நீயும் நானும்
கரம் கோர்த்துத் திரிந்த
அந்தக் காலச் சுவடுகளில்
என் நினைவுகள்
கண்ணீரைச் சிந்துகின்றன!

நம்மிருவரால் பாடப்பட்ட
காதல் கீதங்கள் எல்லாம்
எங்கோ ஓர் மூலையில்
செல்லரித்துக் கிடக்கின்றன!

நம்மால் பரிமாறப்பட்ட
சுகங்கள் -இப்போது
என்னிடம் மட்டும்
சோகங்களாய் உருமாறி
என்னைத் தகர்க்கின்றன!

உன்னை ஒருமுறையாவது
பார்க்கத் துடிக்கும்
என் விழிகளும்...
உன்னைத் தேடித் தேடியே
கடந்து போகும் என் கால்களும்...
தவங்களையே
தவங்களாக்கிவிட்டன!

நாட்கள் நகர்வது இப்போதெல்லாம்
நகரவதையாகிவிட்ட சாபங்கள்!
வரண்டு போன கண்களில்
இன்னும் உன் விம்பம்
விட்டுப் போகவில்லை!

நாமொன்று சேரும்
காலமொன்று உருவாகுமெனக்
காத்திருக்கும் என் உயிருக்கு...
ஒரு உறுதி மொழி
செப்புவது எப்போதடி
என் கண்மணி!!

வே.கர்ணாநிதி, டயகம கிழக்கு.

## சுகமான சுதந்திரம்

போர்க் களத்தில் நிராயுதபாணியாக
நின்று எதிரிகளிடமிருந்து,
உயிர் தப்பி ஓடிவந்தபோது
இருந்த நிம்மதி கூட
உன் மடியில் தலைசாய்த்து
உறங்குவது போல சுகமான
சுதந்திரமில்லை!
உன் நகங்களை வெட்டுகையில்
நான் கொண்ட நிதானம் போல;
மருத்துவராக இருந்து அறுவை
சிகிச்சை செய்யும் போதுகூட
அப்படிக் கவனமாக இருந்ததில்லை.
உன் புருவங்களுக்கு
மை பூசும் போது
இருந்த இரசனையைப் போல;
ஓவியங்களுக்கு வர்ணம் தீட்டும்
போது கூட
நான் இரசித்ததில்லை!
உன் பெயரைப் போல
என்னை வியக்க வைத்த, இரசித்த
அழகிய ஹைகூ கவிதையை
இதுவரை நான் கேட்டதேயில்லை.
அந்த மாளிகையைக்
கட்டும் போதுகூட
உனக்குக் காதல் கடிதம்
எழுதும் போது இருந்த
திட்டம் போல என்
சிந்தனையைச் சிரமப்படுத்தியதில்லை!
எத்தனை அடை மழையில்
நனைந்திருப்பேன் நான்!
உன் பார்வைப் பனிதான்
எனக்கு ஜலதோஷத்தையே
ஏற்படுத்தியது.
எத்தனை ஆழ் கடலில்
நீந்தியிருக்கிறேன்!
ஆனால்,
உன் அழகின் நதியில்தான்
நீச்சல் மறந்து
மூச்சுத் திணறியது எனக்கு!

ஏ.எப்.எம்.றியாட்,
முள்ளிப்பொத்தானை.

## ரத்தம் சொட்டும் காதல்

சிதைந்து போன சித்திரமாய்
மனம் புண்பட்டு
குமுறிக் கொள்கிறது

யௌவன வாழ்வின்
துயரப் படிகளோ
இரும்பு மூட்டையாக
என் முதுகில்

கீறல் விழுந்த இதயத்தில்
ஓரங்களில் கூட
ஒரு சொட்டேனும்
நம்பிக்கையில்லை,

என் ஆத்மா
இளைப்பாற நினைக்கும்
ஒரு மௌனமான சூழலில்
உன் மடியில்

நினைத்துப் பார்க்கிறேன்
நீ என் உயிருக்கு
பால் வார்த்த-அந்த
முக்தியான நிமிடங்களை,

என் ஏக்கங்கள் இலட்சியங்கள்
உன்னைப் பிரிந்தபோதே
முற்றிற்று.

வாழ்க்கை வளயமானதுதான்
என்னால் வளைய முடியவில்லை
நெகிழ்ந்து போனேன்

நீ என்னைப்
பார்க்கவே வேண்டாம்
நான் குற்ற உணர்வோடு
அழுதுவிடுகிறேன்

உனக்குத்தான் முதலிடம்
என்னுள் நீதான்
முதலாமவள்

உன்னிடம் மண்டியிடுகிறேன்
ஒரு
தேசத்துரோகி போல்
மன்னிப்புக் கோருகிறேன்

அம்மா
உன் இலட்சியங்களை
சிதறடித்த
இந்த மகனை
மன்னிப்பாயா?

ஒலுவில் அபுஸர்பான்.

## உனக்கென்ன பயம்

இது முடிவல்ல...
இனித்தான் ஆரம்பம்
இன்னல்கள் கண்டு
இளித்தது போதும்
ஈனர்கள் சிலரை
ஈயாதோர் பலரை
இன்முகம் கொண்டு
ஈர்த்தது போதும்...,

உனக்கென்ன பயம்
உலகை மாற்றிட...
உரல் போலவே
உனக்கவர் இடிக்க
ஊர் விட்டா போகணும்?
ஊற்றெடுக்கும் நீர் போல்
ஊறிடினும் உன்னுணர்வு
ஊட்டிவிடு வீரமதை
எத்தனை நாட்கள்
எள்ளாய் இடிபடுவாய்?

எறும்பதன் செயலாய்
எழுந்திடு உயர்ந்திட...
விரைந்து காலம் மாற
உதைத்தவர் உதைபடணும்
வதைத்தவர் வதைபடணும்
வேண்டியதைக் கொடுத்துவிட
உனக்கென்ன பயம்?

கடன்பட்ட நீ
கொடுத்திட எழுந்திடு
உண்மைத் தலைவன்
உன்னால் கிடைக்கட்டும்!

திக்கம் சி.மதியழகன்,
அல்வாய்.

## துயருணர்தல்

வர வர
அருகிக்கொண்டே வருகின்றது
என்னிடமிருந்து வார்த்தைகள்

முகம் புதைத்தழ
நான் விரும்பிய மடிகளெல்லாம்
ஒவ்வொன்றாய்
மண்ணரித்துக்கொண்டு போகிறது

எந்த நாகம்
எந்தப் பிறப்பில்
மண்ணில் கொத்திச்
சாபமிட்டுப் போயிற்றோ,
சிரமமாய் நான்
இழந்துகொண்டிருக்கிறேன்
உறவுகளையும்,
உயிர்வாழ்தலின் மீதான காதலையும்.

உறங்கிப் போன முகத்தைப் பார்க்கவோ
உடைவுற்ற குரலைக் கேட்கவோ
முடியாத தூரத்திலிருந்தும்
உன்னால்
நுகர்ந்துவிட முடிகின்றது
என் ஆழத்துணர்வுகளை.

நன்றி நண்பியே!
திடம் பற்றி எழுதியிருந்தாய்
நான் கேட்டுக்கொள்வதும்
என்றோ ஒருநாள்
எங்கோவோர் சாலையோரம்
நான் அடிபட்டு
இறந்துபோன செய்தி
மிகத் தாமதமாக வந்துசேரும் போதும்
திடம் கொள்
இதுவும் கடவுளின் தீர்ப்பு என்று!

மனோகவி, திருக்கோவில்.

## தேன் கிண்ணம்

## மரம் தழைக்க வேண்டும்...

வாழ்க்கை என்பது மரம்
மரணம் என்பது நிழல்
வசந்தம் என்பது கனி
நிழலைப் பற்றிப் பேசியே
கனியைக்
காயப்படுத்திவிடுகிறோம்!
***
இந்த உலகம்
உருப்படியில்லாத
மனிதனைத் தவிர
வேறெதனையும்
உருப்படியாய் உருவாக்கவில்லை...
***
என்
பேனாவிலிருந்து உதிரும்
ஒரு மைத் துளி
ஓராயிரம் பேரைச்
சிந்திக்க வைக்கும்...

உணவுக்கு உப்பைப் போல
வாழ்தலுக்குத் துன்பம்
அவசியம்தான்,
அளவோடு இருந்தால்...
***
தினமும் தலைமுடியைச்
சீர்செய்கின்ற நாம் -ஏன்
தினமும் இதயங்களைச்
சீர்படுத்தக்கூடாது?
***
பொய்க் குதிரைகள்
பாய்ந்து செல்லும்
உண்மை நத்தைகள்
ஊர்ந்தே செல்லும்
***
உண்மையின் வேர்கள்
கசப்பானவை...
அது தரும் கனிகள்
இனிப்பானவை...
***
போயடையும்
இலக்குத் தெரியாமல்
ஓடி என்ன பயன்?
***
உணவை விலைக்கு
வாங்கலாம்... ஆனால்,
பசியை வாங்க முடியாது!
***
இனியேனும் நிழல் விடுத்து
கனி பற்றிச் சிந்திப்போம்...
நம்முடைய மரம்
தழைக்க வேண்டும்
வாருங்கள் மானிடரே
கனி விதைப்போம்..!

சண்முகம் சிவகுமார்,
ஸ்ரீபாத கல்வியற் கல்லூரி, பத்தனை.

## மைமலைக் சூட

காதல் காவியத்தில்
கள்வனின் சதியால்
கத்தரிக்கப்பட்ட
கதாநாயகி நீ!

துன்பக்கடலில்
துடுப்பில்லாமல்
கரையேறத் துடிக்கும்
கட்டுமரக் கப்பல் நீ!

சமூகச் சாக்கடையில்
சந்தம் பாடும் ஈக்களின்
பார்வைக் கணைதனில்
பட்டுவிட்ட பாதகி நீ!

விதியின் வலையில்
விழுந்திட்ட போதிலும்
விடுவித்துக்கொள்ளாத
விலாங்கு மீன் நீ!

வெள்ளையாடையில்
விதவையெனும் பெயரினில்
பூட்டிக்கொண்ட கூண்டினில்
பூட்டப்பட்ட பறவை நீ!

கரம் பிடித்த காவலனை
காலனவன் காவிக்கொள்ள
சில்லினை இழந்து தவிக்கும்
சித்திரத் தேர் நீ!

வடம் பிடிக்க வருவான்
வாழ்க்கைப் புத்தகத்தின்
புதுப் பக்கம் புரட்டும்
புது மனிதனொருவன்!

வெள்ளை ஆடைதனை
விட்டெறிந்துவிட்டு
முல்லை மலரொன்றை
முடியில் சூட்டிக்கொள்!

வேண்டாத பெயரினில்
ஏசுவோர் யாருமில்லை
இறைவனின் தீர்ப்பு
இதுவான பின்...

ராமன் ஏ.சதீஷ், மஸ்கெலியா.

## பேனா நண்பர்கள்



பெயர்: க. கனகராஜா
வயது: --
முகவரி:
S.M. KANAKARASA,
P.O.BOX-4212,
A.B.C COMPANY,
DOHA-QATAR.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்: ச. நிசாந்தன்
வயது: 23
முகவரி:
148/6, கடற்கரை வீதி,
நீர்கொழும்பு.
பொழுது போக்கு:
பத்திரிகை,
கிரிக்கெட்.



பெயர்:
எம். ஜவ்ஃபர்
வயது: 20
முகவரி: இல. 64,
2ஆம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.
பொழுது போக்கு:
பத்திரிகை, ரி.வி.,
கிரிக்கெட்.

## நினைத்து, நினைத்து சிரிக்க

ஒரு காதலன் தன் காதலியைப் பூங்காவிற்கு அழைத்துக்கொண்டு போனான். ஒதுக்குப் புறமாகப் பார்த்து இருவரும் உட்கார்ந்தார்கள். அங்கு இவர்களைப் போன்ற சில ஜோடிகள் மிக நெருக்கமாக அமர்ந்திருப்பதைப் பார்த்துக் காதலி கேட்டாள்.

**காதலி:** என்னை எதுக்காக இங்கே கூட்டிக்கிட்டு வந்தீங்க?
**காதலன்:** சும்மாதான்.
**காதலி:** நேரம் போய்க்கொண்டிருக்கிறதே... நீங்க என் பக்கத்தில நெருக்கமா வந்து உட்காருவீங்களா?
**காதலன்:** சீச்..சீ அப்படியெல்லாம் செய்ய மாட்டேன்.
**காதலி:** எல்லோரும் போனபின்பா என்னைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுப்பீங்க?
**காதலன்:** சீச்..சீ நான் அப்படியெல்லாம் செய்யவே மாட்டேன்.
**காதலி:** இருட்டின பிறகா என்னை.....?
**காதலன்:** நான் அப்படியெல்லாம் செய்ய மாட்டேன். நான் ஒரு 'ஜென்ரில்மன்'.
**காதலி:** பின்னே எதுக்காக என்னை இங்கே கூட்டிக்கொண்டு வந்து தொலைச்சீங்க...!

சிங்கம், நரி, கழுதை மூன்றும் சேர்ந்து வேட்டைக்குப் போயின. மாலையில் வேட்டையாடிக் கிடைத்த பறவைகளையும், மிருகங்களையும் எடுத்துக்கொண்டு வந்து ஆற்றங்கரையில் போட்டன. சிங்கம் கழுதையைப் பார்த்து, "காலையிலிருந்து நாம் வேட்டையாடின இவைகளை மூணு பங்காகப் பிரிச்சு வை" என்றது.

கழுதை எல்லாவற்றையும் மூன்று சமபங்குகளாகப் பிரித்துப் போட்டது. உடனே சிங்கம் கழுதை மேல் பாய்ந்து ஒரே அடியில் கொன்றது. அந்தக் கழுதையையும் செத்த மிருகங்களோட சேர்த்து வைத்துவிட்டு நரியைப் பார்த்து சிங்கம், "இவற்றை இரண்டு பங்காகப் பிரித்து வை" என்று சொன்னது. உடனே நரி ஒரேயொரு காகத்தை மட்டும் தனக்கு எடுத்துக்கொண்டு மீதி எல்லாவற்றையும் சிங்கத்தின் பக்கம் தள்ளி வைத்தது. அதைப் பார்த்த சிங்கம், "ஆஹா! அற்புதமாகப் பங்கு பிரித்திருக்கிறாய். இவ்வளவு புத்திசாலித்தனமாகப் பங்கு பிரிக்க யார் உனக்குச் சொல்லித் தந்தது?" என்று கேட்க, நரியோ, "இந்தச் செத்துப்போன கழுதைதான் சொல்லித் தந்தது" என்று சொல்லியது.

மேட்டர்லிக் என்பவர் பெல்ஜியம் நாட்டில் புகழ்பெற்ற எழுத்தாளர்.

அவரிடம் ஒரு பழக்கம். அவர் எழுதிக் கொண்டிருக்கும் போது, யாராவது அவரிடம் பேசினால், அவருக்குப் பொல்லாத கோபம் வந்துவிடும்.

ஒருநாள் அவர், வீட்டிலுள்ள ஒரு அறையில் எழுதிக் கொண்டிருந்தார். அந்த அறையில்தான் அவருடைய மனைவியின் விலை உயர்ந்த நகைகள் அடங்கிய பெட்டி இருந்தது. எதைப் பற்றியும் அவர் கவனிக்காமல் அவர் எழுதிக் கொண்டிருந்த போது, திருடன் ஒருத்தன் ஓசைப் படாமல் வந்து அந்த நகைப்பெட்டியைத் திருடிக் கொண்டு போய் விட்டான்.

தற்செயலாக அந்த அறைக்கு வந்த அவர் மனைவி, நகைப்பெட்டி திருட்டுப் போய் விட்டதைக் கவனித்து ஓடிவந்து, "நீங்க எழுதிக்கிட்டிருக்கும் போது யாரோ திருடன் இங்கு நுழைந்து என்னோட நகைகளை திருடிக் கொண்டு போயிட்டான்"என்று பதறினாங்க.

உடனே மேட்டர்லிக், "ஒரு திருடன் என் வேலைக்குக் காட்டும் மரியாதையைக் கூட, உனக்குக் காட்டத் தெரியலையே!" என்று கோபத்தில் மனைவியைப் பார்த்துக் கத்த ஆரம்பித்தார்.

## கவிதை நெஞ்சங்களுக்கு!

இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக நம் நாட்டு இளங் கவிஞர்கள் மூவரின் கவிதைகளை இங்கு தருகிறோம்.



### கீதங்கள் அழிந்தபோது

போரின் கனத்த குரல்
இப்போது கேட்கவில்லை

அனேகமாக எல்லோரும்
போய் விட்டார்கள்

எங்கு என்ற கேள்வி வேண்டாம்
போரின் கனத்த குரல்
ஒலிக்கும் போது
கேள்விகளைக் குறைத்துக் கொள்வோம்
அது மிகவும் நல்லது
இப்போதும் கேள்விகள் வேண்டாம்!

நிலவு காலிக்கும் வேளையில்
நீண்ட தூரம் செல்வேன்

இரைச்சலை விழுங்கிய இரவு
எவ்வளவு அருமையானது!

இதுதான்
என் அமைதியைப் பறித்தது.

-அஸ்வகோஸ்.
(நன்றி: "என் வசந்தம் வராமலே போய்விட்டது")

### பதில்

என் ஆதித்தாயின்
முதுகில் பட்ட
திருக்கைச் சவுக்கடி
நான் காணும் ஒவ்வொரு
முகத்திலும்
தழும்பாய் தேமலாய்
படர்ந்து கிடக்கிறது.


அடையாளத்தை
உணரும் போதெல்லாம்
வீரியங்கொண்ட
ஊழிச் சவுக்கின் ஒலி
மீளவும் என்னை
வலிக்கப் பண்ணும்.

என்னைப் பிளந்து
ரத்த உடுக்கள்
வெடித்துப் பறந்து
தனித்துச் சிதறிக் கொட்டும்

தனித்து,
அவை ஒவ்வொன்றும்
கிரகங்கள் என
உருப்பெறும்.
தன்னிச்சையாய்ச் சுற்றி வரும்
தாள லயத்துடன்

அங்கு
எனக்கென
ஓர் பிரபஞ்சம் உருவாகும்
அப்போது உயிர் பெறும்
எனக்கான வரிவடிவங்களுடன்
கூடிய
என் மொழி.

அதன் பின்
தேமல் படர்ந்த எவனாயினும்
என்னோடு உரையாடட்டும்
அப்போது கூறுகிறேன்



பதிலை,
என் மொழியில்;
என் ஆதித்தாயின்
பெண் மொழியில்.

அதுவரை நீ காத்திரு.

-ஆழியாள்.
(நன்றி: "உரத்துப் பேச...")

## சிறப்புக் கவிதை

### இந்த வசந்தம்



அன்றைக்கு மாலை
நானும் ரூபனும் கடலுக்குச் சென்றோம்
அவன் வீடு போகும்
குறுக்கு வழியில் அவனைச் சந்தித்தேன்
யுத்தம் நடந்துகொண்டிருக்கிற காலம்

வீதியைவிட்டு மணலுக்குள் புகுந்து
எருக்கலையருகில்
கடலைப் பார்த்திருந்தோம்
கனத்த உப்பங்காற்று வீசுகிறது
என் முகமெல்லாம்
நெஞ்சுரப்பான மசமசப்பூட்டுகிறது

சோதினை நடக்கவில்லை
ஒரு பருவகாலம் முழுவதுமே 'மூட்' குழம்பிக்கொண்டிருக்கிறது
கன நண்பர்கள் இயக்கத்திற்குப் போய்விட்டார்கள்.
அவர்களின் போகுதலின் முன்
இந்தக் கடற்கரையில் இப்போ நாங்கள் முகருகின்ற சோகத்தை
முகர்ந்துகொண்டுதான் போனார்கள்
பரந்த கடலில் நமது சோகம் ஒரு அலையேனும் ஆகாவிட்டாலும்
இப்படிச் சொல்லச் சிரமமாயிருந்தாலும்
'யுத்தத்தில் நாங்கள் வெல்லத்தானே வேணும்'

மனச்சாட்சி உறுத்துகிறது
அலை முறியும் கடற்காற்றில்
பருத்த மணல்கள் கால்களில் விழுகிறது.

-நட்சத்திரன் செவ்விந்தியன்.
(நன்றி: "வசந்தம் '91")

# கருவிலேயே பெண் குழந்தை ஆணாக மாறுமா..?

குழந்தைப் பாக்கியம் இல்லாத பெண்களுக்குக் கருத்தரிக்க ஆசி வழங்கும் சாமியார்கள் பற்றியும், அத்தகைய சாமியார்களால் ஏமாற்றப்படும் பெண்கள் பற்றியும் தினசரி செய்திகள் வருவதுண்டு. போலிச் சாமியார்கள்



போலி மருத்துவர்களால் நாளாந்தம் ஏமாற்றப்படும் இளம் பெண்கள் குறித்த தகவல்களுக்கும் குறைவில்லை. இதுவரை காலமும் கருத்தரிக்கும் வாய்ப்பில்லாத பெண்களை ஏமாற்றி வந்த மருத்துவர்கள் இப்போது ஆண் குழந்தை பிறக்க வழி செய்கிறோம் எனக் கூறி, கருவுற்ற பெண்களையும் ஏமாற்றத் தொடங்கிவிட்டனர்.

ஆண் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சில பெண்களிடம் இயல்பாகவே இருக்கும் ஆசையைப் பயன்படுத்தி, அதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று கூறி, ஆயிரக் கணக்கில் பணத்தைக் கறந்துகொண்டு பல பெண்களின் வாழ்க்கையை நாசம் செய்து வருகிறார்கள் இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலப் போலி மருத்துவர்கள்.

கருவுற்ற மூன்று மாதங்களுக்குள் தங்களிடம் சிகிச்சை பெற்றால் கருவில் இருப்பது பெண் சிசுவாக இருந்தாலும் அதனை ஆண் குழந்தையாக மாற்றித் தருவதாகக் கூறிய மருத்துவர்களை நம்பிய பல பெண்கள் இன்று பரிதாபகரமான நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

ஆண்களுக்கே உரித்தான விசேஷ 'ஹோர்மோன்' ஆன அக்வா விரான், டெஸ்டோஸ் டீரான் போன்றவற்றைக் கர்ப்பிணிகளின் உடலில் செலுத்துவதன் மூலம் பெண் கரு ஆணாக மாறும் என்று இந்தப் போலி மருத்துவர்கள் கூறிவருகின்றனர்.

இவர்களை நம்பி இத்தகைய ஹோர்மோன்களை உடலில் ஏற்றிக் கொண்ட பல பெண்களுக்கு ஆண், பெண், இருபால் அம்சங்களைக் கொண்ட குழந்தைகள் பிறந்துள்ளன.

கடந்த மூன்று மாதங்களில் உத்தரப் பிரதேச மருத்துவ மனைகளில் 12 சதவீத குழந்தைகள் இவ்வாறு இருபால் அம்சங்களுடன் பிறந்திருப்பதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

உண்மையில் கருவுற்றிருக்கும் ஒரு பெண்ணிற்கு ஹோர்மோன்களைச் செலுத்துவதன் மூலம் கருவில் வைத்தே குழந்தையைப் பால் மாற்றத்திற்கு உட்படுத்தலாம் என்பது சாத்தியமே இல்லாத காரியம் என்கிறார்கள் நிபுணர்கள்.

கருத்தரித்தலின் போது அல்லது நான்காவது வாரத்திற்குள் கருவின் பால் நிலை தீர்மானிக்கப்பட்டுவிடுகிறது. அதனை ஹோர்மோன்களால் மாற்ற முடியாது. ஆனால், இவ்வாறான சக்தி வாய்ந்த ஹோர்மோன்கள் சிலதைச் செலுத்துவதால், குழந்தையின் உறுப்புக்களில் சில மாற்றங்கள் நிகழலாம் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இதுவே, உத்தரப் பிரதேசப் பெண்கள் பலருக்கு நிகழ்ந்திருக்கிறது.

இந்தியாவின் பல பின்தங்கிய பகுதிகளில் பெண்குழந்தைகளை வெறுக்கும் போக்கு இன்னமும் காணப்படுகின்றது. அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி இந்த ஹோர்மோன் சிகிச்சை வழங்கும் போலி மருத்துவர்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றனர். ஏராளமானோர் பாதிக்கப்பட்ட பின்னர் இப்போதுதான் மாநில அரசு விழித்துக்கொண்டுள்ளது.

# வலி

உடலில் காயம் ஏற்பட்டாலும், நோய் வந்தாலும் உடலெல்லாம் வலிக்கிறது என்போம். வலி என்பது விரும்பத் தகாத ஓர் உணர்வு. மனதில் தோன்றும் உணர்ச்சிகளும் மன உந்துதல்களும் கூட வலியைத் தோற்றுவிப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உதாரணமாக கோபப்பட்டால் கழுத்து தசைகளில் வலி தெரியும். ஒரு காயத்தின் காரணமாக ஏற்படும் வலி அதே போன்ற காயமுடைய இன்னொரு நபரிடம் வித்தியாசமான அளவிலேயே வெளிப்படும்.



மருத்துவர்கள் வலியின் அளவைக் கணக்கிடுவதில் சிரமங்கள் உள்ளன. அதனால்தான் நோயாளிகள் கூறுவதை வைத்து வலியை அறிகிறார்கள். உதாரணமாகத் தலைவலியைக் கூறலாம்.

வலி உணர்வுகளை மின் அதிர்வுகளாக மாற்றி நரம்புகள்தான் மூளைக்குக் கொண்டு செல்கின்றன. சூழ்நிலை, இடம் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு அதற்கேற்ப மூளை இதனைக் கையாளுகிறது. உதாரணமாக விளையாட்டில் ஈடுபட்டுள்ள நபர் காயத்தால் அவதியுறும்போது போட்டி முடியும் வரை வலியைப் பற்றி அவரின் மூளை சிந்திப்பதேயில்லை. வலி உணர்வுகளை உதறித் தள்ளி விடுகிறது.

கடுமையான வலிகள் பயனுள்ள எச்சரிக்கை அறிகுறிகளாகும். குறைபாடு நீக்கப்பட்ட பிறகு வலியும் சரியாகும். குறைந்த காலமே நீடிக்கும் தீவிர வலியை, திடீர் வலி அல்லது 'அக்யூட் பெயின்' என்றும், நாட்பட்ட நிலையில் நீடிக்கும் வலியை 'கிரானிக் பெயின்' என்றும் கூறுகிறார்கள்.

முறையாகக் குணப்படுத்தப்படாத நோய்களிலேயே நாட்பட்ட வலிகள் தோன்றுகின்றன. உதாரணமாக மூட்டு வலி, பற்றுநோய் வலி ஆகியவற்றைக் கூறலாம். சில வலி சிகிச்சைக்குப் பிறகும் தொடருவது உண்டு. இதற்குச் சிகிச்சைகள் மேற்கொண்டும் பலனிருக்காது.

## பிரிவுத் துயரின் அவஸ்தைகளைச் சொல்லி

# உருகும் இளவரசர் வில்லியம்

டயனாவின் மரணத்தின் பின்னர் சாள்ஸை விடவும் பிரிட்டிஷ் ஊடகங்களின் கவனத்திற்கு உள்ளாகியவர் இளவரசர் வில்லியம்தான். முன்பு டயனாவின் பின்னால் சுற்றித் திரிந்த பத்திரிகையாளர்கள் பலர் இப்போது இளவரசர் வில்லியமின் நடவடிக்கைகளைக் கூர்மையாக அவதானிக்கத் தொடங்கியுள்ளனர்.

இருபது வயதுக்குள்ளேயே வில்லியம் காதல் லீலைகளில் பிரபல்யமாகி விட்டார். கடந்த 4 வருட காலத்திற்குள் வில்லியமிற்கு ஏராளமான பெண்பால் சிநேகிதங்கள் வாய்த்துள்ளன. பெரும்பாலானவர்கள் குறுகிய காலத்திற்குள்ளாகவே பலதரப்பட்ட காரணங்களின் அடிப்படையில் வில்லியமுடனான தமது நட்புறவை நிறுத்திக் கொண்டனர்.



வில்லியமுக்கும் அவரது உறவுக்கார யுவதி ஒருவருக்குமிடையிலான நெருக்கம் குறித்த செய்திகள் அரச மாளிகை வட்டாரங்களில் சிலகாலம் கவலையை ஏற்படுத்தியிருந்தன.

அதன் பின்னர் இடையில் பல நண்பிகள் வந்து போயினர். பாடகி பிரிட்னிக்கும் வில்லியமுக்கும் இடையில் காதல் என்று பரவலான கதைகள் பரவின. அந்தச் செய்தியின் சூடு ஆறுவதற்குள் அரபெல்லா மஸ்கிரேவ் (Arabella musgrave) என்ற யுவதியுடன் வில்லியம் மிக நெருக்கமாகச் சுற்றுகிறார் என்ற தகவல் அப்பா சாள்ஸ் உட்பட அரச மாளிகையில் அனைவரும் அறிந்த இரகசியமாக மாறியுள்ளது.



வில்லியம் போலோ விளையாட்டில் ஈடுபாடுள்ளவர். அரபெல்லாவுக்கும் போலோ பிடிக்கும். இருவரும் ஒரே கிளப்பில்தான் விளையாடுகிறார்கள். காதல் பற்றிக்கொண்டது. ஓய்வு நேரங்களில் இருவரும் போலோ கிளப்பில் மணிக்கணக்கில் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த உறவு 'ரொம்பத்தூரம்' சென்றுவிட்டது என்கிறார்கள் கிளப் ஊழியர்கள். அரபெல்லாவும் வில்லியமும் ஆழமாகக் காதலிக்கிறார்கள்; அவர்களது அன்பு உண்மையானது என்று கூறுகிறார்கள் வில்லியமின் நண்பர்கள்.

அதேவேளை அரச குடும்பத்தவர்களுடன் காதல் உறவுகளை வளர்த்துக் கொள்வதில் உள்ள ஆபத்தை அரபெல்லாவுக்கு அவரது சகாக்கள் பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

எவ்வாறெனினும் இருவரும் பிரிந்து செல்ல முடியாத அளவு நெருக்கமான கட்டத்தை அடைந்திருப்பதாக அரச மாளிகை வட்டாரங்கள் கருதுகின்றன.

ஸ்கொட்லாந்தில் உள்ள பல்கலைக் கழகம் ஒன்றில் கல்வி கற்கும் வில்லியம் சமீபத்தில் விடுமுறையைக் கழிக்க லண்டன் வந்த போது சிலகாலம் பிரிந்திருந்த அரபெல்லாவை உடனே சென்று பார்த்ததாகவும், இருவரும் பிரிந்திருந்த காலத்தில் பட்ட அவஸ்தைகளைக் கூறி பரஸ்பரம் 'அன்பு பரிமாற்றத்தில்' ஈடுபட்டதாகவும் லண்டன் பத்திரிகைகள் எழுதியிருந்தன.

மொத்தத்தில் அப்பா சாள்ஸின் சாதனைகளை மகன் வில்லியம் முறியடிப்பார் போலத் தெரிகிறது.

செல்வாஸின் 7
சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்
பெயர்:..........................
முகவரி:..........................
..........................
தொழில்:..........................
உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 07-09-2002
அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு சல்வார்?
## வெலித்தறை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்


எம்.எஃப்.எஃப். றம்ஸியா
இல. 182, காலி வீதி, வெலித்தறை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



அன்ன மூட்டிய தெய்வ மணிக்கையின்
ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்;
கன்னத் தேமுத்தம் கொண்டு களிப்பினும்
கையைத் தள்ளும்பொற் கைகளைப் பாடுவோம்!

சுப்பிரமணிய பாரதியார்–



## பாப்பா முரசு சிறுகதை

# சாத்தானின் வேலை



ஒரு நாள், சாத்தான் தேவலோகத்தில் அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்தான். அங்கு ஏதாவது நடக்கிறதா? இறைவனது திட்டங்கள் என்ன? அவரது பக்தர்களுக்கு என்ன கேடு உண்டாக்கலாம்? என்று அறிய வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி உலாவிக்கொண்டிருந்தான்.

அவனைக் கண்ட தேவதூதன், "சாத்தானே! உனக்கு இங்கு என்ன வேலை? நீ திருந்தவே மாட்டாயா? எத்தனை நாளைக்குத்தான் இப்படிக் கெட்டதையே செய்து கொண்டிருக்கப் போகிறாய்? உன்னுடைய இந்தச் செயலுக்கான தண்டனை மிகப் பயங்கரமானது என்று உனக்குத் தெரியாதா?" என்றார்.

"தேவதூதனே... நீ இறைவனுடன் இருப்பதால் உன் எண்ணம் எல்லாம் எப்போதும் நல்லவையாகவே இருக்கிறது. மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும். அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைக்கிறாய்... நான் ஆதியிலிருந்தே கெட்டவனாக இருந்ததால், மக்களுக்குத் துன்பங்கள் செய்தே பழகிவிட்டேன். இப்படி இருப்பதுதான் எனக்குப் பிடித்திருக்கிறது. கஷ்டம் வரும்போது மனிதர்கள் படும்பாட்டை இரசித்தே பழகிவிட்டேன். அப்படிப்பட்ட என்னைப் போய் திடீரென்று நல்லவனாக மாறச் சொன்னால் எப்படி என்னால் முடியும்? அதுமட்டுமல்ல. நானே மாற நினைத்தாலும் இந்த மனிதர்கள் என்னை மாற விடமாட்டார்கள்" என்று ஒரு பெரிய கதையையே அவிழ்த்து விட்டான்.

தேவதூதனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. "என்ன நீ மாற நினைத்தாலும் மனிதர்கள் மாற விடமாட்டார்களா... என்ன இது புதுக் கதையாக இருக்கிறதே..." என்றார் தூதன்.

"தேவதூதனே... நான் வேண்டுமானால் இதை நிரூபித்துக் காட்டட்டுமா?" என்றான் சாத்தான்.

சம்மதித்தார் தேவதூதன்.

"அதோ மனிதன் ஒருவன் வண்டி ஓட்டிக்கொண்டு வருகிறான் பார். அவனது வண்டியைக் கவிழ்த்துவிடு" என்றான் சாத்தான்.

"என்ன அநியாயம் இது. இந்த அக்கிரமத்தை எல்லாம் நீயே செய்" என்றார் தேவதூதன்.

"இந்த ஒரு முறை மட்டும் செய்யுங்கள். அப்புறம் பாருங்கள் வேடிக்கையை..." என்றான் சாத்தான்.

"சரி..." என்று சம்மதித்த தேவதூதன், வண்டிக்காரனுக்கு அடிபடாதபடி வண்டியைக் கவிழ்த்து விட்டார்.

"ஐயோ..." என்று அலறியபடியே கீழே விழுந்த வண்டிக்காரன், "நல்லாப் போய்க்கொண்டிருந்த வண்டி திடீரெனக் குடைசாயுது என்றால் என்ன அர்த்தம்? இது நிச்சயமாகச் சாத்தானின் வேலையாகத்தான் இருக்கும். ஏழு ஜென்மத்துக்கும் அவன் உருப்படமாட்டான்" என்று திட்டியபடியே வண்டியைத் தூக்க ஆட்களைக் கூப்பிடச் சென்றான்.

அப்போது சாத்தான் அர்த்தத்துடன் தூதனைப் பார்த்தான். தேவதூதனுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை.

அந்த வண்டிக்காரன் ஆட்களுடன் வருவதற்குள் சாத்தான் தன்னுடைய சக்தியைப் பயன்படுத்தி வண்டியைத் தூக்கி நிறுத்தியிருந்தான். மாடுகள் சரியான நிலையில் வண்டியில் கட்டப்பட்டிருந்தன.

இதைக் கண்டு வியந்த வண்டிக்காரன், "பார்த்தீர்களா? காரணமே இல்லாமல் நல்லாப் போய்க்கொண்டிருந்த வண்டியைச் சாத்தான் குடைசாய்த்துவிட்டான். ஆனால், இறைவனின் கருணையே கருணை. அவர் என் வண்டியைத் தூக்கி நிறுத்திவிட்டார்" என்றான்.

"தேவதூதனே... இதற்குத்தான் நான் இந்த மனிதர்களுக்கு உதவி செய்வதில்லை. கெட்டதையே செய்கிறேன்" என்றான் சாத்தான்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **07.09.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **460**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 457

பரிசுக்குரியவர்:
**ஆர். முகுந்தன்,**
17/7ஏ, பாத்திமா வீதி, 1ம் குறுக்கு, நீர்கொழும்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **சி. சதீஸ்,** இறை தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை. | **பூ. சர்மிலன்,** வ/விபுலானந்த ம.வி., வவுனியா. |
| **என்று லோரன்ஸ்,** ஜோசப் ஒழுங்கை, எந்தளை, வத்தளை. | **அஹமது முகைதீன் பஸ்லான்,** 14/15, பொது வீதி, அட்டாளைச்சேனை-15. |
| **எஸ். அபிராமி,** இல. 14/12, கொனாகோபொட வீதி, பதுளை. | **கர்ணரெத்தினம் அபிலாசன்,** பட்டித்திடல் அ.த.க. வித்தியாலயம், தோப்பூர். |
| **சாமிர் கே. தீசன்,** சென் சில்வஸ்டர் கல்லூரி, கண்டி. | **என். வியஸ்பிடினேஷ்,** 133, கல்லூரி வீதி, திருகோணமலை. |
| **கே. வசந்தராணி,** மவுசாக்கல த.ம.வி., மஸ்கெலியா. | **பாத்திமா அஸ்ஹா முஸாதிக்,** இல. 30/2பி, 1ம் ஒழுங்கை, ஸ்பீல் வீதி, புத்தளம். |

## விடுகதைகளும் விடைகளும்

1. அண்ணன் தம்பியர் 26 பேர். அகிலம் முழுக்கத் தெரிந்தவர்கள். அவர்கள் யார்?
02. கூட்டுக்குள்ளே, ஓட்டுக்குள்ளே தேக்கி வைத்த தண்ணீர். ருசியில் நன்னீர். அது என்ன?
03. அடித்தால் அழமாட்டான். மற்றவரை ரசிக்க வைப்பான். அவன் யார்?
04. எண்களில் ஒன்று. கடலுக்குச் சிறியது. அது என்ன?
05. சுட்டால் மட்டுமே உண்ண முடியும். அது என்ன?
06. கணுக்கணுவாய் இருந்தாலும், அணுஅணுவாய் ருசிப்பான். அவன் யார்?
07. வானுக்கும் பூமிக்கும் ஒரே கம்பி. அது என்ன?
08. அவனுக்குச் சொந்தம். ஆனால், அவனைவிட மற்றவர்கள் தான் அதிகம் பயன்படுத்துவார்கள். அது என்ன?
09. முடித் திறக்கும், பாதுகாக்கும். வருத்தாத வேலி. அது என்ன?
10. வந்தது தெரியும். வருவது தெரியாது. அது என்ன?

### விடைகள்.

01. ஆங்கில எழுத்துக்கள்
02. தேங்காய் 03. மத்தளம்
04. ஆறு 05. தோசை
06. கரும்பு 07. மழை
08. பெயர் 09. கண்ணிமை
10. காற்று



## மரியாதை

போலந்து நாட்டில் ஆட்டின் முகத்தில் விழிப்பதை அதிர்ஷ்டம் என்று கருதுகிறார்கள். அத்தோடு முடிந்துவிடவில்லை விஷயம். காகம், புறா இரண்டையும் பார்ப்பது துரதிர்ஷ்டம் என்றும் கருதுகிறார்கள்.

அவுஸ்திரேலியாவின் குவின்ஸ்லாந்து மாகாணத்தில் காட்டு ஆட்டைப் பிடித்துப் பால் கறக்கும் போட்டி நடாத்தப்படுகிறது. இந்தப் போட்டியில் கலந்துகொள்ளும் போட்டியாளர்கள் முதலில் காட்டு ஆட்டைப் பிடித்துவர வேண்டும். அதிகம் பால் கறப்பவருக்குப் பரிசு உண்டு.




ஒரிஸா மாநிலத்தில் உள்ள ஜுவாங் இன பழங்குடி மக்கள் ஆட்டிற்கு அழகான சொகுசு குடில் அமைத்துக் கொடுத்துவிட்டு, அவர்கள் சாதாரணமாகத் தரையில் படுத்துத் தூங்குவார்கள்.



## இந்த வாரப் புதிர்

'y' வடிவில் உள்ள 10 மரங்களையும் மூன்றே மூன்று வட்டமிட்டு தனித்தனியாகப் பிரித்துக் காட்ட முடியுமா?



## அறிவுத் தேடல்

சென்றவாரப் புதிரின் விடை:




நட்சத்திரத்தைப் பெற இணைக்க வேண்டிய முக்கோணங்களின் இலக்கங்கள் 5, 13, 14, 9, 11.

# ஆறுவது சினம்

அந்தப் பள்ளிக்கூடம் மாணவர்களின் சலசலப்பிலிருந்து மீள்வதற்காய் முதலாவது மணியை ஒலிக்கச் செய்தது. அவசர அவசரமாய் வந்துகொண்டிருந்த மாணவர்கள் ஓட்டமும் நடையுமாய் தத்தம் வகுப்புக்களுள் நுழைந்தார்கள். அதன் பின்னர் ஆசிரியர்களும் அவரவர் வகுப்புக்களுக்குச் செல்லத் தொடங்கிய வேளையில் இரண்டாவது மணி அடிக்கப்பட்டு காலை வாழ்த்துப் பாடல் இசைக்கப்பட்டது. இவ்வளவையும் பள்ளிக்கூடத்தின் முகப்பில் அமைந்திருக்கும் அலுவலக வாசலில் தனது மகன் சுதர்சனோடு நின்று பார்த்துக்கொண்டிருந்தான் செல்லத்துரை.

அலுவலக வாசலில் அமைதியான அந்தச் சூழ்நிலையில் அதிபர் ஓய்வாக இருக்கின்றாரா? என்று மெல்ல எட்டிப் பார்த்தான். இவன் எட்டிப் பார்த்ததை எதேச்சையாகக் கண்டுவிட்ட அதிபர், "என்ன செல்லத்துரை? என்ன விஷயம்? உள்ளே வாங்க..." என்றதும், "ஐயா வணக்கமுங்க..." என்று வணக்கம் கூறிவிட்டுத் தலையைச் சொறிந்து நின்றான் செல்லத்துரை. "வணக்கம்... வணக்கம்... என்ன இவன் சுதர்சனையும் கூட்டிக் கொண்டு வந்திருக்கீங்க... ஏன் இவன் ஒழுங்காப் படிக்கிறானில்லை என்று ஏதாவது முறைப்பாடா?" என்று கேட்டார் அதிபர். "அப்படித் தாங்க ஐயா... பிள்ளைங்க என்றால் கொஞ்சம் அப்பிடி இப்பிடித்தாங்க இருக்கும். அதுக்காக அதுகளை இப்படி மாட்டை அடிப்பது போல அடிக்கலாமுங்களா?" என்றவாறு, சுதர்சனை இழுத்து அவன் சட்டையைக் கழற்றி முதுகைக் காண்பித்தான்.

"நீங்களே பாருங்க ஐயா? எப்படி முதுகு புண்ணாகிப் போயிருக்குதுன்னு. ஏங்கை கூட இவன் மேல ஒருநாளும் பட்டதில்லைங்க... இதப் பார்த்திட்டு இவனோட அம்மா அழுது கண்ணீர் வடிச்சிட்டாங்க... பிள்ளை ராத்திரி எல்லாம் வலி தாங்காம அழுதிட்டு இருந்தாங்க... அதாங்க... நேரே ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போகாம நேரே இங்கே கூட்டிட்டு வந்தேனுங்க. ஏம்புள்ளையை ஏன் இப்பிடி அடிச்சாங்கன்னு எனக்குத் தெரியணுங்க... பெத்தவங்களுக்குத்தான் தெரியும் பிள்ளைங்களோட அருமை. மத்தவங்களுக்குத் தெரியாதுங்க ஐயா! ஏதோ நாமதான் படிக்காம காலத்துக்கும் கூலி வேலை செஞ்சு கஸ்டப்படுறோம். நம்ம புள்ளையாவது நாலு எழுத்துப் படிக்கட்டுமே என்னு இங்க அனுப்பினா... இந்த மாதிரி செய்யலாமுங்களா?" என்று மூச்சுவிடாமல் தன் ஆதங்கத்தை அதிபர் முன் கொட்டினான் செல்லத்துரை.

அமைதியாகச் செல்லத்துரை சொன்னதைக் கேட்ட அதிபருக்கு அவனது கோபம் நியாயமானதுதான் என்று விளங்கியது. சுதர்சனின் முதுகைப் பார்த்ததும் அவருக்கே பாவமாக இருந்தது. "உன்னை யார் இப்படி அடிச்சாங்க?" என்று கேட்டதும், "மலர்விழி டீச்சர் சார்..." என்றான் சுதர்சன்.

"கொஞ்சம் அந்தக் கதிரையில உட்காருங்க செல்லத்துரை. முதல் பாடம் முடிந்ததும் நான் அந்த டீச்சரைக் கூப்பிட்டு விசாரிக்கிறேன்" என்றார் அதிபர். செல்லத்துரை அமர்ந்து கொண்டதும், மலர்விழி டீச்சருக்குத் தகவல் அனுப்பிவிட்டு அதிபர் தனது பணியில் மூழ்கினார்.

முதல் பாடம் முடிவடைந்ததைப் பள்ளிக்கூட மணி அறிவித்தது. மலர்விழி டீச்சர் அடுத்த கணம் அதிபரின் முன் பிரசன்னமாகியிருந்தார். டீச்சருக்காகக் காத்திருந்த அதிபர் சிவலிங்கம், "என்ன டீச்சர்! இவனை இப்படிப் போட்டு அடிச்சிருக்கீங்க...ஒரு டீச்சர் செய்யிற காரியமா இது? இப்படிப் பிள்ளைகளை டீச்சர்மார் அடிச்சுத் துன்புறுத்தினால் நாளைக்கு இந்தப் பள்ளிக்கூடத்திற்கு யாராவது பிள்ளைகளை அனுப்புவாங்களா? ஏன் இப்படிப் பள்ளிக்கூடத்திற்கு அவப் பெயரை ஏற்படுத்திக் கொடுக்கிறீங்க?" என்று ஒரு போடு போட்டார்.

அதிபர் பேசி முடியும் வரை அமைதி காத்த மலர்விழி டீச்சர், "இல்லை சேர்! இவன் செய்ததைக் கேட்டா நீங்களென்றாலும் இப்படித்தான் செய்வீங்க..." என்றார்.

மலர்விழி டீச்சர் அப்படி ஒரு



இராட்சசி இல்லை. தங்கமான டீச்சர். பிள்ளைகளோடு அன்பாகப் பேசி, அமைதியாகப் பாடம் சொல்லிக் கொடுப்பார். ஆள்தான் கொஞ்சம் கறுப்பு. ஆனாலும், லட்சணமான அவர் முகத்தில் தவழும் புன்னகை யாரையும் வசீகரிக்கும் காலைத் தென்றல். கொஞ்சம் குள்ளமாய், குண்டாய், மௌனகீதங்கள் சரிதா போல் இருக்கும் இவரைச் சில மாணவர்கள் 'பிந்துகோஸ்' என்று பட்டப் பெயர் வைத்து அழைத்தாலும், நிறைய மாணவர்கள் நல்ல மரியாதை வைத்திருந்தார்கள். இப்படிப்பட்ட டீச்சரைக் கடுங்கோபத்திற்குள்ளாக்கக் கூடியதாக இவனும் ஏதாவது செய்திருக்க வேண்டும் என எண்ணியவர் "என்ன செய்தான்?" என்று டீச்சரைக் கேட்டார்.

"கீறிட்ட இடங்களை நிரப்பு என்று, ஒரு பானை சோற்றுக்கு..... என்று எழுதிக் கொடுத்தா, ஒரு சட்டி கறின்னு நிரப்பிக்கொண்டு வாறான் சார். சமய குரவர்களின் பெயரைக் கொடுத்து, இவர்களின் வேறு பெயர்களை எழுது என்றால், இவர்கள் பெயர் தெரியாதுன்னு எழுதிட்டு வாறான் சார். ஆறாம் ஆண்டு படிக்கிற இவனுக்கு இன்னும் ஆத்திசூடியை ஒழுங்கா மனனம் செய்து சொல்ல முடியலை. இந்த மூணு மாசமா நான் இவனிடம் ஆத்திசூடி கேட்காத நாளேயில்லை. எப்ப கேட்டாலும், அறஞ்செய்ய விரும்பு என்ற முதல் அடியோட நிறுத்திக்கொள்கிறான். அடிவிழும் என்று தெரிஞ்சுதுன்னா அன்னைக்கெண்ணு முதுகோட 'கார்ட் போர்ட்' வைச்சுக் கட்டிக் கொண்டு அதற்கு மேல சட்டையைப் போட்டுக்கொண்டு வந்திடுவான். இவன் இப்படி இருக்கிறதால என்னால மற்றப் பிள்ளைகளைக் கண்டிக்க முடியலை சார்... கொஞ்சம் நீங்களே ஆத்திசூடி சொல்லச் சொல்லிக் கேளுங்க சார்..." என்று கூறி முடித்த டீச்சர் அதிபரைப் பார்க்க, அதிபர் சுதர்சனை அழைத்து ஆத்திசூடி கேட்டார். "அறஞ்செய விரும்பு... அறஞ்செய விரும்பு... அறஞ்செய..." என்று சொன்னதையே மீண்டும் சொன்னான்.

"அடுத்த வரியைச் சொல்லு..." என அதிபர் அதட்டினார்.

அவன் மறுபடியும், "அறஞ்செய விரும்பு..." என்று தொடங்கி செக்குமாட்டைப் போல் மறுபடியும் அதேயிடத்தில் வந்து நின்றான்.

"இப்படித்தான் சார்... எப்ப கேட்டாலும் ஆறுவது சினம் என்ற இரண்டாவது வரியைச் சொல்லவே மாட்டான். பிடிவாதக்காரன். நானும் நல்ல முறையாக, அன்பாக, கோபமாக எல்லா விதத்திலும் கேட்டுப் பார்த்துட்டேன்... என் பொறுமையைச் சோதிக்கிறதே இவனுக்கு வேலையாய்ப் போயிடிச்சு... எப்பவும் போல நேற்றும் முதுகுக்கு 'கார்ட் போர்ட்' கட்டிக்கொண்டு வந்திருப்பான் என்று இரண்டு அடி போட்டேன். இப்பத்தான் சார் தெரியுது. இவன் 'கார்ட் போர்ட்' கட்டலைன்னு..." என்று மலர்விழி டீச்சர் விபரித்து முடிக்குமுன் செல்லத்துரை குறுக்கிட்டான்.

"டீச்சர் 'ஆறுவது சினம்' என்றால் என்னங்க?"

"அதுங்களா... கோபத்தைத் தணிக்கணும்... யாரோடையும் கோபம் கொள்ளக் கூடாது...கோபம் வந்தா அத ஆறப் போட்டு அப்புறம் ஆறுதலா சிந்தித்துச்

**மெய்யன் நட்ராஜ் –கட்டார்**

செயற்படணும்... இன்னும் எத்தனையோ அர்த்தங்கள் சொல்லலாமுங்க..."

"இப்பிடி அர்த்தம் சொல்லி என்னத்துக்குங்க ஆகப்போகுது. சொல்லிக் கொடுக்கிற நீங்களே இதைக் கடைப்பிடிக்காமல் புள்ளைங்க மேல எரிஞ்சி விழுறீங்க. பிறகு எப்படிங்க புள்ளைங்க கத்துக்கும். முதல்ல நீங்க இதை ஒழுங்கா கத்துகிட்டு நடக்கப் பாருங்க. பிறகு நான் என் புள்ளையை இங்க அனுப்பி வைக்கிறன்" என்று கூறிவிட்டு, சுதர்சனையும் இழுத்துக்கொண்டு வெளியேறினான் செல்லத்துரை.

அவனைத் தடுத்து நிறுத்த முடியாமல் அதிர்ந்து நின்றார்கள் அதிபரும், மலர்விழி டீச்சரும். ■

# அது வேறு சமாச்சாரம்

காலையில் எழுந்ததும் தளபாடங்களைத் தூசி தட்டி, வீட்டைப் பெருக்கி முற்றம், வளவு கூட்டித் தண்ணீர் தெளித்த பின்னரே பாக்கியம் குளிக்கப் போவாள். செவ்வாய், வெள்ளி தினங்களில் கோலம் போடுவது மேலதிக வேலை. இந்த அறுபது வயதிலும், 'நான் காலையில் எழுந்து சின்னச் சின்ன வேலையை ஒருநாள் தவறாமல் செய்வேன்' என்கின்ற மனவுறுதி இருக்கின்றதே... அதில் அவள் எப்பொழுதாகிலும் சோர்வடைந்தது கிடையாது.

ஆனால்... அவளுடைய ஒரே மகன் இந்தச் சின்ன வயதில், அநாவசியமாக ஒருத்தியைக் காதலித்து, கைப்பிடித்து தனக்கு மனைவியில்லாத குறையையும், தாய்க்கு மருமகள் இல்லாத குறையையும் தீர்ப்பதற்காக அவளை விவாகம் செய்து வீட்டிற்குக் கூட்டி வந்த பின்னர் அவளுடைய மனவுறுதியிலும் சிறிதளவு தளர்வு ஏற்படவே செய்தது.

காலை ஆகாரத்தை மூவருக்குமாகத் தயார் செய்து... மகனைச் சாப்பிட வைத்து, அலுவலகத்திற்குப் போகும் ஆயத்தங்கள் அனைத்தையும் பூர்த்தி செய்து கொடுத்து... அடையாள அட்டை சட்டைப் பையில் இருக்கின்றதா என்பதைக் கவனத்துடன் உறுதி செய்த பின்னர், வாசல்வரை சென்று அவனை அனுப்பி வைத்து, 'கேற்றை' மறுபடி சாத்திவிட்டு வரும்வரை அவளுடைய மருமகள் வசந்தி இன்னும் கட்டிலால் எழும்பவில்லை.

"வசந்தி... வசந்தி..." என்று பாக்கியம் பல தடவை குரல் கொடுத்துப் பார்த்தாள்.

முதலில், "ம்...ம்..." என்று மரத்தால் விழுந்தவளைப் போல் ஒரு அனுங்கல்... சிறிது நேரத்தின் பின், "எழும்புவன் தானே..." என்று ஒரு உறுதிமொழி. பின்னர், "இது என்ன கரைச்சல்..." என்று ஒரு சலிப்பு...

வசந்தி கட்டிலில் படுத்திருந்தபடியே கைகளிரண்டையும் உயர்த்தி, நீட்டி உடம்பைப் புரட்டியதில் இரவு காலந் தாழ்த்தித் தூங்கியதால் உண்டான அலுப்பு சிறிதளவு நீங்க எழுந்து நடு மண்டபத்திற்கு வந்தவள், 'சோபா'வைக் கண்டதும் அதில் தொப்பென அமர்ந்துகொண்டாள்.

பாக்கியத்துக்கு நாள் பூராகவும் வேலை ஓயாது. எதையாவது செய்து கொண்டுதான் இருப்பாள். வீடு, பாத்திரங்கள், உடுதுணிகள் எல்லாமே, எப்போதும் அவளுக்கு துலங்கியபடியிருக்க வேண்டும்.

இரவு போட்டிருந்த 'நைற்றி'யுடனும் விடியாத முகத்துடனும் நாவூற்றுக்குக் கழித்த பூசினிக்காயைப் போல மருமகள் வந்து நடு மண்டபத்தில் இருந்தது பாக்கியத்திற்குப் பெரும் ஆத்திரத்தையே உண்டுபண்ணியது.

"வசந்தி... இனி உங்கடை வீட்டுப் பழக்க வழக்கங்களையெல்லாம் மறந்து விட்டு, எங்களுடைய வீட்டு நடைமுறை, சம்பிரதாயங்களுக்கு மாற வேணும்... சரியே பிள்ளை..."

பாக்கியம் அன்பாகத்தான் கூறினாள். ஆனால், வசந்திக்கு அது தைத்து விட்டது. எழுந்து சென்று குளியலறையைப் பூட்டிக் கொண்டாள். இடையில், நடு மண்டபம் பூராக நீரை வாரியிறைத்தபடி அவளுக்கென ஒதுக்கப்பட்ட அறையிலிருந்து மாற்றுடைகளை எடுத்துச் சென்றாள். அரை மணித்தியாலம் பிடித்தது வெளியில் வர!

அதற்குள் பாக்கியம் முற்றத்திலும், சாடிகளிலும் நின்ற பூமரங்கள் மற்றும் குரோட்டன் வகைகளுக்கு நீரூற்றிவிட்டுக் காலை ஆகாரத்திற்காக மருமகளை எதிர்பார்த்திருந்தாள்.

"மாமி... எங்கடை வீட்டுப் பழக்க வழக்கமெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?" வசந்தி அரற்றினாள்.

தனது வயதிற்கு இப்படிப்பட்ட சிறிசு ஒன்று கேட்கும் கேள்விக்கு மறுமொழி சொல்லவேண்டி வந்திருப்பது தனது விதிதான் என்று நொந்துகொண்ட பாக்கியம், "ஏன் பிள்ளை... உனக்குப் பசிக்கேல்லையா..? வாவன் சாப்பிட.." என அழைத்து கதையைத் திசை திருப்பி, ஒரு முற்றுப்புள்ளி வைத்தாள்.

வசந்தி மேசையில் இருந்த ஆகாரத்தை 'சில்வர்' தட்டில் வைத்து எடுத்தவள், கதிரையை மேசைக்குப் புறம் காட்டி இழுத்து நகர்த்தி காலை நீட்டி அமர்ந்தபடி ருசித்துச் சாப்பிடத் தொடங்கினாள்.

"மாமி... என்னை எத்தனையோ இடத்தாலை பெண் கேட்டு வந்தவை. அம்மா, அப்பா என்னைக் கட்டிக் கொடுப்பதாயின் ஒரு 'இஞ்சினியர்', 'டொக்ர'ருக்குத்தான் கொடுப்பம் எண்டு ஒரே முடிவாய் சொல்லி, தட்டிக் கழிச்சுப் போட்டினம். உங்கடை மகன்தான் 'ரியூட்ஸ்', 'நோட்ஸ்' என்று சாட்டுக் கூறி அடிக்கடி வீட்டுக்கு வந்ததுமல்லாமல் அம்மா,அப்பா வரவேண்டாம் எண்டு தடுக்கவும், களவாக மதில் பாய்ஞ்சு வந்து என்னைக் காதலித்தவர்."

பாக்கியத்திற்கு இடுப்புச் சேலை நழுவியது போல் இருந்தது. அடுப்பில் பால் கொதித்துக்கொண்டிருந்தது. இரண்டு கிண்ணங்களில் ஊற்றிக் கொண்டவள், சீனியை அளவுடன் போட்டு வசந்தியிடம் ஒரு கிண்ணத்தைக் கொடுத்தாள்.

'எங்களுடைய பிள்ளைகளே எங்களை விலை பேசி விக்கேக்கை நாங்கள் என்ன செய்யிறது..?' என்று நினைத்து வெம்பியபடியே பாக்கியம் மதிய உணவைச் சமைப்பதற்கான ஆயத்தங்களைத் துரிதப்படுத்தினாள்.

சுளகில் அரிசியைப் பரப்பி வசந்தியிடம் கொடுத்துவிட்டு மரக்கறிகளை வெட்டத் தொடங்கினாள். வசந்தி அரிசிக்குள் கையை வைத்துக் கிளறியபடி இருந்தாளேயல்லாமல் கற்கள், கழிவுகள் இருக்கின்றனவா என்று சிரத்தை எடுத்துப் பார்க்கவில்லை. அப்படியே இருந்தவள் திடீரென விம்மி விம்மி அழத் தொடங்கினாள். பாக்கியம் பயந்துவிட்டாள்.

"என்ன பிள்ளை... என்ன செய்யிது?" பரிவுடன் வினவினாள்.

"இல்லை மாமி... எங்கடை வீட்டிலை... அம்மா இப்படியெல்லாம் வேலை எனக்குத் தரமாட்டா... 'நீ போய் படி பிள்ளை... நான் சமைப்பன்' எண்டு சொல்லி அம்மா என்னை வேலை செய்ய விடமாட்டா..." பாக்கியத்திற்குப் பெரிய இக்கட்டான நிலை...

"அது பிள்ளை... நீ படிக்கேக்கை படிப்புக் குழம்பக் கூடாது எண்டு அம்மா சொல்லியிருப்பா... நெடுக ஒரு பொம்பிளைப் பிள்ளை அப்படியிருக்க முடியுமே..? அதுவும் புகுந்த வீட்டிலை ஒரு பெண் எள் என்றால் எண்ணெய் என்று நிக்கவெல்லே வேணும்..."

பாதிக் கதை கேட்டதும் கேட்காததுமாக வசந்தி ஓடிச் சென்று தனது கட்டிலில் விழுந்துவிட்டாள்.

பாக்கியத்திற்குப் பெரிய அவமானமாகப் போய்விட்டது. 'தகப்பன் இல்லாமல் இருந்த நிலையில் கஷ்டப்பட்டு ஒரு ஆண்பிள்ளையை வளர்த்து, படிப்பித்து எடுப்பதென்றால் ஒரு பெண்ணுக்கு இந் நாட்களில் இலகுவான வேலையா? கைக்குள் வளர்ந்த பிள்ளை. தானுண்டு, தனது தாயுண்டு என்று இருந்து அவளுடைய மனக் கவலைகளுக்கெல்லாம் ஒரு பரிகாரமாக இருந்த பிள்ளை, இன்று ஒரு பிரச்சனையைக் கொணர்ந்து வைத்



**வீ.என்.சந்திரகாந்தி, திருகோணமலை**

திருக்கிறது. சமாளிக்கத்தான் வேணும்' என்று நினைத்தபடியே முழுப் பொறுப்பையும் ஏற்றுச் சமையலைக் கவனித்தாள்.

மதியம் மகன் வந்ததுமே வெளியே வசந்தியைக் காணாததால் அறைக்குள் போனான். வசந்தி கட்டிலில் குப்பறக் கிடந்தாள். "என்ன வசந்தி... இன்னமும் எழும்பேல்லையா?" கட்டிலில் அவளின் இடுப்பருகே அமர்ந்தவனின் மடியில் முகம் பதித்து விம்மி விம்மி அழத் தொடங்கினாள். தலையணையும் நனைந்திருந்தது.

"நான் இனி ஒரு நிமிஷமும் இஞ்சை இருக்க மாட்டேன்..."

"ஏன் வசந்தி... என்ன நடந்தது? சொல்லன்..." தடவிக் கொடுத்தான்.

"உங்களை நான் காதலிச்சுப் பிடிச்சுப் போட்டன் எண்டு உங்கட அம்மாவுக்கு என்னிலை சரியான கோபம். நீங்கள் போன நேரம் தொடக்கம் எனக்கு ஒரே ஏச்சும், பேச்சும்தான்."

"அம்மா இந்தக் கலியாணத்திற்கு முதலிலேயே மறுத்தவதான். அந்தக் கோபம் இன்னமும் இருக்குப் போல..." என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டவன், தனது மனைவிக்கு நியாயம் செய்வது போல முடிவெடுத்து...

"அம்மா... நாங்கள் இப்பவே வசந்தி வீட்டை போறம். உங்கள் ரெண்டு பேருக்குமிடையில் எந்த நேரமும் என்னால சமரசம் செய்ய ஏலாது".

பாக்கியம் திடுக்கிட்டாள். இப்படியொரு முடிவைத் தனிக்கட்டையான அவள் எதிர்பார்க்கவேயில்லை. மகனின் காலில் விழாத குறையாகக் கெஞ்சினாள். பலன் இல்லை. அவன் ஒரே வார்த்தையில் பதில் சொன்னான். "கிட்ட இருந்து சண்டை பிடிக்கிறதைக் காட்டிலும் அம்மா... எட்ட இருந்து ஒற்றுமையாக இருக்கிறது மேல்". போய்விட்டார்கள்.

பாக்கியத்தின் மனதில் மகன் கூறிய இறுதி வார்த்தை அலைபோல் வந்து மோதிக்கொண்டிருந்தது. அவளது மனது பெற்ற மனது. அவனை ஒரு கண் மூடாமல் வளர்த்தெடுத்து ஆளாக்கிவள். ஒருநாள் பிரிந்து அறியாதவள். அவள் கேட்கவேண்டிய வார்த்தையாகப் போய்விட்டது அது.

"கிட்ட இருந்து சண்டை பிடிக்கிறதைக் காட்டிலும் அம்மா... எட்ட இருந்து ஒற்றுமையாக இருக்கிறது மேல்..!"

பாக்கியம் மாலையே மகனையும், மருமகளையும் சமாதானம் செய்து அழைத்துவர எண்ணி 'ஓட்டோ' ஒன்றைப் பிடித்து, அவர்கள் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தாள். கஷ்டகாலந்தான்... அவள் போய்ச் சேர்ந்த நேரம் தாயும், மகளுமாகச் சேர்ந்து மகனை ஏசித் திட்டிக்கொண்டு இருந்தார்கள்.

பாக்கியம் முற்றம்வரை வந்துவிட்டதைக் கூட எவரும் கவனிக்கவில்லை.

"உங்கடை அம்மாவுக்குப் பெண் பிள்ளைகள் இருந்தால்தானே அருமை தெரிய... நாங்கள் கிளிப்பிள்ளையை வளர்த்து வேட்டை நாய்கள் இருக்கிற வீட்டுக்கெல்லே அனுப்பி வைச்சிருக்கிறம்" வசந்தியின் தாய் காட்டுக் கூச்சல் போட்டாள். பாக்கியம் அதன் பின்னர் அந்த வீட்டு முற்றத்தில் கொஞ்ச நேரம் கூட நிற்கக் கூடாது... ஆனால், அவர்கள் இருவரதும் திட்டும், ஏச்சும் முடியும்வரை நின்றாள்.

"கிட்ட இருந்து சண்டை பிடிக்கிறதைக் காட்டிலும், எட்ட இருந்துகொண்டே ஒற்றுமையாக இருக்கலாம்" என்ற கூற்றை அங்கே அவளது மகன் கூறவேயில்லை! ■

# ஒரு கைதியின் கதை

**17**


"உனக்கு என்னதான் வேண்டும்?"

"சில கணக்குகள் நேர் செய்யப்பட வேண்டும்... சில கணக்குகள் தீர்க்கப்பட வேண்டும்..பரமேஷ்வர் உங்களுக்கு எல்லாவற்றையும் விளக்குவார். விளக்கி முடித்ததும், நான் இந்த விசையை அழுத்துவேன். நாற்பத்தைந்து வினாடிகள் உங்களுக்குக் கிடைக்கும்...அதற்குள் உங்கள் முடிவை நீங்கள் சொல்ல வேண்டியிருக்கும்...நீங்கள் சொல்லும் முடிவுதான் அஸ்வினின் ஆயுளைத் தீர்மானிக்கும்" சந்திரமோகன் நாற்காலியில் உட்கார்ந்து கால்களை ஒன்றின் மீது ஒன்று போட்டுக் கொண்டான்.

கிருஷ்ணதாஸ் அக்னி கக்கும் பார்வையை சந்திரமோகன் மீது எறிந்தார்.

"அந்த கம்பெனியின் இன்றைய மதிப்பு தெரியுமா உனக்கு? போன மாதம்தான் புதிதாக வெளிநாட்டிலிருந்து வாங்கிய இயந்திரங்களுக்கான கடனே வங்கியில் அடைத்து முடிக்கப்பட்டது! மல்லையாவின் பங்கு பூராவையும் அவருடைய குடும்பத்தாருக்குக் கொடுத்தாயிற்று. இப்போது அந்தக் கம்பெனியின் ஒவ்வொரு ஆணியும் ஸ்க்ரூவும் என்னுடையது. அதையெல்லாம் அப்படியே தூக்கி தொழிலாளர்களுக்கு இலவசமாகத் தரச் சொல்கிறாயே... இது என்ன தண்ணீர்ப் பந்தலா?"

"சும்மா தரப் போவதில்லை... பதிலுக்கு உங்களுக்கு பேரும் புகழும்



வரப்போகிறதே!"

"வாட் டூ யூ மீன்?"

"இன்றைக்கு மாலை பத்திரிகையாளர்கள், டெலிவிஷன் நிருபர்கள் எல்லோரையும் ஒரு பிரஸ் மீட்டிற்குக் கூப்பிடப் போகிறீர்கள். அங்கே மல்லையா லேத் ஒர்க்ஸ் நிர்வாகத்தை, உரிமைகளை, பங்குகளை எல்லாம் தொழிலாளர்கள் பெயர்களுக்கு நீங்கள் மாற்றித் தருவதை அறிவிக்கப் போகிறீர்கள். இவ்வளவு செல்வாக்குள்ள லாபகரமான ஒரு தொழிற்சாலையை தொழிலாளர்களுக்கு ஒரு முதலாளி மாற்றித் தருகிறார் என்றால் அவர் புகழ் எவ்வளவு உயரும் என்று யோசியுங்கள்..."

"பிரஸ் மீட் எதற்கு? என்றார் பரமேஷ்வர் கோபமாக,

"நாளைக்கு கிருஷ்ணதாஸ் மனம் மாறி விடக்கூடாதே என்பதற்காகத்தான்! அத்தனை செய்தித்தாள்களிலும், செய்திச் சானல்களிலும் தொழிலாளர்கள் பெயருக்கு திரு. கிருஷ்ணதாஸ் தன் தொழிற்சாலையை மாற்றிக் கொடுத்தது பற்றி அறிவிப்பு வந்து விட வேண்டும்... பின்னால் உங்களை நான் வற்புறுத்தி வாங்கியதாகவோ, ஏமாற்றி வாங்கியதாகவோ நீங்கள் கோர்ட்டில் சொல்லக்கூடாது பாருங்கள்" சந்திரமோகன் சொல்லச் சொல்ல கிருஷ்ணதாஸின் புருவங்கள் நெரிபட்டன.

ஆத்திரத்துடன் எழுந்தார். சந்திரமோகன் மீது பாய்ந்து அவன் கழுத்தைப் பற்றினார்.

சந்திரமோகனுக்கு மூச்சு தடைப்பட்டது. ஆனாலும் புன்னகையுடன் தன் மோதிரத்தை உயர்த்திக் காட்டினான்.

"அப்பா!" என்று நாற்காலியிலிருந்த அஸ்வின் கத்தினான்.

தன் நிலை புரிந்தவராக கிருஷ்ணதாஸ் உடனே தன் கையை சந்திரமோகனிடமிருந்து விலக்கினார்.

"இந்த நிமிடத்தில் உன் கை ஓங்கியிருக்கலாம்... ஆனால் என்னைப் பகைத்துக் கொண்டவனுக்கு நிம்மதி இல்லை..."

"என்னைத் திட்டாதீர்கள்... காஸெட்டிற்கு நான் கேட்டது அதிக விலைதான். வக்கீல்தான் இந்த ஐடியாவே எனக்குக் கொடுத்தார்... இத்தனை சட்டப் புத்தகங்கள் வைத்துக் கொண்டு பத்திரம் தயாரித்தவர் அவர்தான்... பிரஸ் மீட்டிற்கு ஏற்பாடு பண்ணச் சொல் என்று அறிவுறுத்தியதும் அவர்தான்...இல்லை என்று அவர் மகள் மீது சத்தியம் செய்யச் சொல்லுங்கள்..."

சந்திரமோகன் சிரித்துக் கொண்டே சொன்னான்.

"பரமேஷ்!" கிருஷ்ணதாஸ் பொருமினார்.

"நான் ரிமோட் விசையை அழுத்தியாயிற்று. கையெழுத்துக்கள் போட நாற்பத்தைந்து வினாடிகள்தான் இருக்கின்றன. மிஸ்டர் கிருஷ்ணதாஸ்..."

கிருஷ்ணதாஸ் அவசரம் அவசரமாக பத்திரத் தாள்களில் கையொப்பங்கள் இட்டார். போட்டு முடித்து நிமிர்ந்தார்.

நாற்பது விநாடிகளில் அந்த விசையை மறுபடி சந்திரமோகன் அழுத்த வினாடிகளை காட்டிக் கொண்டிருந்த கறுப்புப் பெட்டி 00.05 என்று நின்றது.

நிம்மதிப் பெருமூச்சுகள் விடுபட்டன.

"இவன் சொன்னதை நம்பாதீர்கள்..." என்றார் பரமேஷ்வர்... சின்னப் பதட்டத்துடன்...

"பிரஸ் மீட் முடிந்து தொழிற்சாலை தொழிலாளர்கள் வசம் போய்ச் சேரும் வரை அஸ்வின் என் பாதுகாப்பில்தான் இருப்பான்" என்றான் சந்திரமோகன்.

கிருஷ்ணதாஸ் அவனை எரித்து விடுவது போல் பார்த்தார். பின் பரமேஷ்வரைப் பார்த்தார். கடைசியாகத் தன் மகன் அஸ்வினைப் பார்த்தார்.

"நீ ஒழுங்காக இருந்திருந்தால் இந்த பிரச்சனையெல்லாம் வந்திருக்காது" என்று சீறி விட்டு வெளியேறினார்.

"...எனவே மல்லையா லேத் ஒர்க்ஸ் என்ற தொழிற்சாலையை முற்றிலுமாக தொழிலாளர்களுக்கு கொடுத்து விடுவது என்று தீர்மானித்து உள்ளேன்..."

இது என் மகன் அஸ்வினுடைய விருப்பம்...இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் அவனே நேரில் கலந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டான், ஆனால் கடுமையான தொற்றுக் காய்ச்சலால் அவனால் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது...

இந்த முடிவை நான் முழு விருப்பத்துடன் தொழிலாளர்களிடமிருந்து எந்த நெருக்கடியும் இல்லாமல் செய்கிறேன்... சில வருடங்களுக்கு முன் இதே தொழிற்சாலையில் ஒரு விபத்தில் ரங்கசாமி என்பவர் இறந்து போனார். அவருடைய மகனுக்கு இங்கே வேலை கொடுத்தோம்... அந்த மகன் இப்போது இந்தத் தொழிற்சாலையில் ஒரு பங்குதாரராகவே ஆகிவிட்டார் என்பது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது..."

கிருஷ்ணதாஸ் நிறுத்தினார். திரும்பிப் பார்த்து காக்கி உடை அணிந்திருந்த அந்தத் தொழிலாளியைக் கூப்பிட்டார்.

"இதோ இவர்தான் ரங்கசாமியின் மகன்... இவரிடம் இந்தக் கம்பெனியின் உரிமையை தொழிலாளர்களுக்கு மாற்றித் தரும் பத்திரத்தை வழங்குகிறேன்..."

கூடியிருந்தவர்கள் கை தட்டினார்கள். வீடியோ கெமராக்கள் அந்தக் காட்சியை ஜூம் செய்தன. ஸ்டில் கெமராக்கள் ஃப்ளாஷ் வெளிச்சத்தைப் படபட வென்று மின்னிக் காட்டின.

கிருஷ்ணதாஸ் எரிமலைக் குமுறல்களை அடக்கிக் கொண்டு வெளியே ஆனந்தமாகப் புன்னகைத்தார்.

தொழிலாளர்களின் கை தட்டல்கள் வான்வரை மோதின.

"போதுமா? நீ கேட்டது எல்லாமே செய்தாயிற்று... என் அபிதா எங்கே?" என்றார் பரமேஷ்வர் கிட்டத்தட்ட கெஞ்சும் குரலில்.

"இன்னும் ஒன்றே ஒன்று பாக்கி இருக்கிறது..." என்றான் சந்திரமோகன் புன்னகையுடன்.

பரமேஷ்வரின் கண்களில் தீப்பொறி பறந்தது.

"இன்னும் என்ன?"

"வாக்கு மூலம்....உங்களுடைய வாக்கு மூலம்..."

"என்ன உளறுகிறாய்?"

"மல்லையாவை உண்மையில் கொன்றது கிருஷ்ணதாஸ் என்று உங்களுக்குத் தெரியும்... ஆனாலும்,

*எழுதுவது*

**சுபா**

மூன்று சாட்சிகளை செட்டப் பண்ணி என்னை சிறைக்கு அனுப்பினீர்கள். அதற்காக உங்களுக்கு பெரிய பதவியும் நிறையச் சலுகைகளும் கிடைத்தன. அதற்கப்புறம் கிருஷ்ணதாஸுடன் சேர்ந்து கொண்டு இன்னும் எத்தனையோ அக்கிரமங்களுக்குத் துணை போயிருக்கிறீர்கள்... அதற்கெல்லாம் ஒரு முடிவு வர வேண்டாமா?"

"இதோ பார்... உன் மிரட்டலுக்குப் பணிந்து கிருஷ்ணதாஸ் தொழிற்சாலையையே எழுதி வைத்து விட்டார். அதற்கப்புறம்தான் நீ அஸ்வினை விடுவித்தாய்.... அஸ்வின் விடுதலையான பின் அவர் உன் மீது எவ்வளவு ஆத்திரத்துடன் இருப்பார் என்று யோசி... எந்நேரமும் உன் உயிருக்கு ஆபத்து வரலாம்.... அதற்குள் என் மகள் இருக்கும் இடத்தைச் சொல்லிவிடு..."

"சரி...ஒரே ஒரு கேள்வி..."

"என்ன?"

"உங்களுக்குக் காதம்பரி பெரிசா, உங்கள் மகள் பெரிசா?"

(கைதியின் கதை தொடரும்)

# ஆறுமனமே ஆறு!

## மணமாகாமல் குழந்தை-2

தலைகுனிந்தபடி, நிலத்தைப் பார்த்தவாறு என் முன்னே அமர்ந்திருந்த கமலாவின் மௌனத்தைக் கலைக்க, "தங்கச்சி..." என்றழைத்தேன் நான்.

கமலா சற்று நிமிர்ந்து என்னை நோக்கினாள்.

அவள் முகத்திலே சோர்வு, பயம், பதற்றம், கவலை, அவமானத்தினால் ஏற்பட்ட விரக்தி போன்ற பல உணர்வுகள் தென்பட்டன.

"உங்களின் சொந்த இடம் எது?"

"வவுனியா"

"உங்களுக்கு இப்போது எத்தனை வயது?"



"முப்பத்திநாலு."

உங்கள் மகனுக்கு எத்தனை வயது?"

"ஐந்து"

காலையில் என்ன சாப்பாடு?"

அவள் பேசாமல் நிலத்தைப் பார்த்தாள்.

"சாப்பிட்டீங்களா?"

அதற்கும் பதிலில்லை.

"சாப்பிடவில்லை போல் தெரிகிறது."

'ஆம்' என்று தலையாட்டினாள்.

"உங்கள் மகன் சாப்பிட்டானா?"

"ஆம்..." என்றாள்.

"எங்கே?"

"சசிகலா அம்மாவிடம்..."

எனது உதவியாளரிடம் கமலாவின் சாப்பாட்டிற்கு ஒழுங்கு செய்யும்படி கூறிவிட்டுக் கமலாவுக்கு உற்சாகத்தையும், நம்பிக்கையும் ஏற்படுத்துவதற்காக எமது ஆற்றுப் படுத்தல் மையம் பற்றியும், அதன் சேவைகள் பற்றியும்,பயன் பெற்ற சிலரது விடயங்கள் பற்றியும் விளக்கினேன்.

"கமலா! சமூக வாழ்க்கையில் பிரச்சனைகள் இல்லாதவர்கள் எவருமே இல்லை. பிரச்சனைகளால் கவலைகளும், தவறுகளால் துன்பங்களும் ஏற்படுவது இயற்கைதான். பிரச்சனைகளையும், துன்பங்களையும் ஒளிவுமறைவின்றிக் கூறினால், முதலில் மனப்பாரம் குறையும். உங்கள் பிரச்சனைகள் என்னவென்று தெரிந் தால்தான் அவைக்குரிய தீர்வு என்ன என்பதைப் பற்றி ஆராயலாம்."

அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த கமலாவுக்குச் சிறிது நேரம் அவகாசம் கொடுக்க எண்ணி, எனது அலுவலக உதவியாளர் ஏற்பாடு செய்த உணவைச் சாப்பிடுவதற்கு ஒழுங்கு செய்தேன்.

கமலா சாப்பிட்ட பின் ஆற்றுப் படுத்தல் மையத்திற்கு அழைத்தேன். மீண்டும் என் முன்னிலையில் அமர்ந்தாள். இறுக்கமான மனநிலையிலிருந்த கமலாவை இயல்பான உரையாடலுக்குத் தயார்படுத்த வேண்டியிருந்தது.

"காலைச் சாப்பாடு எப்படி இருந்தது?"

"தோசை நன்றாகத்தான் இருந்தது. ஆனால்..."

"ஆனால், என்ன?"

"சாம்பாருக்குத்தான் உப்பு அதிகம்" என்றாள்.

"அது ஏனென்றால், சமையல் செய்யும் அம்மா எந்த நேரமும் வெற்றிலை போட்டபடி இருப்பார். அதனால் அவரின் நாக்கு மரத்துப் போய், சுவையை அறியவே முடியாது

**எஸ்.பி.லெம்பட்**

போய்விட்டது" என்றுவிட்டுப் பலமாகச் சிரித்தேன். கமலாவும் சேர்ந்து சிரித்தாள். மெதுவாக விடயத்திற்கு வந்தேன்.

"கமலா! வவுனியாவில் எந்த இடத்தில் இருந்தீர்கள்?"

அவள் தொடர்ந்து கூறிய பதில்களிலிருந்து...

வவுனியா, சாஸ்திரிகூழாங் குளத்தைச் சேர்ந்த கமலாவின் தகப்பன் 1985 ம் ஆண்டில் இறந்து விட்டார். இவரது அக்காவுடனும், தாயுடனும் சேர்ந்து கூலி வேலை செய்து வாழ்ந்து வந்தனர். மூவரும் 1990 ம் ஆண்டு வவுனியாவிலிருந்து இடம் பெயர்ந்து இந்தியாவுக்கு வந்தனர். ஆரம்பத்தில் மண்டபம் முகாமிலே தங்கியிருந்தபோது, மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்து அந்த முகாமிலே தங்கியிருந்த ஒருவரைக் கமலாவின் அக்கா திருமணம் செய்து கொண்டார். கமலாவின் தாய் 1993 ம் ஆண்டு கடும் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். தாயார் இறந்துவிடவே தன் சகோதரியின் குடும்பத்தோடு சேர்ந்து வாழ்ந்து வந்தார் கமலா...

"உங்கள் கணவர் எந்த இடம்?" என்று நான் கேட்டேன்.

கமலா தலைகுனிந்தபடி இருகைகளாலும் முகத்தை மூடி பெரிய சத்தமாக அழத் தொடங்கினாள்.

அவள் ஏன் அழுதாள்...?

தொடர்ந்து வரும்...

# சிங்கப்பூர் அரசின் குழந்தைப் பிரச்சினை

வேண்டாத குழந்தைகளைக் கைவிடுவதற்காக, சிங்கப்பூரில் சில தனி இடங்களை ஒதுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சியாம் சீ தோங் கோருகிறார்.

முறை தவறிய உறவால் குழந்தையைப் பெற்றவர்கள், வறிய நிலையில் உள்ளவர்கள், குழந்தை பிறந்த நேரம் சரியில்லாததால் அதை வீட்டில் வைத்து வளர்க்கக் கூடாது என்று அச்சப்படுகிறவர்கள், உடல் ஊனத்துடனோ, அழகில்லாமலோ பிறக்கும் குழந்தையை வளர்க்க விரும்பாதவர்கள் என்று பல தரப்பினர் இருக்கிறார்கள். சிங்கப்பூரில் அப்படிக் குழந்தைகளை விரும்பாதவர்கள், குழந்தைகளைக் குப்பைத் தொட்டிகளுக்கு அருகில் போட்டு விட்டுச் செல்கின்றனர்.

கடந்த ஆண்டில் மொத்தம் 3 குழந்தைகளும் இந்த ஆண்டில் இது வரை 2 குழந்தைகளும் இப்படிப் பொது இடங்களில் கைவிடப்பட்டுள்ளன.

அக் குழந்தைகளின் பாதுகாப்பை மனதில் கருதி சியாம் சீ தோங் இந்தக் கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்.

வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகள் அருகிலும், முக்கிய சாலைச் சந்திப்புகளிலும், பெரிய கட்டடங்கள் அருகிலும் இத்தகைய குழந்தைகளுக்கென்றே தொட்டில் போன்றவற்றை அரசு போட்டு வைக்கலாம் என்று அவர் கூறுகிறார்.

ஊடறுப்பான்

# தப்பிக்கொண்ட தலைமைகளும் தவறி விழுந்த போராளிகளும்...!

தமிழ் இயக்கங்களின் தலைமைகள் மீது நம்பிக்கை வைத்துத்தான் ஏராளமான தமிழ் பேசும் இளைஞர், யுவதிகள் தங்களையும் அதில் இணைத்துக் கொண்டனர். 86 இல் தனி இயக்கக் கொள்கையைக் கையிலெடுத்துக்கொண்டது புலிகள் இயக்கம்! 87ல் இந்தியப் படையினரின் வருகையோடு புலிகள் இயக்கம் மீதான பழிவாங்கும் படலம் ஆரம்பமாகியது.

புலிகளை அழிப்பதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டு களமிறங்கிய இயக்கங்களின் தலைமைகள் தமது உறுப்பினர்களை ஊட்டி வளர்த்தனர்! உறுதி கொடுத்தனர்! ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவது என்று தீர்மானம் எடுத்துக் கொண்ட இயக்கங்கள் தமது உறுப்பினர்களுக்கு மக்கள் பணி என்ற மகத்தான சேவையினைச் செய்து முடி என்று கட்டளையிட்டிருக்கவில்லை. மாறாகப் புலிகளை ஒழித்து முடி! அன்றேல் செத்து மடி! என்றுதான் கட்டளை பிறப்பித்திருந்தன.

ஏற்கனவே புலிகள் மீதான வெறுப்புணர்வுகளை வளர்த்து வைத்திருந்த இயக்க உறுப்பினர்களுக்குத் தூண்டுதலாக அமைந்தது தலைமைகளின் வழிகாட்டல்! தலைமைகள் சொல்வது உறுப்பினர்களுக்கு வேதம்! புலி வேட்டையில் இறங்கித் தமது தரப்பிலும் கணிசமான தொகையினரை இழந்து விட்டனர் என்பது வேறு! தலைமைகளை நம்பிக் களமிறங்கிய இயக்க உறுப்பினர்கள் அதே புலி எதிர்ப்பு மனோநிலையில் இருக்க, தலைமைகள் புலிகளோடு சங்கமித்து விட்டனர்.

தம்மோடு இன்னமும் இணைந்திருக்கும் உறுப்பினர்களின் காதுகளில் பூ வைத்தும் வருகிறார்கள். தமது பாதையும் புலி எதிர்ப்பின் இன்னொரு வடிவம்தான் என்று சம்பந்தப்பட்ட அமைப்புகள் கூறி வருவதாகத் தெரிகிறது. அதே நேரம் இவர்களால் புலி எதிர்ப்பு வெறி ஊட்டப்பட்ட உறுப்பினர்கள் இவர்களோடு இணைந்து கொள்ளாமல் இன்று நடுத்தெருவில் நிற்கும் நிலை!

ஒரு இயக்கத்தோடு ஒத்துப் போவதும், எதிர்த்து நிற்பதும் இரு வேறு ஜனநாயகப் பண்புகள்தான். எதிர்ப்பதும், ஆதரிப்பதும் அவரவர் உரிமை! அது தவறானது அல்ல! ஆனால் தமது உறுப்பினர்களை ஏதோ ஒரு வழிக்கு இட்டுச் சென்றுவிட்டு, அவர்களை அம்போ என்று கைவிட்டு, தலைமைகள் மட்டும் வேறு திசைக்கு மாறிவிட்டதுதான் தவறான நடவடிக்கை! நீ கழுத்தை நெரி! நான் காலில் விழுகிறேன் பந்தயம் பிடி என்ற நிலையில் உறுப்பினர்கள் கழுத்தை நெரிக்கத் தலைமைகள் அதே கழுத்தைத் தாங்கும் காலில் விழுந்து கொண்டனர்.

அண்மையில் மட்டக்களப்பு ஆரயம்பதியில் ரெலோ அமைப்பின் வரதன் குழுவினரின் அச்சுறுத்தலினால் புலிகளின் காரியாலயம் மூடப்பட்டது என்று செய்தி வந்திருந்தது. அவர்கள் புலிகளைத் தாக்கியதாகவும் பின்பு கைது செய்யப்பட்டதாகவும் அறியப்பட்டது.

இன்றைய சூழலில் அடிதடியில் இறங்கியிருக்கும் இந்த புலி எதிர்ப்பாளர்களை உருவாக்கிவிட்டது யார்? ரெலோ இயக்கத்தினர்தான். முன்னாள் உறுப்பினர்கள் என்று கண்ணை மூடிக்கொண்டு கருத்துச் சொல்லிவிட முடியுமா? இப்படி இன்னும் எத்தனை நூறு உறுப்பினர்கள் மறைந்திருக்கிறார்களோ தெரியாது! அவர்கள் மீது எப்படிப் பழி சுமத்துவது...? தலைமைகள்தானே அவர்களைச் சூடேற்றி விட்டனர். இப்போது தலைமைகள் எங்கே? தொண்டர்கள் எங்கே? இது போன்ற கேள்விகள் மக்கள் மத்தியில் எழுந்துள்ளன.

இன்றைய சமாதான சூழலில் புலிகள் மீதான அச்சுறுத்தலுக்கு ரெலோ அமைப்பினர் என்ன பதில் கூறப்போகிறார்கள்? வேளியேற்றப்பட்டவர்கள் என்று கண்கட்டி வித்தை காட்டப்போகிறார்களா?.... இதற்கான முழுப் பொறுப்பையும் சம்பந்தப்பட்ட ரெலோ அமைப்பினரே ஏற்க வேண்டும் என்ற கருத்துப் பரவலாக எழுந்துள்ளது. வரதன் குழுவினர் போன்றவர்களின் எதிர்காலம் என்ன? அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களாயின் அவர்களை வளர்த்துவிட்ட தலைமைகளுக்கு என்ன தண்டனை?

தண்டனை, தப்பித்துக்கொண்ட தலைமைகளுக்கா...? தவறி விழுந்த போராளிகளுக்கா...?

# தாய்லாந்துப் பேச்சில, மலையகத் தமுழங்களுங்க உரிமைங்களக் கேட்டா என்ன குறைச்சல்...?

இன்னிக்கு இருக்கிற நேரோ, நாளைக்கு இருக்குமுன்னு சொல்லிக்க ஏலாங்துங்க.

இன்னிக்கு நிக்கற மேகோ நாளைக்கு வருமின்னு யாரு கண்டா?

நம்ம மலையகத் தமுழங்களுக்குன்னு ஆயிரொம் பிரச்சினை இருக்குன்னு சொல்லிக் கற தலைவங்க, அந்த ஆயிரத்தையும் சம்பளப் பிரச்சினையும் தொழிற்சங்கப் பிரச்சினையா வுந்தா ஒப்பிக்கறாங்களே தவிர நமுக்குண் டான இனமெங்கறதுக்கான உரிமைங்க பத்தி ஒரு மூச்சுவுடுறானுங்க இல்லையே?

இன்னிவரைக்கு நம்ம தலைவங்க ஒரே தொழிற்சங்கோ, தொழிற்சங்கோமுன்னு சொதப்பிக்கிட்டு இருக்கறப்போதே, இலங்கையில தேசிய இனப் பிரச்சினையெங்கறது எம்புட்டு பூதகரமா கெளம்பி நிக்குது.

இனப் பிரச்சினைங்கறது இன்னிக்கு சர்வதேச மட்டத்தத் தொட்டு, ஒலக நாடுங்க ளெல்லாம் கரிசனை காட்டற அளவுக்குப் போயிடுச்சு.

அதுக்குண்டான தீர்வுங்கறதுகூட, அரசியல் யாப்பை மாத்தனுங்கற நெலமைக்கு போயிடுச்சு.

அரசியல் யாப்ப மாத்தறதுக்கான பேச்சு வார்த்தைங்க கூட ரெண்டு மூனு வாட்டி நடந்து முடிஞ்சு ஒன்னு ரென்னு யாப்பு வடிவங்க கூட சனத்துக்கு மட்டுமில்ல பாராளுமன்றத்துக்கு முன்னாலயும் போடப்பட்டிருக்கு.

ஆனா, நம்ம தலைவங்க, இப்பதா, கோழி கூவிச்சுதா, பொழுது விடிஞ்சுட்டுதான்னு கண்ணக் கசக்கிக்கிட்டு வெளியால எட்டிப் பாக்கறாங்க.

ஏங்க, நாம இதுவரைக்கு, நம்ம மலையச் சனங்க, ஒரு தேசிய இனமா, இல்லீன்னா நாம என்ன தினுசா இருந்துகிட்டு வாறோ, நமக்குன்னு என்ன அரசியல் உரிமைங்களக் கோருரோ, நாம, நம்ம இருப்ப, நம்ம கலாசாரத்த, நம்ம இனத்துவ அடையாளத்த, நம்ம அரசியல் பிரதிநிதுத்துவத்த, நமக்குண்டான பிரதேசத்த, அரசியல் யாப்பு ரீதியான பாதுகாப்ப இலங்கைங்கற இந்தப் பல்தேசிய சமு தாயத்துக்குள்ள எப்புடி வரையறுத்துக்கப் போறோ எங்கற அக்கறையு சிந்தனையு நம்ம தலைவங்க யாருக்காவது இருந்துச்சா...?

ஒரே, தொழிற்சங்கோ, தொழிற்சங்கோ, சம்பள ஒயர்வு, அடையாள அட்டையின்னு நூத்தியம்பது வருஷமா அதையே சுத்தி சுத்தி சொல்லிக்கிட்டு இருந்தா உருப்பட முடியுங் களா?

அன்னிக்கு பூந்த லயத்துக்க இருந்து இன்னிக்கு மூனு தலைமொறைக்குப் பின்னாடியு நாம வெளிவர முடியல, தேயிலத் தோட்டத்துக்கே, கொத்தடிமையாகி, தேயிலைச் செடிங்களுக்கே சமாதியாகி நம்ம சீவியம் பாழாகிக்கிட்டுப் போகுது.

ஏங்க, நாமளும் மத்த சனங்களப்போல, நமக்குன்னு ஒரு வீடு, வளவுன்னு வைச்சுக்கிட்டு, தோட்டம் தூரப்புன்னு செய்துக்கினு, நம்ம கிராமமுன்னு அமைச்சுக்கினு சொயமா வாழப்புடாதா? நாம நம்ம புள்ளைங்கள விரும்புற துறையில படிக்கவைச்சு விரும்புற தொழில செய்துக்கினு விரும்புற வாழ்க்கைய வாழப்புடாதா?

நாட்டுல இருக்கற அம்புட்டுப்பேரு அப் புடித்தா வாழ்ந்துக்கிட்டு இருக்கையில நாம, மலையகத் தமுழங்க மட்டு மொத்த சமுதாய முமே ஏங்க ஒரு துண்டு நெலங்கூட இல்லா தவுங்களா, தோட்டங்களுக்கே அடிமைப் பட்டுக் கெடக்கறோ?

நாம எப்ப ஒரு சுயமான சமுதாயமா நிமிந்து நிக்கப் போறோ?

நாம, அப்புடி நம்ம கிராமங்களில இருந்து நம்ம படிப்ப படிச்சு நமக்குன்னு சொந்தத் தொழிலுங்களத் தேடிக்கிட்டா, இந்தத் தோட் டத்துக்காரங்க, நூத்தி நாப்பத்தி ரெண்னுதா தருவோ, அதுக்கு மேல கட்டாதுன்னு கெண்டி ஷன் போட்டா, போடாப்போன்னு தூக்கி வீசிப்புட்டு ஏந் தொழில நாம் பாக்கறேன்னு போய்க்கிட்டே இருக்கலாமில்ல.

அவுங்க காலடியில வீழுந்து ஒவ்வொரு ரூபாய்ச் சல்லிக் காசுக்கும் ஏங்க காலாகாலமாக் கெஞ்சி வழியனு?

அவுங்கயில்ல நம்ம பின்னாடி வந்து இந் தாபாரு, இம்புட்டு சம்பளந்தாறே, இன்னன்ன வசதிங்கள்ளா செஞ்சு தாறே, தொழிலுக்கு வாறியான்னு கேட்டுக் கிட்டு வரனு?

ஆனாலு, அப்புடி யொரு காலத்த சிந்திக்க முடியுமா இப்ப? சிந்திக்க முடியாதபடி பண்ணிப் புட்டது யாரு..? நம்ம அரசியல் தலைவங்கதா!

இப்பவாட்டி சொல்லட்டு, நாம, மலையகத் தமிழங்க வெறுந் தொழிலாளிக் கூட்டமில்ல, அவுங்க, தங்களுக்குண்டான காலாசாரந் தனித்துவங்களோட சமுதாயமா வாழ்ந்துகிட்டு வாற ஒரு தேசிய இனம். அவுங்களுக்குள்ள பிரச்சினைங்கறது வெறும் பொருளாதாரப் பிரச்சினையில்லை. இல்லாதுபோனா, முன்னய காலத்தில பறிபோன வாக்குரிமை, பிரஜா உரிமை எங்கறது மட்டுந்தா அவுங்க அரசியல் பிரச்சினைங்கறது இல்லை. அவுங்களுக்கான பிரதேசத்தையு, தனித்துவத்தையு, பொருளாதார வாழ்வையு பேணுகற அரசியல் அலகைப் பத்தின சிந்தனை நமக்குண்டு. அதிகாரப் பரவலாக்கலோ, அதிகாரப் பகிர்வோ இந்த நாட்டில மேற்கொள்ளப்படுற சமகாலத்தில நமக்குண்டான அதிகாரப் பரவலாக்கல் பத்தியு நாம பேசவேண்டியிருக்கு. அதுக்கு மேலா, இந்த நாட்டில இனப்பிரச்சினைங்க பிரதான பிரச்சினைக்குத் தீர்வு காணுற செயற்பாட்டில மலையகத் தமுழங்களப் பத்தியு சம முக்கியத்துவத்தோட ஆராயப் படனும். எங்கற ஒரு சிந்தனைய அழுத்தம் திருத்தமா நம்ம தலைவங்க முன்வைக்கட்டுக்கும் பாக்கலாம்.

இனப் பிரச்சினைக்கு தீர்வு காணுறதுங்கறப்போ, அதுக்கு அரசியல் யாப்ப மாத்தியெழுதற முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வரலாற்று திருப்பம் நிகழறப்போ, நாம அந்தத் தருணத்தில நம்ம மலையகத் தமுழங்களோட உரிமைங்கள நிலைநாட்டிக்கலைன்னா அப்புறோ எப்பவுமே இத சாதிச்சுக்க முடியாதவங்களாத்தா ஆகிப்போவோ.

இப்ப தருணமில்லேன்னு சொல்லிக்கிட்டா, எப்ப தருணோ வருமுன்னு சொல்லுங்க?

இம்புட்டு நெருக்கடி ஏற்பட்டப்புறந்தா அரசியல் யாப்பை மாத்திற அவசியோ உணரப்படுறப்போ, இப்போ நாம தவற விட்டுப்புட்டா, அப்புறோ நாம நம்ம நேரங்காலம் பாத்து மாத்தங்கள கோருறப்போ யாரு செவிகொடுப்பா?

இவ்வளத்தையு ஏ நா சொல்ல வாறேன்னா, நம்ம பெரிய கட்சியோட தலைவரு அமைச்சர் ஆறுமுகன் ரெண்ணொரு நாளுக்கு முந்தி பேசின பேச்சில உசும்பிப் போட்டேனுங்க.

அவரு பேசறப்போ சொன்னாரு, நம்ம மலையகத் தமுழங்களுக்கு ரெண்னு மூனு பிரச்சினைங்க இருக்கு. ஒன்னு, சம்பளப் பிரச்சினை, மத்தது, அப்பர் கொத்மலைப் பிரச்சினை, இன்னொன்னு பிரஜா உரிமைப் பிரச்சினையின்னு. இதுங்கள பேசறதுக்கு நாம தாய்லாந்து பேச்சுவார்த்தையில கலந்துக அவசியமில்லை. அது அவுங்க, தங்களோட பிரச்சினைங்களப் பேசிக்கிறாங்க. நாம நம்ம பிரச்சினைகள இங்கயே அரசாங்கத்தோட பேசி தீத்துக்கலாம். அதுக்குண்டான பலம், அதிகாரம், அரசாங்கத்துடனான உறவெல்லாம் நமக்குண்டு எண்னு சொன்னாரு.

ஆனாங்க, அப்புடீன்னா, ஏனாமுங்க நூத்தியம்பது வருஷமா நம்ம அரசியல் உரிமைங்கள இந்தத் தலைவங்களால பெற்றுக்க ஏலாமக் கெடக்கு?

இவரென்ன இவரோட பாட்டன் தொண்டமானே, சக்திவாய்ந்த தலைவரா, எல்லா அரசாங்கங்களிலுமே அமைச்சரா இருந்துங் கூட ஒண்னுமே பண்ண முடியலியே?

ஆக, அவுங்க பறிச்சிகிட்ட பிரஜா உரிமை, வாக்குரிமைய எத்தினியோ வருஷத்துக்குப் பெறவு அரைகொறையாத் திருப்பி வாங்கித் தந்ததத் தவிர மலையக மக்களுக்கு அரசியல் அலகுன்னோ, அதிகாரப் பகிர்வுன்னோ, தேசிய இன அந்தஸ்துன்னோ, பிரதேச உரிமைக்கான வரையறையின்னோ ஒண்னுகூட பண்ணிக்க முடியலியே? மலையகத் தமுழங்களில ஒரு கிராமசேவகரைக்கூட நியமிக்க முடியாத வள்ளலில தானேங்க நாம இருந்தோ. இப்ப இப்பதா அதுக்குக்கூட வழி தேடிக்கறதுக்கு தலையால கிண்டிப் பாத்துக்கிட்டிருக்கோ.

அமைச்சரு அமைச்சருன்னு சொல்லிகிட்டு ஆறாறு வருஷமா கடந்தத் தவிர கண்ட மிச்சமுன்னு என்ன?


வெறும் அன்றாடப் பிரச்சினைங்களா அப்பப்ப கிளம்பற சம்பளப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, மின்சாரப் பிரச்சினை, லயத்துப் பிரச்சினை, ஆசிரிய நியமனோ என்னு பாத்துக்கிட்டே பொழுதப் போக்கிக்கத்தா நேரோ சரியாப் போயிடுச்சு.

மலையகத் தமுழங்களோட அரசியல் பிரச்சினைங்கறது, தங்க கட்சிக்கு பாராளுமன்றத்தில நாலு எம்பி ஒரு அமைச்சரு, மாகாண சபையில மூனு அமைச்சரு எட்டு எம்பிமாரு கெடச்சுபுட்டா சரியாயிடுச்சுன்ன கணக்கோட நிண்டிடிச்சு. அதுல ஒரு கண்ணுன்னா மத்தக் கண்ணு மலையத்துல எதிர்க்கட்சியொன்னு தலையெடுத்துப்புடாமலும் பாத்துப்புடுறதுல மட்டுந்தா.

இந்தக் கணக்கிலதா அமைச்சரு பேசின பேச்சுந் தொனிக்குது. இப்ப என்னப்பா ஒனக்கு அரசியல் பிரச்சினை. நா இருக்கன்ல. ஏதுங் கஷ்ட நஷ்டமுன்னா அரசாங்கத்தோட பேசி வழிபண்ணிப் புடுறே. நீ பாட்டுக்கு தொழிலுக்குப் போனமா, சம்பளத்த வாங்கினமா, சங்கப் பணங் கட்டிப்புட்டு வாற வழியில ஒரு இருநூறு மில்லி வாங்கி ரெண்டு பெக் அடிச்சமா, வூட்ட வந்து சோத்தப் பிசைஞ்சு முழுங்கிப்புட்டு சுருண்டு படுத்தமாண்னு கம்முன்னு இருபாப்போ எங்கறதுதா அவரோட தொனியாத் தெரியுதுங்க.

ஆனாப் பாருங்க, அவரு சொல்லிப்புட்டுப் போயிடுவாரு. நம்ம மலையகத் தமுழங்க உரிமைங்க இல்லாம இருந்துக்கறதெங்கறத விட தமக்குண்டான உரிமைங்க என்னான்னே தெரிங்சுக்காமலே இப்புடிக் கொத்தடிமைங்களாவே நெரந்தரமா ஆகிப் பூடுவாங்களோங்கறதுதா ஏங் கவலைங்க.

**மலைக்குருவி**



# காற்றுவாக்கில்... 12

## "தனக்குத் தெரியாத..."

வாசகர் ஒருவர் எழுதிய நீண்ட கடிதமொன்றின் சாராம்சத்தை இங்கு தருகின்றேன்.

சமீபத்தில் தனியார் வானொலி ஒன்றில் இரவு 10 மணி தொடக்கம் 12 மணிவரையில் பிரபலம் பெற்று வரும் ஒரு அறிவிப்பாளரினால் தொகுப்பு நிகழ்ச்சி ஒன்று வழங்கப்பட்டது. இராகங்கள் பற்றிய நிகழ்ச்சி அது. கர்நாடக சங்கீதம் என்பது செழுமை நிறைந்தது. அதற்கென்று உயர் அந்தஸ்து உண்டு. இராகங்களைப் பற்றி மிக நுணுக்கமாக அறியாதவர்கள் அது பற்றி,அதன் தன்மைகள் பற்றிப் பேசுவது அதிகப்பிரசங்கித்தனமானதாகும். சில பாடல்களின் இராகங்களைக் கொச்சைப் படுத்தி, சரியாக அந்த இராகங்களின் பெயரகளைக் கூட உச்சரிக்காமல் மிகவும் கஷ்டப்பட்டு 'அறிவிப்பு'ச் செய்யப்பட்டது.

'சின்னத்தம்பி' திரைப்படத்தில் வந்த "குயிலைப் புடிச்சு..." என்ற பாடலில், உண்மையில் 'மாயா மாளவ கௌளை' என்ற இராகம் இளையோடியது. வானொலியில் அன்று தெரிவிக்கப்பட்ட இராகத்தின் பெயர் "மாயமலவ் கௌலவி"; "வாஸஸ்பதி" இராகத்தில் அமைந்த பாடலை "வச்சஸப்ட்டி" என்றும் "ஸரஸாங்கி" இராகத்தில் அமைந்த பாடலை "ஸரஸங்கி" என்றெல்லாம் அந்த நிகழ்ச்சியில் கூறப்பட்டது.

அது மட்டுமா?,"நேயர்கள் இரவு 10 மணி தொடக்கம் 'இராகமாலிகை'யாக அமைந்த பாடல்கள் சிலவற்றை இளையராஜாவின் இசையில் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்" என்றாரே பார்க்கலாம்! இசையறிந்தவர்கள் இந்த நிகழ்ச்சியைக் கேட்டுக் கொண்டிருந்தால் தற்கொலை செய்து கொண்டிருப்பார்களோ, என்னவோ! 'இராகமாலிகை' என்ற பதத்திற்குத் தனி அர்த்தம் உண்டு. ஏதேனும் ஒரு பாடல் பல இராகங்களில் இசைக்கப்பட்டிருந்தால், அதை "இராகமாலிகை' என்று குறிப்பிட்டிருக்கலாம். ஆனால், இவர் வெவ்வேறு இராகங்களில் அமைந்த சில பாடல்களை ஒலிபரப்பிவிட்டு, "இராகமாலிகை'யாக அமைந்த பாடல்கள் ஒலிக்கின்றன" என்று கூறினால் என்ன அர்த்தம்? சுத்த அபத்தம் போங்கள்!

"தனக்குத் தெரியாத... தனது பிடரிக்குச் சேதம்" என்று சும்மாவா கூறினார்கள்!

## மின்னல் பற்றி

நீல நிறத்தைத் தன் பெயரில் அடக்கிக்கொண்டிருக்கும் ஒருவர், அவர் பச்சை என்பது வேறு விஷயம், சென்றவாரம் நூல் வெளியீட்டு விழாவில் 'சக்தி'யின் 'மின்னல்' நிகழ்ச்சி பற்றி நொந்துகொண்டார். தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு ஏற்படத் தாமும் காரணகர்த்தாவாக இருந்தார் என்பதைக் குறிப்பிட்டதோடு நின்று விடாமல், அவ்வாறு இணைந்து கொண்டவர்களை 'மின்னல்' நிகழ்ச்சி

**காற்றாடி**

யில் 'அடிபட' வைக்கிறார்கள் என்று ஆதங்கப்பட்டுக்கொண்டார்.பல்வேறு கட்சிகளின் பிரமுகர்களுக்கும் இடமளிக்கும் இந்த நிகழ்ச்சியில் அவர்களுக்கும் இடமளித்தது தவறா?அவர்கள் 'அடிபட்டுக்கொண்டால்' அவர்களைக் கண்டிக்கவேண்டுமே தவிர, மின்னலையா குற்றஞ் சுமத்துவது?

## ஊரின் பெயருக்கு வந்த யோகம்

தமிழ்த் தேசிய ஒலிபரப்பு இரவு 10.30 க்கு முடிவடையும் பொழுது "வணக்கம் கூறி விடைபெறுபவர்" என்று குறிப்பிட்டுவிட்டு அறிவிப்பாளர் தனது பெயரைச் சொல்வது சமீப ஆண்டுகளாக ஒரு வழக்கமாகி வந்துள்ளது. சென்ற வாரம் இதிலும் ஒரு புதுமை செய்திருக்கிறார்கள். தனது பெயரைச் சொன்ன அறிவிப்பாளர், திடீரென்று "புங்குடுதீவு..... (பெயர்)" என்று குறிப்பிட்டார். இது என்ன புதுக் குழப்பம் என்றா காற்றாடியிடம் கேட்கிறீர்கள்? மூச்!, 'தட்டிக் கேட்க ஆளில்லாட்டா, தம்பி சண்டப் பிரசண்டம்'தான்!

## வானொலிக்குத் தவணைப் பரீட்சை

கடந்த ஜூலை மாதம் முதல் இலங்கை வானொலி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் செலவினத்தைக் குறைக்கும் வகையில் ஒலிபரப்பு நேரங்களை மட்டுப்படுத்தியது. இது மும்மொழிகளுக்கும் பொருத்தமானதாக இருந்தபோதிலும், தமிழ்ச் சேவையைப் பொறுத்தவரையில் ஒரு பிரத்தியேகச் செய்தியாக, இத் தகவல் வெளியாகியிருக்கிறது. அதாவது, தமிழ்த் தேசிய சேவைக்கு செலவினத் தைக் குறைத்து சிக்கனத்தைப் பேணும் படியும் தென்றலுக்கு வருமானத்தைக் கூட்டி இலாபத்தை ஈட்டும் படியும் இரு கட்டளைகளை முகாமைத்துவம் விடுத்திருந்ததாம்.

இதன்படி புதிய மாற்றம் நடைமுறைக்கு வந்து இரண்டாவது மாதமாகிய இம் மாதம், நடாத்தப்பட்ட முதலாந் தவணைப் பரீட்சையில் தென்றல் குறிப்பிடத்தக்க புள்ளிகளைப் பெற்றதால் முதல் ஏற்பாடாக முகாமைத்துவம் நல்லதொரு பரிசு வழங்கியிருக்கிறது. அதாவது செப்டம்பர் மாதம் முதல் இரவு ஒலிபரப்பு நேரம் 10 லிருந்து 11.15 வரை நீடிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஒக்டோபர் மாதத்தில் நடைபெறவிருக்கும் இரண்டாம் தவணைப் பரீட்சையின் போது இன்னும் அதிகம் புள்ளிகளைப் பெற்றால் நள்ளிரவு 12 மணிவரையும், அடுத்த டிசம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் வருட இறுதிப் பரீட்டசையின் போது இன்னும் கூடிய புள்ளிகளைப் பெற்றால் புதுவருடத்திலிருந்து 24 மணிநேர சேவையாகவும் தென்றல் தரமுயர்த்தப் படலாம் என 'காற்றாடி'க்குக் "காற்றுவாக்கில்" செய்தி கிடைத்துள்ளது.

அதேவேளையில், கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிக் கட்டெறும்பே காணாமற்போகும் அளவுக்கு வந்திருக்கும் தமிழ்த் தேசிய சேவை முதலாம் தவணைப் பரீட்சையில் (செலவைக் குறைத்துக் காட்டி) குறிப்பிடத்தக்க புள்ளிகளை எடுத்திருப்பதாகக் கேள்வி.

புதிய நிகழ்ச்சிகளுக்குப் பதிலாக (மீண்டும் மீண்டும்) மறுஒலிபரப்புக்களுடன், கொடுப்பனவுகள் இன்றி நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதுடன், முக்கியமாக, பேணப்பட வேண்டிய ஒலிப்பதிவு நாடாக்களில் நிகழ்ச்சிகளை அழித்து அவற்றில் புதிய ஒலிப்பதிவுகளை செய்வதன் மூலம் தேசிய சேவைச் செலவைக் குறைத்து சிக்கனத்தைக் காட்டியுள்ள போதிலும், விமோசனம் கிடைக்கவில்லையாம். தேசிய சேவையில் ஒலிபரப்பாகிவந்த தமிழரின் கலை, கலாசார, சமூக நிகழ்ச்சிகளுக்கு எந்த வகையிலும் மீட்சி இல்லையாம். ஒரு வேளை அதுதான் அங்குள்ள பெரியவர்களின் நோக்கமோ, என்னவோ!

## ஸ்போர்ட்ஸ்

## எலன் போடர் நியமனம்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளராக அந்த அணியின் முன்னாள் தலைவர் எலன் போடர் தற்காலிகமாக நியமிக்கப் பட்டுள்ளார்.

அணியின் பயிற்றுவிப்பாளராகப் பணியாற்றிய ஜோன் புகானன் காயங்களுக்கு உள்ளாகியிருப்பதால், அவுஸ்திரேலிய 'ஏ' அணியின் பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றி வந்த எலன் போடர் தேசிய அணியின் பயிற்றுவிப் பாளராக அழைக்கப்பட்டுள்ளார்.

எவ்வாறெனினும் அடுத்த மாதம் 12ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகும் ஐ.சி.சி. உலகக் கிண்ணப் போட்டிகளின் போது புகானன் பயிற்றுவிப்பாளராக மீண்டும் இணைந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஒப்பந்தப் பிரச்சனைகளால் ஐ.சி.சி. போட்டிகளில் சிக்கல்

ஐ.சி.சி. மினி உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை, இந்திய அணிகளின் முன்னணி வீரர்கள் பங்குகொள்வதில் நிச்சயமற்ற நிலை தோன்றியுள்ளது.

இரு அணிகளையும் சேர்ந்த சில வீரர்கள் வெளிநாட்டு பிராந்திய அணிகளுடனும், விளம்பர நிறுவனங்களுடனும் செய்து கொண்டுள்ள சில ஒப்பந்தங்களை இடைநிறுத்தி வைத்து விட்டு ஐ.சி.சி. போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் மினி உலகக் கிண்ண ஆட்டங்களில் பங்கு கொள்ள இந்திய வீரர்கள் சிலர் மறுப்புத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் சச்சின் டெண்டுல்கர் சௌரவ் கங்குலி உள்ளிட்ட சிரேஷ்ட வீரர்களுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன. ஐ.சி.சி. போட்டிகளில் பங்கு கொள்ள இந்த வீரர்கள் சம்மதிப்பார்கள் என இந்திய கிரிக்கெட் வாரியத்தின் தலைவர் ஜெக்மோகன் டால்மியா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதே வேளை இவ்வாறான ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ள இலங்கை வீரர்கள் மினி உலகக் கிண்ண போட்டியில் கலந்து கொள்ள வேண்டுமாயின் போட்டிகளுக்காக ஐ.சி.சி.யினால் வழங்கப்படும் தொகையின் 30 சதவீதத்தைத் தமக்கு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். ●

## இந்திய அணிக்கு இனிங்ஸ் வெற்றி

சுற்றுலா இந்திய அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் லீட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி ஒரு இனிங்ஸினாலும் 46 ஓட்டங்களினாலும் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 8 விக்கெட் இழப்பிற்கு 628 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இந்திய அணியின் சார்பில் சச்சின் டெண்டுல்கர் 193 ஓட்டங்களையும் ராகுல் ராவிட் 148 ஓட்டங்களையும் சௌரவ் கங்குலி 128 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 273 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பின்னர் ஃபலோ ஒன் முறையில் இரண்டாவது இனிங்ஸையும் ஆடுமாறு இங்கிலாந்து அணி கேட்கப் பட்டது. இங்கிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸில் 309 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்தப் போட்டியின் போது இந்திய வீரர்கள் அனைத்து அம்சங்களிலும் திறமை காட்டியதாக இங்கிலாந்து அணியின் தலைவர் நசார்ஹுசைன் பாராட்டினார்.

தற்போது தொடரில் இரண்டு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றியீட்டியுள்ளன. இங்கிலாந்து மண்ணில் இந்திய அணி சுமார் 20 வருடங்களின் பின்னர் இனிங்ஸ் வெற்றியை ஈட்டியுள்ளது.

## கூடிப் பிரிந்திருந்தால் கூடும் துன்பம்....

"அகல்யா, எழுந்திரடி... இதென்ன பகல் நேரத்தில் படுக்கை..." என்றபடி அவளை உலுக்கி எழுப்பினாள் வதனி.

படுக்கையிலிருந்து எழுந்து சோம்பல் முறித்தாள் அகல்யா. முறித்த சோம்பலிலேயே கொடி போலத் துவண்டாள். மீண்டும் படுக்கையில் அமர்ந்திருந்த தன் தோழியின் மடியில் வீழ்ந்தாள்.

படுத்திருந்தபடி அவள் வயிற்றுக்குள் முகம் புதைத்து முணுமுணுத்தாள், "கிழித்துப் போட்ட பாதியுடல் எப்படி எழுந்து நடக்கும்?" என்று.

"ஏன், யாருன்னைக் கிழித்துப் போட்டது?"

வதனியின் கேள்விக்குப் பதில் சொல்லாது அவள் இடுப்பைக் கைகளால் சுற்றிக் கட்டிக்கொண்டு படுத்திருந்தாள் அகல்யா.

அவள் ஏதோ நினைவுகளின் வேதனையில் தத்தளிக்கிறாள் என்று புரிந்துகொண்டாள் வதனி.

"ஏய், எழுந்திரு ... இப்படியே விழுந்து விழுந்து கிடந்தால் வேண்டாத யோசனைகள்தான் ஆளைத் தின்னும். வா, எங்காவது காலாற நடந்து வரலாம்... எழும்பு.." என்று அவள் தோளை அசைத்தாள்.

அகல்யா அசைவதாக இல்லை. குப்புறக் கிடந்தவளின் முதுகு குலுங்குவதை அவதானித்தாள் வதனி. "ஏய்... என்ன இது? அழுகிறாயா? ச்சீ... கோழைப் பெண்ணே! எழும்புடி..." என்று அகல்யாவின் தோள்களைப் பற்றித் தூக்க முயற்சித்தாள்.

"கண் குடங்கள் உடைத்துக் காரியங்கள் முடிக்கிறேன்... இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குப் பின் இந்தப் பிணத்தின் தகனம்?" என்று மடிக்குள் புதைந்திருந்தபடி கேவினாள் அகல்யா.

"என்னடி இது? இப்போ அழுவதை நிறுத்தப் போகிறாயா? அல்லது நான் போய்விடட்டுமா? நான் இருப்பதுதானே உன் கவலையை அதிகப்படுத்துகிறது...?"

அவசரமாகக் கண்களைத் துடைத்தபடி எழுந்தாள் அகல்யா. "நீயும் போய்விடாதே. தனிமை என்னுயிரைத் தணலாக்கிவிடும்... தயவு செய்து என்னோடிரு" என்று கெஞ்சினாள்.

வதனிக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இருந்தாலும் அவளது ஆசைகள் அநியாயமானவை என்று தெரிந்திருந்தாள்.

"என்ன இருந்தாலும் அவனுடையவள் நீயில்லையே தோழி... அவனை நினைத்து உருகுவது சரிதானா?"

அகல்யாவுக்கு இமைகள் வெடித்துக் கண்ணீர் வழிந்தது.



"நான் என்னடி செய்வேன். அவர் இங்கு வந்தபோது நான் அதை அறியவில்லையே... தவிரவும், என்னை இன்பத்தின் எல்லைகளுக்கு அழைத்துப் போன அவர், அதெல்லாம் நிரந்தரமானதில்லை என்று எனக்குச் சொல்லவேயில்லையே... சொர்க்கத்தைக் காட்டிய பிறகு என்னை நரகத்திலே வீழ்ந்துகிட என்று தண்டிப்பது என்னடி நியாயம்...?"

அகல்யாவின் கையைத் தன் கைகளில் எடுத்துப் புறங்கையை மிருதுவாக வருடினாள் வதனி.

ஆண்களைத் தீர ஆராயாமல் அனுமதித்துவிடுவது தவறு தோழி. இப்போது உன் துயரம் ஊராரின் நகைப்புக்கிடமே தவிர, யாரும் உன் வேதனையைப் புரிந்துகொள்ள மாட்டார்கள்..."

"வேண்டாம், வேறு யாரும் புரிந்துகொள்ள வேண்டாம். அவர் என் நிலைமை அறிந்தவரல்லவா... ஏன் இப்படி என்னைத் தவிக்க விட வேண்டும்?"

வதனி சிரித்தாள்.

"இன்னொருத்திக்குச் சொந்தமானவனிடம் நீ எப்படி எதிர்பார்ப்புகளை வைத்திருக்கிறாய்?"

அகல்யா கோபமாகக் குறுக்கிட்டாள்.

"என்னுடன் கூடி இருக்கையில், அவர் வேறு யாருக்கும் சொந்தமானவர் என்று தெரியாது. என்னிடம் அவர் அப்படி நடந்துகொள்ளவுமில்லை. அதனால், இப்போது மட்டும் என்னைத் தவிக்க விடுவது நியாயமேயில்லை..."

"நீ போகாத ஊரின் வழி சொல்கிறாய்" என்றாள் வதனி.

"இல்லை, ஏற்கனவே நான் போயிருக்கும் ஊர்தான். அங்கு இந்த மனிதர்கள் துன்பங்கள் எதுவுமே இல்லை. மன்மத தேசத்தில் நாங்கள் இருவருமே மந்திரிகளாக இருந்தோம். வருவார், அருகில் அமர்வார். அப்போது மட்டும் தனித்தனி உடம்புகளை உடையவர்களாய் இருப்போம். படுத்தால் ஈருடலும் ஒன்றுபட்டுவிடும். வில்லின் நாணைப் பிடிக்கும் விரல்கள் ஒன்றாகிவிடுவது போல ஒருடலாவோம். பிறகு அவர் புறப்பட்டுத் தன் இல்லம் போனபிறகு என் உடலாகிய இந்த ஒரு உடலை மட்டும் தனியே கிடந்து துடிக்க விடுவது எந்த ஊர் நியாயம்?" என்று ஆவேசமாகக் கேட்டு நிறுத்தினாள் அகல்யா.

பொய்யை ஆம்பல் அணிநிறக் கொழு
-முகை
வண்டுவாய் திறக்கும், தண்துறை
-ஊரனொடு,
இருப்பின் இரு மருங்கினமே; கிடப்பின்
வில்லக விரலின் பொருந்தி; அவன்
நல் அகம் சேரின் ஒரு மருங்கினமே.

(குறுந்தொகை 370)

★ 'பாபா' பார்த்துவிட்டீர்களா?

வேணு, பெரியநீலாவணை.

ம்... ரஜனிக்கென இனி கதைகளை அமைப்பது கஷ்டமென்பதை அவரும் புரிந்துகொண்டிருப்பார். அரசியலா?, ஆன்மீகமா? என இரண்டிலொன்றைத் தெரிவுசெய்துகொண்டு போய்விட வேண்டியதுதான்.

XX

★ காட்டுக்குள்ளிருந்து கொலைகளைச் செய்துவரும் சந்தனக் கடத்தல் வீரப்பனுக்காக, நடிகர் ரஜனிகாந்த் மீது பா.ம.க. தலைவர் ராமதாஸ் இவ்வளவு ஆவேசமான தாக்குதல்களைத் தொடுக்கக் காரணம் என்ன?

கே.கிருஷாந்தன், திருகோணமலை.

கருணைநிதியும், மூப்பனாரும் நயமாகக் கேட்டுப் பார்த்தும் நடக்காததைப் பயமுறுத்தியேனும் நடக்க வைத்து விடலாம் என்று பா.ம.க. தலைவர் முயல்கிறாரென்று தெரிகிறது. சீண்டினால்தான் சிங்கம் குகையைவிட்டு வெளியே வரும்; அரசியலிலும் குதிக்கும். அப்போது பார்த்துவிடலாம் அதன் பலத்தை என்பது ராமதாஸின் கணக்காக இருக்கும்!

XX

★ தனது ஏகாதிபத்தியக் கொள்கை மூலம் பயங்கரவாதத்தை வளர்த்த அமெரிக்கா, அதனை அழித்தொழிக்க சகல நாடுகளுக்கும் அழைப்பு விடுப்பது பற்றி...?

எம்.ரீ.எம்.சைலாஸ், கம்மல்துறை.

அறுக்கும்போது ஆள் துணை தேவைப்படுகிறது.

XX

★ சிந்தியாவின் சமீபத்திய அதிர்ச்சி என்ன?

ஐ.எஸ்.பிரியா, கித்துள்.

மலேசியக் கலைவிழா ஆட்டங்களில் பார்த்த நடிகைகளின் தொப்பை!

XX

★ சிந்தியா, ஒரு பந்தை ஆறு தடவைகள் வீசினால் அதற்குப் பெயர் ஒரு ஓவர். ஆறு பந்துகளை ஒரே தடவையில் வீசினால் அதற்குப் பெயர் என்ன?

எஸ்.இராமச்சந்திரன், மாரதென்ன.

இராமச்சந்திரரே! இது ரொம்ப ஓவர்!

XX

★ சச்சின் டென்டுல்கரின் சாதனை எப்படி?

கே.கஜேந்திரன், நுவரெலியா.

முப்பது சதம், முப்பத்துநான்கு சதம் என்பதெல்லாம் ஒன்றுமில்லை. அவருடைய சாதனை அதற்கெல்லாம் வெகு தூரத்திலிருக்கிறது.

XX

★ மோகனுக்கு 'விதி' போல, நியாஸ் கானுக்கு 'சித்தி' அமையுமா?

ஏ.எஸ்.அஸாம், நுரைச்சோலை.

அமைந்துவிட்டது. இல்லாமல் ஆளவந்தான், பாபா வாய்ப்பெல்லாம் கிடைத்திருக்குமா? இப்போது ஒரு படத்தில் கதாநாயகனாகவும் நடித்து வருகிறார்.

XX

★ 'சாமுராய்' படத்தில் உங்களுக்குப் பிடித்த கட்டம் எது?

ஜெ.லக்கி, பெரியகல்லாறு.

பொலிஸிடம் ரத்தம் கக்க அடி வாங்கிக்கொண்டிருக்கும் சமயம், "இப்படி ஒருமுறையாவது ஊழல் பேர்வழிகளை அடிச்சிருக்கீங்களா?" என்று விக்ரம் கேட்கும் கட்டம். வசனம்: பட்டுக்கோட்டை பிரபாகர்.

XX

★ கவிஞர் அப்துல் ரஹ்மானின் கவிதைகளில் தங்களுக்குப் பிடித்த வரிகள்?

பி.விக்னேஸ்வரன், ஹட்டன்.

வேலிக்கு வெளியே தலையை நீட்டிய
என் கிளைகளை வெட்டிய தோட்டக்காரனே,
வேலிக்கு அடியில் நழுவும்
என் வேர்களை என்ன செய்யப் போகிறாய்?

XX

★ பிரதமர் ரணிலின் வெற்றி எது?

வே.அனுஷா, முள்ளியவளை.

சந்திரிகா கட்சியினரால் தீவிர இனவாதத்தைத் தூக்கிப் பிடித்து எதிர்ப்புக் காட்ட முடியாமலிருப்பது!



★ சில பெண்களுக்குத் தாடி வளர்வதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பி.எம்.அஸ்ரப், நிககொள்ள.

சில ஆண்களுக்கு மீசை வளராததைப் போல என்று.

XX

★ தலிபான்களின் செல்வாக்கு பாகிஸ்தானிலும் மிகுதியாக இருப்பதாகத் தெரிகிறதே! அங்கும் பெண்கள் அதிக கட்டுப்பாடுகளுடன்தான் வாழ்கிறார்களா?

வி.மாலதி, பொகவந்தலாவை.

நகைச்சுவை உணர்வு மிகுந்த மக்கள் வாழும் நாடுகளில் அடக்குமுறைகள் நீடிக்க முடியாது. பாகிஸ்தான் பெண்கள் கிண்டலும், கேலியும், ஆழமான நகைச்சுவை உணர்வும் கொண்டவர்கள்.

உதாரணத்திற்கு, 'ஃபிறைடே ரைம்ஸ்' என்ற பாகிஸ்தானிய வார இதழில் ஒரு பெண் கட்டுரையாளர் எழுதியிருக்கும் குறிப்புகளைத் தருகிறேன். ஆண்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதற்குச் சில பொருட்களை உதாரணமாகச் சொல்லி விளக்கம் கொடுத்திருக்கிறார் பாருங்கள்.

1. ஜமுக்காளம்- பழசாகப் பழசாக நிறைய சொட்டைகளைப் பார்க்கலாம்.

## சிந்தியா பதில்கள்

2. தட்பவெப்பம்- தட்பவெப்பத்தையும் நம்மால் மாற்ற முடியாது, ஆண்களையும் மாற்ற எதனாலும் முடியாது.

3. மிக்ஸி- உங்களுக்கு வேண்டும். ஆனால், எதற்காக என்று சரியாகச் சொல்ல முடியாது.

4. சொக்லேற்- இனிப்பு, வழவழா, குற்ற உணர்ச்சி தருவது.

5. விளம்பரங்கள்- சொல்வதில் ஒரு வார்த்தையையும் நம்ப முடியாது.

6. துணிக்கடைகள்- உங்கள் உடைகள் திடீரென்று அவர்களது பிரச்சனை.

7. அரசாங்கத்தில் போட்ட சேமிப்புப் பத்திரம்- முதிர்ச்சி அடைய வெகுகாலம் பிடிக்கும்.

8. சோதிடம்- நீங்கள் என்ன பண்ணவேண்டும் என்பதைச் சொல்லிக்கொண்டேயிருக்கும். முக்கால்வாசி தப்பாக இருக்கும்.

9. பேதி மருந்து- ஒரே எரிச்சல்தான். எங்கே என்றுதான் உங்களுக்கெல்லாம் தெரியுமே!

# மன்னாதி மன்னன் 119

## செட்டியாரின் புதல்வர்கள்

பதினேழாம் படிக்குக் காவலாக இருந்த கருணாகர வல்லிப்பதுமை தான் கூறிவந்த நவமோகினி மஞ்சரி கதையின் முடிவில், மகாபுரியில் வேதாளங்களின் தலைவியாக விளங்கிய நவமோகினியை அவள் மீது காதல்கொண்ட ஏழைப் பிரமணனுக்குத் திருமணம் முடித்துவைத்தார், மன்னர் விக்கிரமாதித்தன் என்றுகூறி முடித்தது.

இக் கதையைக் கூறி முடிக்கும்போது பொழுது விடியும் காலமாகிவிட்டது. களைப்பற்ற போஜமன்னன் அரண்மனை திரும்பி காலைக் கடன்களை முடித்து விட்டு மீண்டும் தமது பரிவாரங்களுடன் அரியணை வைக்கப்பட்டிருந்த மாளிகையை வந்தடைந்தார். அரியணைக் குரிய பூசைகளை முடித்துக் கொண்டு படிகளில் ஏறிய மன்னரை பதினெட்டாம் படியில் காவலுக்கு நின்றிருந்த பரிமள வல்லிப் பதுமை மறித்தது, வழக்கம்போல் அப் பதுமையும் விக்கிரமாதித்த மாமன்னரின் வீரப்பிரதாபங்களையும் பரோபகார சிந்தையையும் விளக்கும் கதை ஒன்றைக் கூறத் தலைப்பட்டது.

பரிமளவல்லிப் பதுமை கூறிய கதை மன்னர் விக்கிரமாதித்தனின் கூர்மையான மதிநுட்பத்தை விளக்குவதாக அமைந்தது.

அழகபுரி என்ற நகரத்தில் பரம்பரை பரம்பரையாக வணிகத் தொழில் புரிந்து வந்த குடும்பத்தைச் சேர்ந்த நீதிபரன் என்ற செட்டி நல்ல செல்வச் சிறப்போடு வாழ்ந்து வந்தார். அவருக்கு நான்கு புதல்வர்கள் இருந்தனர். அவர்களுக்குப் போதுமான கல்வி அறிவை ஊட்டியதுடன் வியாபாரத்திலும் பல நுட்பங்களை அறிவித்து வைத்தார். இருப்பினும் நால்வரும் போதுமான ஆற்றலுள்ளவர்களாக வளரவில்லை.

தனது பிள்ளைகளைப் பற்றிய கவலை அதிகரித்தமையினால் நோய்வாய்ப்பட்ட நீதிபரன் செட்டி ஒருநாள் உயிரிழந்தார். இறக்கும்போது கூட அவர் புதல்வர்களிடம் எதுவும் கூறவில்லை. அவர் மிகச் சிறந்த வர்த்தகராக இருந்தபோதும் அவர் இறக்கும்போது எத்தகைய சொத்தும் இருந்ததற்கான அடையாளம் எதுவுமே தென்படவில்லை.

பிள்ளைகள் தந்தையின் ஈமக்கடன்களைக் கைவசம் இருந்த சொற்ப பணத்தை வைத்து முடித்தனர். செட்டியாரின் உறவினர்களிடம் கூட வந்திருந்த பலவகையில் ஆராய்ந்தும், செட்டியார் தமது பிள்ளைகளுக்காக எதுவிதமான சொத்து சுகமும் வைக்காமல் போய்விட்டதனை எண்ணி வியந்தனர்.

அவர்களுக்குச் சொந்தமாக, அவர்கள் வாழ்ந்து வந்த வீடு மட்டுமே இருந்தது. நால்வரும் அந்த வீட்டிலோ அல்லது அந்த ஊரிலோ வாழ விரும்பவில்லை. தங்கள் தந்தையாரின் வர்த்தகம் தொடர்பான கணக்குப் புத்தகங்களை எடுத்து வைத்து நால்வரும் ஆராயத் தலைப்பட்டனர். அவ்வாறு அவர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கும்போது, அவர்களுக்கு ஒரு ஓலை கிடைத்தது; அவ்வோலை அந்த நால்வருக்காகவே அவர்களுடைய தந்தையாரால் எழுதிவைக்கப்பட்டிருந்தது.

"எனதருமைச் செல்வங்களே, இளமையிலிருந்தே உங்கள் நால்வருக்கு மிடையில் ஒற்றுமை நிலவவில்லை. நமது குலத் தொழிலான வாணிபத்தில் நீங்கள் போதுமான அக்கறை காட்டவில்லை. உங்கள் நால்வரிலும் ஊதாரித்தனமே மிதமாக இருந்தது. இதனால் நமது திரண்ட செல்வத்தைக் கண்ணில் பட வைக்க விரும்பவில்லை. நீங்கள் நால்வரும் ஒற்றுமையாக வாழ்ந்து எமது பரம்பரைத் தொழிலை விருத்தி செய்ய வேண்டும் என்பதே எனது ஆசை. எனவே நான் பாவித்த கட்டிலின் நான்கு கால்களின் அடியில் நான் புதைத்து வைத்துள்ள முறையினை அனுசரித்து ஒற்றுமையாக, பன்னீர்போல் வாழக்கடவீர்கள்."

இவ்வாறு அவ்வோலையில் எழுதப்பட்டிருந்தது. நால்வரும் தந்தையாரின் படுக்கை அறையில் கிடந்த கட்டிலை அப்புறப்படுத்திவிட்டு, அக்கட்டில் கால்களின் கீழ் நிலத்தைத் தோண்டினர்.

**இராஜகுமாரன்**

முதலாவது காலின் அடியில் பத்துச் செம்புகளில் கரி காணப்பட்டது. அடுத்த காலின் அடிப்பாகத்தைத் தோண்டிய போது அதனுள் இருந்த ஒரு பாத்திரத்தில் தண்ணீர் மட்டும் தென்பட்டது. மூன்றாவது காலின் அடியில் ஒரு பாத்திரத்தில் எலும்புத் துண்டுகள் காணப்பட்டன. நாலாவது காலின் அடியில் வெறும் மணல் மட்டுமே காணப்பட்டது.

செட்டியாரின் புதல்வர்கள் நால்வருக்கும் எதுவுமே புரியவில்லை. தங்கள் தந்தையாரிடத்தில் கோபமும் துயரமுமே ஏற்பட்டது. கட்டிலின் கால்களின் அடியில் காணப்பட்ட பொருட்களுக்கான விளக்கத்தை அறிய விக்கிரமாதித்த மாமன்னரிடமே செல்வதென அந்நால்வரும் தீர்மானித்து அப்பொருட்களுடன் மன்னர் விக்கிரமாதித்தனைக் கண்டு வனங்கி, தங்கள் தந்தையார் தங்களுக்காக வைத்து விட்டுச் சென்ற ஓலையைக் காட்டினார்கள்.

கட்டில் கால்களின் கீழ் கண்டெடுக்கப்பட்ட பொருட்களையும் மன்னரிடம் காண்பித்தார்கள்.

முதலாவதாக எலும்புகள் வைக்கப்பட்டிருந்த பாத்திரத்திலுள்ள எலும்புத் துண்டுகளை மன்னர் எண்ணிப் பார்த்து விட்டு இந்த துண்டுகள் ஒவ்வொன்றுக்கும் பத்துப் பசுக்களை தானம் செய்ய வேண்டும் என்று உங்கள் தந்தையார் உங்களைக் கேட்டுள்ளார்" என்றார்.

அடுத்ததாக எடுத்த பாத்திரத்தில் கரித்துண்டுகள் காணப்பட்டன. அவற்றைப் பார்த்த மன்னர் "உங்கள் வீட்டுச் சமையலறையிலுள்ள அடுப்புகளுக்குக் கீழ் புகை படிந்த கரிய நிறப் பொன் தாரைகள் காணப்படும்" என்று கூறினார்.

மன்னர் அடுத்த பாத்திர[illegible]திலிருந்த மணலைக் கொட்டி எண்ணி[illegible]இதில் மூவாயிரத்து முன்னூற்[illegible]த்து மூன்று வெண்கலப் பானை[illegible]கும். அவற்றிலுள்ளவற்றை எடுத்[illegible]வரும் சமமாகப் பங்கிட்டு சிறப்பாக[illegible]வேண்டும் என்பதே உங்கள் தந்தை[illegible]விருப்பமாகும். கடைசியாக மன்ன[illegible]எடுத்த பாத்திரத்தினுள் வெறும் த[illegible]ீர் மட்டுமே காணப்பட்டது. அதை[illegible]பார்த்த மன்னர், "நீங்கள் உங்களுக்குரி[illegible]வற்றை சமமாகப் பங்கிட்டு, எந்த விதமான தப்புத் தண்டாக்களுக்கும் போகாமல் தெளிந்த நீரைப்போல் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று உங்கள் தந்தையார் கூறியிருக்கிறார்" என்று விளக்கம் தந்தார் மன்னர்.

"எனவே நீங்கள் உடனே சென்று உங்கள் தந்தையார் உங்களுக்காகச் சேர்த்து வைத்த செல்வத்தை எடுத்துச் சிறப்பாக வாழுங்கள்" என்று அறிவுரை கூறி வாழ்த்தி அனுப்பினார்.

நால்வரும் மிகுந்த மகிழ்ச்சியடைந்து தங்கள் வீட்டை அடைந்து, முதலில் அடுப்படியில் வைக்கப்பட்ட வெண்கலப் பாத்திரங்களைத் தோண்டி எடுத்தனர். அவற்றில் ஏராளமான பொன்னும் விலையுயர்ந்த ஆபரணங்களும் இரத்தினங்களும் காணப்பட்டன. அவர்களுடைய மகிழ்ச்சி பன்மடங்காகியது.

இதற்கிடையில் இந் நால்வரும் சிறுவர்களாக இருக்கும் போது இவர்களுடைய வீட்டிலிருந்த பசுக்களைப் பராமரித்து பால் கறந்து கொடுத்து வந்த பணியாளன் ஒருவன் நாற்பது பசுக்களைத் திருடிக்கொண்டு ஓடிவிட்டான். அப் பணியாளன் அடுத்த நாட்காலை செட்டியாரின் புதல்வர்களிடம் திரும்பி வந்து அவர்களைக் கண்டு வணங்கி நின்றான்' தன்னை அறிமுகப்படுத்திய அவன், "எஜமானர்களே, நீங்கள் சிறுவர்களாக இருந்த போது இந்த வீட்டுக்குச் சொந்தமான நாற்பது பசுக்களைக் கவர்ந்து கொண்டு போய்விட்டேன். நான் வாழ்ந்த இடம் செட்டியாருக்கு நன்கு தெரிந்திருந்தும், அவர் என்னை எதுவும் செய்யாமல் விட்டுவிட்டார். அந்த நாற்பது பசுக்களும் இப்பொழுது நாலாயிரம் பசுக்களைக் கொண்ட பட்டியாகி விட்டது. உங்களுக்குச் சொந்தமான பசுக்களை உங்களிடமே ஒப்படைக்க வந்திருக்கிறேன்" என்று கூறி. அவர்களின் கால்களில் வீழ்ந்து வணங்கினான்.

(மன்னன் வருவான்...)

---

# காதில பூ கந்தசாமி

**நோட்டீஸ் பலகை**



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர வேறொன்று
மில்லை -காதில பூ கந்தசாமி-

வாசகர்கள் சிலபேர் என்னோட குறைப்படுகினம். நான் இப்ப கனநாளா பொலிடிக்ஸ் பொலிடிக்ஸ்ஸெண்டுதான் எழுதிக் கொண்டிருக்கிறனாம். ஒரு ஜோக்கக் கீக்க எழுதிறனில்லையாம்.

நான் சொன்னன், எங்கட பொலிடிக்ஸ்ஸெண்டாலே ஜோக்தானே? ஜோக்கத் தவிர அதில என்ன இருக்கு எண்டு?

அந்த ஜோக்குகள் கேக்கச் சகிக்கேல்லையாம். வேற ஏதும் ஜோக் விடட்டாம். அதோட நான் இப்ப நிறையப் பொய் சொல்ல வெளிக்கிட்டிட்டனாம்.

என்னப்பா நானறிய நிஜத்தத்தானே சொல்லிக்கொண்டு வாறனெண்டன். அதுதான் பொய்யாம். நான் சொல்வதெல்லாம் பொய், பொய்யைத் தவிர வேறொண்டுமில்லையெண்டிட்டு மெய்யச் சொல்ல வெளிக்கிட்டால் நான் பொய் சொல்லிறதாத்தானே அர்த்தமெண்டு மடக்கினம் சில புத்திசாலி வாசகர்கள். உவையளுக்காகத்தான் நான் ஆரம்பத்திலயே எழுதினனான் சிந்திக்கிற வேலையெல்லாம் விட்டிடுங்கோ, சொல்லுறத அப்பிடியே நம்பிக்கொண்டு கம்மெண்டிருங்கோவெண்டு. என்ர பிழைதான். நானும் பொய்யை மறந்து உண்மையைக் கக்கப்போய் அவையச் சும்மா இருக்காமல் சிந்திக்க வைச்சிட்டன்.

ஐ ஆம் வெரி சொறி. இந்த முறை பொலிடிக்சை கொஞ்சம் அடிலாச்சிக்க தள்ளிட்டு வேற எதையாவது பற்றிப் பேசுவம்.

சினிமாதான் சுவாரசியமான சமாச்சாரம். சரி ஒரு படந் தயாரிக்கிற முயற்சியில இறங்கினால் என்னவெண்டு யோசிக்கிறன். கிட்டடியில பாரதிராஜா இலங்கைக்கு வந்திருந்தார். அவரிட்டக் களவாடின சில ஐடியாக்களோட ஐ ஆம் ரெடி.

இப்ப பாருங்கோ, படத்துக்கு முதல் என்ன தேவை? கதையா? இல்லை இல்லை. கதை யாருக்குத் தேவை. ரெண்டு இங்கிலிஷ் படம் நாலு தமிழ்ப்படம் ஒரு ஹிந்திப் படத்தப் பாத்திட்டு சாம்பாறாக்கினால் கதை தானா வந்திட்டுப் போகுது. (அதுகளும் வேற எதுகளின்ரயோ சாம்பாறாயிருந்தால் இது சூப்பர் சாம்பாறாயிடும், கவலையை விடுங்கோ!)

நம்பேல்லையா, சரி, இந்தா, நானே அதையும் தாறன்.

ஒரு கிராமமே தண்ணிக்குள்ள மூழ்கிட்டுதெண்டு கதை சோடிச்சு அங்கத்த சனங்களை கொன்று கடலுக்க வீசிடுறான் ஒரு வில்லன். (- சிட்டிசன்).

அந்தக் கொடுமையில இருந்து தப்பின அண்ணன் தம்பிகள் ஒரு கொடுமைக்காரச் சித்தியிட்ட வளரிறப்போ, சித்தியைக் கொண்டுபோட்டு சித்தப் பிரமையோட சிறைக்குப்போய் தப்பி வந்து பொம்பிளையளையெல்லாம் கொண்டு தள்ளுறனெண்டு அலையோ அலையெண்டு அலையிறான் அண்ணன்காரன். (ஆளவந்தான் வாடை அடிக்கேல்லை...?)

தம்பி சமயல் காரனாயிருக்கிறதால அவனை மணவறையிலயே கைவிட்டிட்டு மணப்பெண் ஓடிப்போக, அவன் நகரத்துக்குப் போய் பணக்காரப் பொண்ணின்ர நட்ப காதலா நம்பி ஜொள்ளு வடிச்சு, பிறகு அவளுக்கு புருஷனா வரப்போறவனுக்கு வில்லன் பட்டம் கட்டிட்டு அவளக் கலியாணம் கட்டிறதுக்கு டைரக்டர் சார் என்ன வழி பண்ணப் போறாரெண்டு யோசிச்சுக்கொண்டிருக்கிறான். (இன்னுமா புரியேல்லை, இது யூத் ட்ச்.)

சரி கதை கப்ஸா பண்ணியாச்சு, எப்பிடி முடிவை ஜொயின்ட் பண்ணிறனெண்டதயும் பாருங்க.

சிறையில இருந்து தப்பிப்போன அண்ணன் மொட்டையடிச்சுக்கொண்டு, "கடவுள் பாதி மனிதன் பாதி கலந்து செய்த பிறவி நான், மிருகம் கொன்று, மிருகம் கொன்று, கடவுள் செய்யப் பார்க்கின்றேன், கடவுள் கொன்று கடவுள் கொன்று மிருகம் மட்டும் வளர்கிறதே...!" எண்டு பாடிக்கொண்டு, பொண்ணெண்ட மாயப் பிசாசிடமிருந்து தம்பியை மீட்கிறதுக்காக தம்பியின்ர காதலியைக் கொல்லத் துரத்திறான்.

இறுதிக் கட்டத்தில உண்மைத் தாய் கனவில, சொறி, கற்பனையில வந்து, அவள் வில்லியில்லை, எங்கட கிராமத்தை அழிச்சு தண்ணிக்குள்ள என்னோட சேர்த்து எல்லோரையும் மூழ் கடிச்சவங்கதான் வில்லங்கள் எண்டு புரிய வைக்க, அண்ணனும் தம்பியுமாச் சேந்து வில்லன்களைத் தேடுறாங்க.

இந்தக் கட்டத்தில தம்பியை மணவறையில கைவிட்டிட்டு ஓடிப்போனவ திரும்பி வந்து தன்னைக் காதலிக்கிறதாச் சொல்லி ஏமாத்தினவன்தான் அந்த வில்லன் எண்டும், தான் அவனிட்டக் கதை சொல்லக் கேட்டபோது குடிபோதையில இருந்த அவன் தான் கிராமத்தை அழிச்ச கதைய உளறிட்டானெண்டும், இதுபோல இன்னும் பத்துக் கிராமங்கள அழிக்கத் திட்டம் தீட்டி வைச்சிருக்கிறானெண்டும், திடுக்கிடும் தகவல்களைச் சொல்லுறாள். (கைவிட்ட காதலி தவற உணர்ந்த சென்ரிமென்ரோட தொடங்கி பிளாஷ்பேக்கில கிராமத்த அழிச்ச கொடூரக் கதை ஓடுது...)

தன்ர காதலிக்கு பேசியிருந்த மாப்பிள்ளைதான் அந்த வில்லனெண்டத தம்பிக்காறன் கண்டுபிடிக்க, அண்ணன் அவனைக் கொல்லப் போக, தம்பி குறுக்கிட்டு, வில்லன்களக் கொல்லுறது பழைய ஸ்டைல், கடத்திக் கொண்டு போய் மறைச்சு வைச்சுக்கொண்டு நீதிமன்றத்தை அவங்களுக்கெதிராத் தீர்ப்பெழுதச் சொல்லி மிரட்டுறதுதான் இப்பத்தப் படங்களின்ர ட்ரெண்டெண்டு வாதாட, அண்ணன் குழம்ப, தாய் கற்பனையால குதிச்சு, "இந்தப் பூமி சரியில்லை நீ எங்கிட்ட வா" எண்டு அழைக்க அவன் அங்க அடுக்கி வைச்சிருக்கிற கேஸ் சிலிண்டர்கள கடப்பாரையால அடிச்சு தீயில எரிஞ்சு செத்துப்போறான்.

பிறகென்ன, தம்பி வில்லனைத் தாராளமாக் கடத்தி வைச்சுக்கொண்டு நீதிமன்றத்தப் பிடிச்ச பிடியில இருத்தி வைச்சு அவனுக்கு சட்டத்திலயே இல்லாத தண்டனைகளையெல்லாம் வாங்கிக் குடுத்துப்போட்டு உங்களின்ர விசில் கரகோஷங்களோட வெற்றி வீரனா காதலியக் கலியாணம் கட்டிக்கொண்டு டூயட் பாடுறார்.

இப்படிக்கொத்த கற்பனை வறண்டுபோன வாசகர்கள் இந்த மாதிரி நாலைஞ்சு படங்கள களவாடி நல்லதொரு கதையெழுதி அனுப்பினால் அதைக் களவாடி என்ர கதையெண்ட பேரில காதிலபூ கந்தசாமிப் பகுதியில பிரசுரிப்பேனெண்டு உறுதி கூறி விடை பெறுகிறேன். நன்றி!

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

---

# இந்தவாரம் உங்கள் பலன்

**01.09.2002 தொடங்கி 07.09.2002வரை**

**சோதிட மாமணி தில்லை**

## கிரக நிலை

சிங்கம் - சூரியன், செவ்வாய் கன்னி-புதன் துலாம்- வெள்ளி, விருட்சிகம்-கேது. இடபம்- இராகு. மிதுனம் - சனி. கர்க்கடகம்-வியாழன்.

சந்திரன் மிதுனம், கர்க்கடகம், சிங்கம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) எடுத்த கருமங்களில் வெற்றியுண்டாகும். தேகாரோக்கியம் சிறிது பாதிப்புறும். பெரியோர்களின் உதவியுண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிலர் பதவி உயர்வு பெறுவர். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனம் எடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

### இடபம்

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) பெரியோர் உதவியுடன் கருமங்கள் நிறைவுறும். தொழிலில் இருந்து வந்த கஷ்டங்கள் நீங்கும். பணவரவு சுமாராக அமையும். உத்தியோகத்தில் உள்ள சங்கடங்கள் தீரும். மாணவர்கள் கல்வியில் நன்னிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல: 7.

### மிதுனம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) தொழிலில் உயர்வு, கௌரவம், பணவரவு என்பவைகளுக்கு இடமுண்டு. உத்தியோக நிலையில் முன்னேற்றமுண்டாகும். மாணவர்கள் எதிர்நோக்கிய கல்விப் பிரச்சனைகள் தீரும். விவசாயிகள், வியாபாரிகள் எதிலும் கவனமுடன் செயற்படுவது நன்மை தரும்.
அதிஸ்ட நாள்: திங்கள்,
அதிஸ்ட இல.: 4.

### கர்க்கடகம்

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) புதிய முயற்சிகளில் கவனம் தேவை. அன்னியர் உதவியுண்டு. வெளியிடப் பயணங்களால் தொல்லைகள் சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுக்கவும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல: 3.

### சிங்கம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) செய் தொழிலில் முன்னேற்றம். பணவரவு. பெரியோர் நன்மையுண்டு. உத்தியோக நிலையில் கூடிய கவனமெடுப்பது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் ஏற்பட்டிருந்த கஷ்டங்கள் தீரும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 2.

### கன்னி

(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) செய் தொழிலிலும், புதிய முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டாகும். உத்தியோகத்தில் திடீர் பதவி உயர்வுகளைச் சிலர் பெறுவர். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 1.

### துலாம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) தொழிலில் அவதானம் தேவை. புதிய முயற்சிகளில் கவனமெடுப்பது நல்லது. பணவரவு, தேகாரோக்கியம் சிறிது பாதிக்கப்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் எதையும் கவனமுடன் செய்வது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் மந்தநிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 7.

### விருட்சிகம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழிலில் உயர்ச்சியும், பணவரவும் உண்டாகும். எதிர் பார்த்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தர்கள் தடைப்பட்ட பதவி உயர்வுகளைப் பெறுவர். மாணவர்களுக்குக் கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

### தனு

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழிலில் மந்தமும், பணவரவு தடையும் உண்டு. காரியங்களின் மறைமுக எதிர்ப்புத் தோன்றும். உத்தியோகத்தில் மனக் கசப்புக்கள் உருவாகும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நன்மை தரும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 6.

### மகரம்

உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழிலிலும், பணவரவிலும் சிறிது பாதிப்புண்டாகும். பெரியோர்கள் உதவுவர். உத்தியோக ரீதியாக முன்னேற்றம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் கூடிய முயற்சி எடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பிற்கு ஆளாகுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 3.

### கும்பம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழிலில் முன்னேற்றம். பெரியோர் உதவி, கௌரவம் உண்டாகும். உத்தியோகத்தர்கள் சில பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை உருவாகும். மாணவர்களுக்குக் கல்வியில் மந்த நிலை நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 2.

### மீனம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழிலிலும், பண வரவிலும் சில தடைகள் உண்டாகும். வார இறுதியில் தேக நிலை சிலருக்குப் பாதிப்புறும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் விழிப்புடன் நடந்து கொள்ளவும். மாணவர்களுக்குக் கல்விச் சிறப்புண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 4.





# புதினம்








உலகில் உள்ள மிகச் சிறிய குர்ஆன் பிரதிகள் இவைதான். இந்தியாவின் கல்கத்தா நகரில் வசிக்கும் குலாம் பாரீத் என்பவர் இவற்றைச் சேமித்து வைத்திருக்கிறார். சிறுவயது முதலே சிறிய பொருட்களைச் சேகரிக்கும் பழக்கம் கொண்ட இவர் பல நாடுகளில் இருந்து இத்தகைய 35 குர்ஆன் பிரதிகளைச் சேகரித்துப் பாதுகாத்து வருகிறார். 74 வயதான குலாம் சமீபத்தில நடந்த பத்திரிகையாளர் மாநாடொன்றில் தன்வசமுள்ள குர்ஆன் பிரதிகளை மக்கள் பார்வைக்காகச் சமர்ப்பித்தார்.

பட உதவி: கே.எஸ்.அப்துல் ரசூல்-நிந்தவூர்.

கார்களை அடுக்கிக் கட்டடம் அமைத்திருந்ததை முரசில் பார்த்த ஞாபகம் இருக்கும். இதுவும் அதே பாணியிலான ஒரு கட்டடம் தான்.



## நினைவுச் சின்னம்

லெபனானில் 15 ஆண்டுகாலமாக இடம்பெற்ற சிவில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதைக் குறிக்கும் முகமாகத் தலைநகர் பெய்ரூட்டில் அமைக்கப்பட்டிருக்கும் நினைவுச் சின்னம்தான் இது. யுத்தத்தின்போது கைவிடப்பட்ட கவச வாகனங்களைக் கொண்டு பிரான்ஸ் நாட்டுக் கலைஞர் ஒருவர் இந்த நினைவுத் தூபியை வடிவமைத்தார். கவச வாகனங்கள் நிரந்தரமாகச் சமாதியாக்கப்பட்டிருக்கும் இந்த சமாதான தூபிக்கு முன்பாகப் படைவீரர் ஒருவர் மலர்ச்செண்டுகளுடன் செல்கிறார்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



திருகோணமலையைச் சேர்ந்த வாசுதேவன் சுதாமா தம்பதிகளின் செல்வப் புதல்வன் தனுராஜ் தனது முதலாவது பிறந்த நாளை 29.08.2002 ல் லண்டனிலுள்ள Mitcham என்னும் இடத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரது அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா (இலங்கை), அம்மப்பா (பொலிஸ் உத்தியோகத்தர்), அம்மம்மா (இலங்கை), விஜி மாமா, ரமா அத்தை, வினோஜா மச்சாள் (பிரான்ஸ்), ரகு மாமா, ரவி அத்தை, கிஷாந்

**செல்வன் வாசுதேவன் தனுராஜ் 29.08.2002**

அத்தான், கிருஷிகா மச்சாள் (ஜேர்மனி), பாபு சித்தா (லண்டன்), சுபா சித்தா (லண்டன்), குமரன் மாமா (பேராதனை பல்கலைக்கழகம் இலங்கை) மற்றும் உற்றார், உறவினர்கள், சுற்றத்தார்கள் அனைவரும் இவரை பல்கலையும் கற்று சீருடனும் சிறப்புடனும் பல்லாண்டுகாலம் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகிறார்கள்.

தகவல் சி.சிவராசா அப்பப்பா-திருகோணமலை

## 1வது பிறந்தநாள் வாழ்த்து




**செல்வன் பிரகாஷ் (ஹரி) 21.08.2002**

புங்குடுதீவு 8 ம் வட்டாரத்தைச் சேர்ந்த தேவராசா-கல்பனா தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரகாஷ் (ஹரி) தனது முதலாவது பிறந்த தினத்தை 21.08.2002 அன்று ஜேர்மனியிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, இலங்கையில் இருக்கும் தாத்தா, அம்மம்மா, அப்பப்பா, பூட்டன், பூட்டி, ஜேர்மனியில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, இலங்கையில் இருக்கும் சித்தப்பா, சித்தி, ஜெயா சித்தி, கனடாவில் தாத்தா குடும்பத்தினர், மாமா, மாமி, மச்சாள்மார், மச்சான்மார், மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல பெரிய தம்பிரான் அருளோடு பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல் பொ.நாகலிங்கம் (தாத்தா)

## நன்கொடை



இந்தப் படத்தில் இருக்கும் வெள்ளைக்காரப் பாட்டனாருக்குப் பெயர் டெட் டியுனர். அமெரிக்கரான இவர் உலகின் மிகப் பெரிய தொடர்பூடக வலையமைப்புக்களில் ஒன்றான சீஎன்என், டைம் சஞ்சிகை மற்றும் திரைப்படத் தயாரிப்பு நிறுவனமான 'வோனபிரதர்ஸ்' என்பவற்றின் ஸ்தாபகர். இந்த நிறுவனங்களினால் வந்து குவிந்த கோடிக் கணக்கான பணத்தை நல்ல காரியங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்று கருதிய இவர் 1997ம் ஆண்டு தனது சொந்தப் பணத்திலிருந்து ஒரு பில்லியன் டொலரை (900 கோடி ரூபா) ஐ.நா.சபைக்கு வழங்கினார். இந்தப் பணம் அகதிகள், சிறுவர்கள், மற்றும் சூழல் பாதுகாப்பு போன்ற நற்காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. ஒரு தனி நபரினால் ஐ.நா. சபைக்கு வழங்கப்பட்ட மிகப் பெரிய நன்கொடை இதுவாகும்.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

திருகோணமலையைச் சேர்ந்த ரகுராம் கமலனி தம்பதிகளின் செல்வப் புதல்வி கிருஷிகா தனது முதலாவது பிறந்தநாளை 30.08.2002 ல் ஜேர்மனியில் நொயீஸ் என்னும் இடத்திலுள்ள தனது இல்லத்தில் ஆசை அண்ணா கிஷாந்துடன் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.



இவரது அன்பு அப்பா, அம்மா, அண்ணன் கிஷாந், அம்மப்பா, அம்மம்மா (இலங்கை), அப்பம்மா (பிரான்ஸ்), வாசு மாமா, சுதா அத்தை, தனுராஜ் மச்சான் (லண்டன்), விஜி பெரியப்பா, ரமா பெரியம்மா, தங்கை வினோஜா (பிரான்ஸ்), பாபு மாமா (லண்டன்), சுபா மாமா (லண்டன்), ஆனந்தன்

**செல்வி ரகுராம் கிருஷிகா 30.08.2002**

மாமா, ராணி அத்தை (இலங்கை), குமார் மாமா, ராசாத்தி அத்தை (பிரான்ஸ்), அசோக் பெரியப்பா, கேதிஸ் பெரியம்மா (பிரான்ஸ்), பவனா மாமா, வளர்மதி அத்தை (பிரான்ஸ்), குட்டிச் சித்தா (ஜேர்மனி), சின்னான் சித்தா (லண்டன்), ராம் சித்தா, கோகிலா சித்தி (பிரான்ஸ்), கரன் மாமா, மாமி, ஜீவன் மாமா (ஜேர்மன்), மச்சான்மார், மச்சாள்மார், அண்ணன்மார், அக்காமார், தம்பிமார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இவரை பல்கலையும் கற்று சீருடனும் சிறப்புடனும் பல்லாண்டுகாலம் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகிறார்கள்.

தகவல் எஸ்.சிவராசா அம்மப்பா-திருகோணமலை.